Vol.6, Issue 4 | Annual Subscription ₹480

@NewsRotary

/RotaryNewsIndia

செப்டம்பர் 2023

# ரோட்டரி நியூஸ்


இந்தியா

www.rotarynewsonline.org



Rotary

ADVT.



CREATE HOPE in the WORLD



Rotary

# Yadhumanaval

A Project by Rotary Club of Virudhunagar Dist-3212



Jayanthasri Balakrishnan

" SHE PAVES A PATH FOR GIRL CHILDREN TO BECOME STRONGER VERSIONS OF THEMSELVES THROUGH HER MESMERIZING TALK. "

## She is Everything

As the main speaker of this program, Dr. Jayanthasri Balakrishnan has touched the lives of more than 76,000 young minds through 55 sessions. She is determined to reach out and inspire many others to be the stronger versions of themselves, and to help all young girls realise their potential and understand that they can do anything they put their mind to. Girl students of various institutions are at the heart of the Yadhumanaval program - which aims to empower them across all areas. Notably, Project Yadhumanaval was featured as a cover story in the renowned Rotary News (April, 2023 edition)

Stronger Women build Stronger Nations.

-Zainab Salbi

As on June, 2023
No. of Occurrences
**55**
No. of Beneficiaries
**76350**

Do you wish to organize Yadhumanaval for the girl students of a school in your town/city/district? We are waiting to partner with you.

**IDHAYAM**
PROMISE OF HEALTH AND HAPPINESS

Get in touch
Yadhumanaval Project Chairman
Vijayakumari D. Rtn DVK
94887 66388

LEKHA ads/Sep 23/ Rotary-1

# உள்ளே


12
முன்மாதிரி அரசுப் பள்ளியை உருவாக்கிய RC நீலகிரிஸ்

22
உகாண்டாவில் அகதி குழந்தைகளுக்கான மனநல ஆரோக்கிய அமர்வுகள்

24
RC பிலாஸ்பூர் பெண் கைதிகளை மகிழ்விக்கிறது

30
பரோபகாரத்தில் ஒரு பயணம்

32
தபால்தலைகளை சேகரிக்கும் மும்பை ரோட்டேரியன்

36
நடமாடும் மார்பக புற்றுநோய் கண்டறியும் மையம்

38
PRIP பானர்ஜியின் ரோட்டரி அருங்காட்சியகம்

42
பெரிய கனவுகளைக் கொண்டுள்ள மும்பை ரோட்ராக்ட் சங்கம்

48
மனநோய்க்கு சிகிச்சை அளிக்கும் நவீன சாதனம்!

52
சென்னை அன்னெட்ஸ் எவரெஸ்ட் தள முகாமின் உச்சியை அடைந்தனர்

54
கரும்பு விவசாயிகளுக்கு வீட்டுப் பயன்பாட்டு பொருட்கள்

64
இயற்கையிடமிருந்து ஒலிக்கும் எச்சரிக்கை மணி

70
கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை எதிர்த்துப் போராட $2 மில்லியன் மானியம்

76
ஆரோக்யம்: உங்கள் முதல் அடிப்படை உரிமை




## மிகச் சிறந்த கட்டுரைகள்; மகிழ்ச்சியான வாசிப்பு

*நான் 35 ஆண்டுகளாக ரோட்டரியில் சேவையாற்றி வருகிறேன். நீங்கள் ரோட்டரி நியூஸ் ஆசிரியராகப் பொறுப்பேற்றபின், அதைப் படிக்கும் மகிழ்ச்சி இருமடங்காகிவிட்டது என்று நான் சொல்வேன். இந்த இதழின் தரத்தில் எதிர்பாராத முன்னேற்றம் காணப்படுகிறது. நான் ஹிந்தி பேசும் பகுதியைச் சேர்ந்தவன். அதனால், ரோட்டரி சமாச்சார் இதழைப் படிப்பது எனக்கு மேலும் பிடிக்கும். இதற்குமுன், ஹிந்தியில் சில சொற்களின் தேர்ந்தெடுப்பு நன்றாக இல்லை. ஆனால், இப்போதெல்லாம் ஹிந்திப் பதிப்பில் மிகுந்த முன்னேற்றம் காணப்படுகிறது.*

*இந்த இதழ் ரோட்டரியின் பல அம்சங்களை நன்கு பேசுகிறது, ஊக்கம் தரும், ஆர்வத்தைத் தூண்டும் கட்டுரைகளைக் கொண்டுள்ளது. உங்களுடைய இதழினால், மற்ற சங்கங்கள் செய்யும் நல்ல சேவைப் பணியைப்பற்றிப் படித்து நாங்கள் ஊக்கம் பெறுகிறோம், நிறையக் கற்றுக்கொள்கிறோம்.*

*டாக்டர் சுசீல் விசால் பொட்டர்*
RC *பட்னா சிட்டி சாம்ராட்* — D 3250




*அரசியல்வாதிகளை இணைத்துக் கொள்ள வேண்டாம் என்று சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் அவர்களுக்கு அறிவுறுத்தியிருப்பதும் வியப்பான செய்திகள்.*

*எவான்ஸ்டனில் நினைவில் நிற்கும் ஒரு நாள், பழங்குடியினப் பள்ளியில் ரோட்டரி அமைத்த நூலகம், ஜெய்ப்பூர் கை, கால்கள் வழியாக நம்பிக்கை அளித்தல், சிறு மாரத்தானில் வெற்றி, தானே-யில் ரோட்டரி அமைத்த மூங்கில் பேருந்து நிறுத்தம், இளைஞர்களுடைய எதிர்காலத்தை உறுதிப்படுத்த அவர்களுடன் உரையாடுங்கள் மற்றும் படிக்கும் மகிழ்ச்சியைப் பரிசளித்தல் போன்ற மற்ற கட்டுரைகள் அனைத்தும் சிறப்பாக அமைந்திருந்தன.*

*பின்னணிப் பாடகி, தென்னகத்துக் குயில்* P *சுசீலா அவர்களைப்பற்றி* S R *மது எழுதியிருந்த கட்டுரை அருமை. வண்ணமயமான புகைப்படங்கள், மொத்தத்தில் ஆகஸ்ட் இதழ் மிகச் சிறப்பானது.*

*ஃபிலிப் முலப்பொனெ* M T
RC *திருவனந்தபுரம் சப்அர்பன்* — D 3211

*ஆகஸ்ட் இதழின் அட்டைப் படத்தில் கிராமத்துச் சிறுமியின் வெள்ளந்தியான முகம், அவளுடைய பள்ளியில் நூலகம் திறக்கப்படுவதைக் கண்டு அவள் அடையும் மகிழ்ச்சி ஆகியவை மிகவும் சிறப்பாக அமைந்திருந்தன.*

RI *தலைவர் கார்டன் மெக்கினலி தன்னுடைய செய்தியில் மன நலன்பற்றி வலியுறுத்திப் பேசுகிறார். இந்த ஆண்டு நம் பகுதிகளில் ஏழு பெண்கள் மாவட்ட ஆளுநர்களாகப் பதவியேற்றிருப்பது மிகச் சிறந்த செய்தி. இந்தியாவின் பல பகுதிகளில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்துக்கான காரணங்களையும், வருங்காலத்தில் இதுபோன்ற பேரழிவுகளைத் தவிர்க்கும் வழிகளையும் ஆசிரியர் தன்னுடைய செய்தியில் சிறப்பாக விளக்கியுள்ளார். ரோட்டரியின் எதிர்காலத்துக்கு* TRF, *நன்கொடை நிறுவலின் முக்கியத்துவத்தை* TRF *அறங்காவலர் தலைவர் பாரி ரஸ்ஸின் நன்கு விளக்குகிறார்.*

*பெங்களூரில் ஒரு சங்கம் ரூ.*4 *கோடி செலவில்* 214 *அங்கன்வாடிகளைப் புதுப்பித்திருப்பதும், அங்கன்வாடிகளில் ரோட்டரியன்கள் சேவைப் பணியாற்றும்போது அதில்*

*ஆகஸ்ட் இதழில் தகவல்கள் நிறைந்த கட்டுரைகள் நிரம்பியிருந்தன. பல துறைகளில் உயர் கல்வி, தொழில்முறைக் கல்வி வாய்ப்புகளைப் பற்றிய விளம்பரம் ஆர்வத்தைத் தூண்டியது. இனி வரும் இதழ்களில் இதுபோன்ற தகவல்களைக் கூடுதலாகக் கொடுத்தால் இளம் மாணவர்கள் பலன் பெறுவார்கள்.*

*ஹிடென் போப்பட்,* RC *கல்கத்தா ஸ்பெக்ட்ரம்* — D 3291

*ரோட்டரி நியூஸ் நீங்கள் வழங்கும் தகவல்கள் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கின்றன. மாதந்தோறும் உங்கள் இதழைக் காத்திருந்து படிக்கிற வாசகர்களில் நானும் ஒருவன். இதன்மூலம், நீங்கள் விளக்கும் ரோட்டரியின் வெவ்வேறு அம்சங்களைப் புரிந்துகொள்கிறேன், நம் சங்கங்களின் தனித்துவமான திட்டங்களைப்பற்றித் தெரிந்துகொள்கிறேன். ஆனால், சென்ற மாதம், உறுப்பினர்களைப்பற்றிய தகவல்கள் இடம்பெறவில்லை.*

Dr *ரவிகிரண்,* RC *கார்கர் மிட்-டவுன்* — D 3131

RID 3212, IPDG V R முத்து அவர்களின் ப்ரோஜக்ட் பஞ்ச் மிக அருமையான ஒரு திட்டம். அவர் எங்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் என்பது எங்களுக்கு பெறுமையாக உள்ளது. அவரின் மற்றத் திட்டங்களான யாதுமானவள், கலாம் மற்றும் விஞ்ஞான ரதம் இளைஞர்களுக்கு ஒரு வரப்ரசாதமாக அமையும்.

RC கல்கத்தா மகாநகர், RID 3291, உறுப்பினரான நரேஷ் குமார் ஜலன், ‘‘மனமிருந்தால் மார்க்கமுண்டு’’ என்பதையும், ‘‘முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்’’ என்பதையும் ஐயத்துக்கு இடமின்றி நிரூபித்துள்ளார். ரோட்டரி நியூஸ் வழியாக நரேஷ் குமாருடைய சாதனையை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்திருக்கும் PRIP சேகர் மேத்தா அவர்களுக்கு நன்றி.

V R T துரைராஜா
RC திருச்சிராப்பள்ளி — D 3000

### ஒரு புதிய தொடக்கம்

‘‘புதிய தொடக்கங்களை வரவேற்போம்’’ என்கிற ஆசிரியர்

குறிப்பு (ஜூலை இதழ்) புதிய ரோட்டரி ஆண்டை ஒரு மிகச் சிறந்த கட்டுரையின் மூலம் வரவேற்றுள்ளது. நல்ல தொடக்கம் பாதி வெற்றிக்குச் சமம் என்பார்கள். ரோட்டரியன்கள் ரோட்டரியின் புதிய ஆண்டை "உலகில் நம்பிக்கையை உருவாக்குவதற்கான" செயல்திறன் மிக்க நடவடிக்கைகளுடன் தொடங்குகிறார்கள். சமூகத்திற்குச் சேவை புரியவேண்டும் என்று நம்மை ஊக்குவிப்பதற்கென RI தலைவர் மெக்கினல்லி இந்தக் கருப்பொருளை வழங்கியுள்ளார். நாங்கள் பூங்காவை அமைக்க விரும்பவில்லை, ஒரு முழுக் காட்டை அமைக்க விரும்புகிறோம் உள்பட அனைத்துக் கட்டுரைகளும் தகவல்கள் நிறைந்திருந்தன, ஆர்வமூட்டின. திட்டங்களைப்பற்றிய கட்டுரைகள் எனக்கு ஊக்கமளித்தன.

N S S ஹரிகோபால்
RC பெர்காம்பூர் — D 3262

புதிய தொடக்கங்களை வரவேற்போம் என்கிற ஆசிரியர் குறிப்பு மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. நாங்கள் பூங்காவை அமைக்க விரும்பவில்லை, ஒரு முழுக் காட்டை அமைக்க விரும்புகிறோம் என்ற அவருடைய கட்டுரையும் மிகச் சிறப்பானது.

மகாராஷ்டிரக் கிராமத்துக்குச் சுற்றுச்சூழலுக்கு இதமான அடுப்புகள் என்ற ஜெய்ஸ்ரீயின் கட்டுரை நன்றாக அமைந்திருந்தது.

டேனியல் சிட்டிலப்பிள்ளி
RC கலூர் — D 3201

## மகிழ்ச்சியான வாசிப்பு

ரோட்டராக்ட் நியூஸ் காலாண்டு இதழைப் பகிர்ந்துகொண்டதற்கு நன்றி. ஜூலை மாத மின்னிதழ் எனக்கு ஆர்வத்தைத் தூண்டியது, ரோட்டராக்டர்கள் ரோட்டரியன்களைப்போல் செயல்படுகிறார்கள் என்று அறிந்து கொண்டேன்.

அனில் லாடெ
RC பூனா டௌன்-டவுன் — D 3131

## மன நலப் பிரச்சனைகளில் கவனம்

RI தலைவர் மெக்கினல்லியின் ஜூலை மாதச் செய்தி ஊக்கமளித்தது. ரோட்டரியன்கள், பொதுமக்களுடைய நலனைப் பாதுகாப்பதற்கு அவர் மன நலத் திட்டங்களில் கவனம் செலுத்துகிறார். அமைதியைக் கட்டமைப்பது, குழுக்கூட்டங்களில் தொடங்கிச் சேவைத் திட்டங்கள்வரை "நாம் ஒன்றுசேர்ந்து செயல்படுகிறோம்" என்ற உணர்வை உருவாக்குவது, பெண்கள், சிறுமிகளுக்கு ஆற்றல் அளிப்பது ஆகியவை மெக்கினல்லியின் மற்ற முதன்மைப் பகுதிகள். பலவிதமான திட்டங்களை நடத்துவதன்மூலம் ரோட்டரி உலகில் நம்பிக்கையை உருவாக்கும் என்று அவர் நம்புவது மிகச் சரியானது.

ரோட்டரி சங்கங்கள் வெவ்வேறு வகைச் சேவைத் திட்டங்கள், நிகழ்ச்சிகளை நடத்தவேண்டும், அவற்றின் தாக்கத்தை விரிவாக்கவேண்டும். புதிய ரோட்டரி ஆண்டு இப்போது தான் தொடங்கியுள்ளது. சங்கத் தலைவர்கள் பல புதிய நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டியுள்ளது. அவர்கள் இந்தப் பணிகளைச் செய்யும்போது, தங்களுடைய சங்க உறுப்பினர்கள் எல்லாரையும் ஊக்குவிப்பார்கள். ஆசிரியர் ரஷீதா பகத் தன்னுடைய ஆசிரியர் குறிப்பில் சொல்வதுபோல், நம்முடைய புதிய சங்கத் தலைவர்கள் தங்களுடைய தலைமையின் ஒவ்வொரு கணத்தையும் முழுக்கப் பயன்படுத்திக்கொள்ளட்டும், ரோட்டரிக்குப் பெருமையைக் கொண்டுவரட்டும்.

R ஸ்ரீனிவாசன்
RC பெங்களூர் J P நகர் — D 3191

## மாற்றத்தைக் கொண்டுவரும் சாதனையாளர்கள்

"ரோட்டரியன்கள் மாற்றத்தைக் கொண்டுவரும் சாதனையாளர்கள்" என்று RIPE ஸ்டீஃபனி அர்ச்சிக் தெரிவித்திருப்பதன் பொருள், நாம் இன்னும் மேம்பட்ட உலகை உருவாக்குவதற்கு நம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோம். ரோட்டரியன்கள் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றுவதன் மூலம் தங்களுடைய தாக்கத்தைப் பெருக்கலாம், பொருளுள்ள பலன்களை எட்டலாம். ரோட்டரியன்கள் இணைந்து பணியாற்றவும், தங்களுடைய ஒட்டுமொத்த முயற்சிகளைப் பயன்படுத்தி அதிகபட்சத் தாக்கத்தைப் பெறவும் ஒரு நல்ல தளத்தை ரோட்டரி வழங்குகிறது.

அனில் ஜெயின்
RC அகமத்நகர் — D 3090

**அட்டையில்:** *கோத்தகிரி அருகேயுள்ள பெட்டட்டி கிராமத்தில் பஞ்சாயத்து நடுநிலை பள்ளி மாணவர்கள். இங்கு RC நீலகிரிஸ் ரூ.51 லட்சம் மதிப்பில் சேவைத் திட்டங்கள் செயல்படுத்தியுள்ளது.*

**புகைப்படம்:** ரஷீதா பகத்

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் www.rotarynewsonline.org என்னும் இணைய தளத்தில் Rotary News Plus என்னும் இதழில் காணலாம்.




# அமைதியைப் பின்பற்றுதல்

செப்டம்பர் 21 அன்று, பன்னாட்டு அமைதி நாள். 24 மணி நேரம் வன்முறையில்லாத, போர் நிறுத்தச் சூழலைப் பின்பற்றுவதன் வழியாக, அமைதி லட்சியத்தை வலுவாக்குவதற்கு, ஐநா பொது அவை இந்த நாளை அறிவித்தது. செயல் வீரர்களாகிய நாம், போர் செய்யாமல் இருந்தால்மட்டும் போதாது. நாம் உலகில் நம்பிக்கையை உருவாக்கவேண்டுமென்றால், நாம் தீவிரமாக அமைதியைப் பரப்பவேண்டும்.

நாம் இதை எங்கு தொடங்கலாம்? உலகெங்கும் பல இடங்களில் ஆயுதப் போர்கள் நடக்கின்றன. உலக அளவில் இடம் மாற்றப்படும் மக்களின் எண்ணிக்கை முன்பு எப்போதையும் விடக் கூடுதலாக உள்ளது. அதனால், வாய்ப்புகள் வரம்பற்றவை. ஆனால், வன்முறை மற்றும் துன்பத்தின் சுழல்களும் முடிவற்றவையாகத் தோன்றுகின்றன. என்னுடைய அறிவுரை, சிறிய அளவில் தொடங்குங்கள். ஆனால், பெரிய அளவில் சிந்தியுங்கள். நான் பாகிஸ்தான், இந்திய ரோட்டரி உறுப்பினர்களைக் கண்டு இதற்கு ஊக்கம் பெறுகிறேன்.

மார்ச் 2020ல், பாகிஸ்தானில் உள்ள, குரு நானக்கைப் பெருமைப்படுத்துகிற கர்த்தார்பூர் சாகிப் என்ற குருத்வாரா-வில் பாகிஸ்தானைச் சேர்ந்த 50 ரோட்டரி உறுப்பினர்கள் இந்தியாவைச் சேர்ந்த 50 ரோட்டரி உறுப்பினர்களைச் சந்தித்தார்கள். இந்த இரு நாடுகளுக்கிடையிலான முரணால், இந்தியப் புனிதப் பயணிகள் பலரும் இந்த ஆலயத்துக்கு வர இயலாமல் இருந்தது. 2019ல், பாகிஸ்தான் அவர்களுக்கென நுழைவு அனுமதிச் சீட்டு இல்லாத வழி ஒன்றைத் திறந்துவிட்டது. இந்த ஆண்டின் முற்பகுதியில், இரு நாடுகளையும் சேர்ந்த ரோட்டரி உறுப்பினர்கள் அதே கோயிலில் மீண்டும் சந்தித்தார்கள். இந்த முறை, பங்கேற்பாளர்கள் எண்ணிக்கை இரு மடங்காகியிருந்தது.

பாகிஸ்தான் அரசு இந்தியப் புனிதப் பயணிகளைக் கர்த்தார்பூர் சாகிப் ஆலயத்துக்கு அனுமதித்தபோது, அமைதிக்கான ஒரு முதன்மைப் படியை எடுத்து வைத்தது. ஆனால், பாகிஸ்தான் ரோட்டரி உறுப்பினர்கள் இந்தியாவைச் சேர்ந்த ரோட்டரி உறுப்பினர்களை நண்பர்களாக, உறவினர்களாக வரவேற்று அடுத்த படியை எடுத்துவைத்தார்கள். இதுதான் நேர்விதமான அமைதிப் பணி.

இந்த அமைதிப் பணியாளர்கள் அத்துடன் நிறுத்தி விடவில்லை. இந்த ஆண்டுக் கூட்டத்தின் போது, சங்கப் பிரதிநிதிகள் இரட்டைச் சங்க ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டார்கள், ஒருவரிடமிருந்து ஒருவர் தொடர்ந்து கற்பதற்கும், அமைதியைப் பரப்பும் பணிகளில் மேலும் இணைந்து பணியாற்றுவதற்கும் தொலைநோக்கு உறுதிமொழி சொல்லிக் கொண்டார்கள், அவர்கள் வீடியோ உரையாடல் வழியாக இணைந்து கூட்டங்களை நடத்தியுள்ளார்கள்.

இன்னொரு பண்பாட்டுடன் உரையாடுதல், அங்கிருந்து கற்றுக்கொள்ளுதல் மிகவும் முதன்மையானது. ரோட்டரி அதை இன்னும் எளிமையாக்குகிறது. மெய்நிகர் பரிமாற்றம் என்பது, இணையத் தளங்களைப் பயன்படுத்தி, உலகின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்களை இணைக்கிறது.

சமூகங்களுக்கிடையில் புதிய இணைப்புகளை ஊக்குவிக்கிற, கூடுதல் மதிப்பை உண்டாக்குகிற திறமை இந்த இணைய உரையாடல்களுக்கு உண்டு. அந்த அறிவை ஏற்றுக்கொண்டு, நம் சகமனிதர்களுடைய வாழ்க்கைகளை மேம்படுத்து வதற்கு அதைப் பயன்படுத்துவதுதான் அடுத்த படி. இது நம்மை எங்கு அழைத்துச்செல்லும் என்று பார்ப்போம்.

**கோர்டன் மெக்கினலி**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்.




# எனக்கு ஒரு கனவு இருக்கிறது

இந்த நேரத்தில் கனவுகளைப் பார்ப்போம். செப்டம்பர் மாதம் என்பது ரோட்டரியில் அடிப்படைக் கல்வி மற்றும் எழுத்தறிவு மாதமாகும். ஆனால், வருவது எழுத்தறிவு மாதம் என்பதால், நீலகிரி ரோட்டேரியன்கள் கற்பித்தலின் சொர்க்க பூமியாக மாற்றப்பட்ட பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப் பள்ளியைப் பார்வையிட குளிர்ச்சி மிகுந்து குன்னூருக்கு நான் செல்லவில்லை. சென்னையின் கொடூரமான வெயிலுக்கு இடையே ஓய்வெடுக்கும் போது எங்களுக்கு மெயிலில் வந்திருந்த ஒரு திட்டத்தை பார்க்க முடிவு செய்தேன். நீலகிரி மாவட்டம், பெட்டாட்டியில் உள்ள ஒரு பள்ளியை இந்த சங்கம் தத்தெடுத்துள்ளது. இடிந்து விழும் நிலையில் இருந்த கட்டடம், பூஞ்சை கள் நிறைந்த சமையலறை, கறைபடிந்து துர்நாற்றம் வீசும் கழிப்பறைகள் இன்று புதுப்பொலிவுடன், வர்ணம் பூசப்பட்டு பிரகாசமாக காட்சியளிப்பதைப் பார்த்தேன். பாழடைந்த பள்ளி எப்படி சீரமைக்கப்பட்டது என்று ரோட்டேரியன்கள் விளக்கினர்.

முன்னதாக பல வகுப்பறைகள் செயல்படாத நிலையில் இருந்ததால் மூன்று வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள், ஒரே அறையில் வெவ்வேறு வரிசையில் அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு ஒரே ஆசிரியர் கல்வி கற்பித்தார். செயல்படாத நிலையில் ஸ்மார்ட் போர்டு (டிஜிட்டல் கரும்பலகை). பழுதடைந்த நிலையில் சில கணினிகள் இருந்தன. நினைவில் கொள்ளுங்கள். நாங்கள் தமிழ்நாட்டிலுள்ள அரசு பள்ளியின் நிலையைப் பற்றித்தான் பேசுகிறோம். வடமாநிலங்களில் உள்ள பள்ளிகள் போல் அல்லாமல் இந்த அரசுப் பள்ளிகளுக்கு கற்றலுக்கான கருவிகள் அனைத்தும் இலவசமாகவே வழங்கப்பட்டுள்ளன. ரோட்டேரியன்களின் அர்ப்பணிப்பான சேவைகள் தெளிவாகவே தெரிகிறது. திட்டத் தலைவர் ஏர் கமாடோர் சஞ்சய் கன்னா (தனிப்பட்ட காரணங்களுக்காக அவர் தற்போது தாற்காலிகமாக ரோட்டரியிலிருந்து விலகியிருக்கிறார்) பள்ளி சீரமைக்கப்பட்ட மூன்று மாதங்கள் முழுவதும் பள்ளியிலேயே இருந்தார் என்று சொல்லலாம். இப்போது கணினி அறை, புதிய மற்றும் பழுது நீக்கப்பட்ட கணினிகளுடன் புதுப் பொலிவுடனும் அறிவியல் ஆய்வகம் மற்றும் நூலகம் வண்ணமயமாகவும் காட்சியளிக்கிறது.

பள்ளிகளில் மேம்படுத்தப்பட்ட வசதிகள் குழந்தைகளுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளன. இப்பகுதியில் வெலிங்டன் கன்டோன்மென்ட் இருப்பதால் — ஒரு பெண் குழந்தை ராணுவ மருத்துவராக பணிபுரிய விரும்புவதாகத் தெரிவித்தது. இரண்டாவது நபர் ஸ்பெல்லிங் பீ போட்டியில் இரண்டாவது இடத்தை பிடித்து, ஐ.ஏ.எஸ். அதிகாரியாக விரும்புவதாக தெரிவித்தார். மாணவர் ஒருவர் சிவில் என்ஜினீயராக வர விரும்புவதாகக் கூறினார். பெற்றோர்களும், மாணவர்களும் ஆங்கில ஆசிரியர் வேண்டும் என்று கேட்டனர். ரோட்டேரியன்கள் ஒரு ஆங்கில ஆசிரியரை பணிக்கு அமர்த்தி, அவருக்கு இரண்டு ஆண்டுகள் ஊதியம் வழங்க முன்வந்துள்ளனர். மாணவர்கள் இப்போது கணினியின் மாய உலகத்தை, செயல்பாடுகளை புரிந்துகொள்ள முற்பட்டுள்ளனர். ஆங்கிலத்தில் பேசத் தொடங்கியுள்ளனர். மேலும் நூலகங்கள் மூலம் வெளிஉலகத்தை தெரிந்துகொள்ள முன்வந்துள்ளனர். மலைப்பகுதியின் குளிர்ச்சியால் தரையில் அமர்ந்து மதிய உணவு சாப்பிட்டுவந்த மாணவர்கள் இப்போது தனி அறையில் நாற்காலியில் அமர்ந்து மேஜைகளில் தட்டு வைத்து மதிய உணவு சாப்பிடுகின்றனர். அவர்களது வகுப்பறைகளிலும் எழுதுவதற்கான மேஜையும், உட்காருவதற்கான பெஞ்சும் புதியதாக போடப்பட்டுள்ளது. அவர்கள் கண்ணியமுடன் கல்விகற்கும் வகையில் ரோட்டேரியன்கள் அவர்களின் கனவுகளை, அபிலாஷைகளை நிறைவேற்றியுள்ளனர். அரசு ஹிந்தி திணிப்பை எதிர்த்து போராடி வரும் நிலையில், மாணவர்கள் விருப்பத்துடன் ஹிந்தி கற்று வருகின்றனர்.

யாருக்குத் தெரியும். பிரகாசமான கண்களை உடைய லிகிஷா, நாளை ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியாக உருவாகி, உ.பி.யில் ஒரு சிறிய நகரத்தில் துணை ஆட்சியராக நியமிக்கப்படலாம். ஹிந்தி அவருக்குத் தெரிந்திருந்தால் வேலை எளிது. ராணுவத்தில் மருத்துவராக விரும்பும் யாழினி இந்தியாவில் எந்த இடத்தில் வேண்டுமானாலும் பணியமர்த்தப்படலாம். பல மொழிகள் கற்பது நல்லதுதான். நாட்டில் பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் இருந்தாலும் ஏழைக் குழந்தைக்கு கனவையும், கனவை நனவாக்குவதற்கான வாய்ப்பையும் கொடுப்பது கடவுளின் செயல் என்று சொன்னால் மிகையாகாது.



ரஷீதா பகத்

# நெஞ்சைத் தொடும் நிகழ்விடம்



சிங்கப்பூரில் 2024 ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாட்டின் ஒரு பகுதி நடைபெறவிருக்கும் மிகப் பெரிய கட்டடம் இந்தப் பன்னாட்டுக் கூடுகைக்கான மிகச் சிறந்த இடங்களில் ஒன்றாகக் கருதப்படப்போவது உறுதி.

முதலில், இந்தக் கட்டடத்தின் தோற்றத்தைப் பாருங்கள்: மரீனா பே சான்ட்ஸின் கூரை அடுக்கு ஒரு நீண்ட படகைப் போல் தோன்றுகிறது, 57 மாடிகளைக் கொண்ட மூன்று விடுதிக் கோபுரங்களை இணைக்கிறது.

இதன் மிகச் சிறந்த ஈர்ப்புகளைப் பார்ப்பதே விடுமுறை நாள் உணர்வை உண்டாக்கும், கூரை அடுக்கில் உள்ள SkyParkக்குச் சென்று வானத்தையும் விரிகுடாவையும் பாருங்கள், Dior, Versace உள்ளிட்ட குழந்தைகளுக்கான ஆடைக்கடைகள், பெரிய பிராண்டுகள் நிறைந்த பொருள் வாங்கும் வளாகத்தைச் சுற்றி வாருங்கள், புகழ் பெற்ற சமையல் கலைஞர்கள் சமைக்கும் பல உணவகங்களில் (இவற்றில் இரண்டு மிஷெலின் நட்சத்திரங்களைப் பெற்றவை: வுல்ஃப்காங்க் பக் அவர்களின் Cut steakhouse (ஒரு நட்சத்திரம்), ஜப்பானிய நல்லுணவெள ஃபிரெஞ்சு மற்றும் இத்தாலிய அம்சங்களுடன் வழங்கும் டெட்சுயா வகுடா அவர்களின் வாகு கின் (இரண்டு நட்சத்திரம்)) நினைவில் நிற்கும் உணவை உண்ணுங்கள், வெளியிலுள்ள ஒரு மிகப் பெரிய, ஒளி ஊடுருவுகிற கிண்ணத்தில் திரட்டப்பட்ட மழை நீர் ஓடுகிற உள் கால்வாயில் படகுப் பயணம் செய்யுங்கள், இந்தக் கிண்ணத்தின் துளை வழியாக நீரானது குளத்துக்குள் அருவியாக விழுவதைப் பாருங்கள்.

ஒவ்வோர் இரவும் ஸ்பெக்ட்ரா என்ற இலவச ஒளி, நீரூற்று நிகழ்ச்சி, இன்னும் பல நேரடி நிகழ்ச்சிகள், கலை மற்றும் அறிவியல் அருங்காட்சியகம், மூன்று மாடிச் சுழல் சறுக்குமரத்தைக் கொண்ட இரவுச் சங்கம் ஆகியவையும் இங்கு உண்டு… மற்றவற்றை, மே 25 முதல் 29 வரை உலகுடன் நம்பிக்கையைப் பகிர்ந்துகொள்ளத் தொடங்குவதற்கு நீங்கள் இங்கு வரும்போது கண்டறியுங்கள்.

**மேலும் தெரிந்துகொள்ள பதிவு செய்ய:**
convention.rotary.org



**ஆளுநர் குழு**

2981 செங்குட்டுவன் G
2982 ராகவன் S
3000 ஆனந்த ஜோதி R
3011 ஜீதேந்தர் குப்தா
3012 ப்ரியதோஷ் குப்தா
3020 சுப்பாராவ் ராவுரி
3030 ஆஷா வேணுகோபால்
3040 ரீத்து க்ரோவர்
3053 பவன் கண்டேல்வால்
3055 மேஹுல் ரத்தோட்
3056 நிர்மல் ஜெயின் குனாவத்
3060 நிஹிர் தாவே
3070 விப்பன் பாசின்
3080 அருண் குமார் மோங்கியா
3090 கன்ஷியாம் கன்சல்
3100 அஷோக்குமார் குப்தா
3120 சுனில் பன்சல்
3131 மஞ்சு ஃபாட்கே
3132 ஸ்வாதி ஹெர்கல்
3141 அருண் பார்கவா
3142 மிலிந்த் குல்கர்னி
3150 சங்கர் ரெட்டி
3160 மணிக் பவார்
3170 நாசிர் போசத்வாலா
3181 கேஷவ் H R
3182 கீதா B C
3191 உதயகுமார் பார்கவா
3192 ஸ்ரீனிவாச மூர்த்தி V
3201 விஜய்குமார் T R
3203 Dr S சுந்தர்ராஜன்
3204 Dr சேது ஷிவ்ஷங்கர்
3211 Dr G சுமித்ரன்
3212 முத்தையா பிள்ளை R
3231 பரணிதரன் P
3232 ரவி ராமன்
3240 நிலேஷ் குமார் அகர்வால்
3250 பகாரியா S P
3261 மஞ்சித் சிங் அரோரா
3262 ஜெயஸ்ரீ மோஹன்டி
3291 ஹுராலால் யாதவ்

அச்சு மற்றும் பதிப்பாளர் **P T பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது.
ஆசிரியர்: **ரஷீதா பகத்.**

ரோட்டரி மாத இதழில், பங்களிப்பாளர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் ஆசிரியர் அல்லது ரோட்டரி நியூஸ் டிரஸ்டின் (RNT) அறங்காவலர்கள், RI ஆகியோரின் கருத்துக்கள் அல்ல. தலையங்கம்/விளம்பரத்தில் வெளியிடப்படும் கருத்துக்களினால் ஏற்படும் இழப்புகளுக்கு எந்த பொறுப்பும் ஏற்க முடியாது. கட்டுரைகளை திருத்தவோ / சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

இணையதளம்

**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| அனிருதா ராய்சௌத்ரி<br>RI இயக்குனர் மற்றும்<br>RNT தலைவர் | RID 3291 |
| T N சுப்ரமணியன்<br>RI இயக்குனர் | RID 3141 |
| Dr பரத் பாண்ட்யா<br>TRF அறங்காவலர்<br>துணை தலைவர் | RID 3141 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மஹாஜன் | RID 3141 |
| P T பிரபாகர் | RID 3232 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| Dr மகேஷ் கோட்பாகி | RID 3131 |
| A S வெங்கடேஷ் | RID 3232 |
| குலாம் A வஹன்வதி | RID 3141 |

**செயற்குழு**
**உறுப்பினர்கள்** (2023–24)

| | |
|---|---|
| ஸ்வாதி ஹெர்கல்<br>தலைவர், ஆளுநர் குழு | RID 3132 |
| ஹீராலால் யாதவ்<br>செயலாளர், ஆளுநர் குழு | RID 3291 |
| முத்தையா பிள்ளை R<br>பொருளாளர், ஆளுநர் குழு | RID 3212 |
| மிலிந்த் குல்கர்னி<br>ஆலோசகர், ஆளுநர் குழு | RID 3142 |

**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும்**
**விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

**இதழ்**





# அடிப்படைக் கல்வி மற்றும் எழுத்தறிவின் முக்கிய பங்கு

செப்டம்பர் மாதம் உதயமாகும் தருவாயில், அடிப்படைக் கல்வி மற்றும் எழுத்தறிவு மாதத்தின் தொடக்கத்தை ரோட்டரி பெருமை யுடன் வரவேற்கிறது. அறிவை வளர்ப்பதற்கும், வளர்ச்சியை ஊக்கு விப்பதற்கும், கல்வியின் மூலம் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் நாம் செய்யும் அர்ப்பணிப்பின் கொண்டாட்டத்திற்கான காலம் இதுவாகும்.

கல்வியறிவை ஆதரிக்கும் சமூகங்களின் திறனை வலுப் படுத்துவதே நம் பணியின் மையமாக உள்ளது. கல்வி என்பது ஒரு சிறப்புரிமை அல்ல, தனிநபர்கள் தங்கள் விதியை வடிவமைக்க அதிகாரம் அளிக்கும் ஒரு அடிப்படை உரிமை என்று நான் உறுதியாக நம்புகிறேன். கூட்டு முயற்சிகள் மூலம், தடைகளை உடைத்து, கதவுகளைத் திறந்து, ஒவ்வொரு நபரும் தரமான கல்வியைப் பெறக் கூடிய உலகத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொள்வோம்.

கல்வியில் பாலின வேறு பாட்டைக் குறைப்பது இம்மாதத்தின் முக்கிய லட்சியங்களில் ஒன்றாகும். ஒவ்வொரு குழந்தையும் தங்கள் பாலினத்தைப் பொருட்படுத்தாமல் கற்றுக் கொள்ளவும், வளரவும் சமமான வாய்ப்பைப் பெற வேண்டும்.


ஆனால் நண்பர்களே, நம் அர்ப்பணிப்பு குழந்தைகளுடன் முடிந்துவிடக்கூடாது. உலகம் முழுவதும், 15 வயதுக்கு மேற்பட்ட 77.5 கோடிக்கும் அதிகமான மக்கள் படிப்பறிவில்லாதவர்கள். இது உங்களுக்கு தெரியுமா? இது உலகின் மொத்த மக்கள் தொகையில் 17 சதவீதம் ஆகும். இந்தத் தரவு, வாழ்நாள் முழுவதும் கற்றலின் முக்கியத்துவத்தை நமக்கு அடையாளம் காண்பித்து நமது கவனத்தை அதன் மேல் மாற்ற நம்மைத் தூண்டுகிறது. படிக்கும் மற்றும் எழுதும் திறன்களை கொண்டு பெரியவர்களை மேம்படுத்துவது அவர்களின் தனிப்பட்ட வளர்ச்சியை மேம்படுத்து வதோடு மட்டுமல்லாமல், நமது சமூகத்தின் கட்டமைப்பையும் பலப்படுத்துகிறது. கல்வியறிவு பெற்ற சமுதாயம் என்பது முன்னேற்றத்திற்குத் தயாராக இருக்கும் சமுதாயம்.

இந்த செப்டம்பரில், ஒவ்வொரு குழந்தைக்கும் கற்றுக்கொள்ள வாய்ப்புள்ள, ஒவ்வொரு பெரியவரும் வளர வாய்ப்புள்ள மற்றும் ஒவ்வொரு சமூகமும் செழித்து வளர வாய்ப்புள்ள ஒரு உலகத்தை நோக்கி செல்வதில் நாம் ஒற்றுமையாக நிற்போம். பிரகாசமான, அதிக எழுத்தறிவு கொண்ட நாளை நோக்கி வரலாற்று பக்கத்தை திருப்புவோம். ஒன்றாக, நாம் விதிகளை மாற்றலாம், வாழ்க்கைகளை மேம்படுத்தலாம் மற்றும் நீடித்த தாக்கத்தை உருவாக்கலாம்.

எனவே நண்பர்களே, அடிப்படைக் கல்வி மற்றும் எழுத்தறிவு மாதத்தைக் கொண்டாடுங்கள், கல்வியின் மூலம் சிறந்த உலகைக் கட்டியெழுப்புவதற்கான நமது அர்ப்பணிப்பை நமது செயல்கள் பிரதிபலிக்கட்டும்.

**அனிருதா ராய்சௌத்ரி**
RI இயக்குனர் 2023–25

# உங்கள் ரோட்டரி கணத்தை உருவாக்குங்கள்



உங்கள் ரோட்டரி கணம் எது? ரோட்டரியின் பகுதியாக இருப்பது என்பது, வெறுமனே கூட்டங்களுக்கு வருவது மட்டுமில்லை என்பதை நீங்கள் உணரும் கணம்தான் அது. மற்றவர்களுடைய வாழ்க்கைகளையும் உங்கள் வாழ்க்கையையும் ஒரே நேரத்தில் மாற்றும் ஒன்றில் நீங்கள் இணைந்துள்ளீர்கள் என்பதை உணரும் கணம்தான் அது.

நான் டேனியல் என்ற ஹெய்தியக் குழந்தையைப்பற்றித் தெரிந்துகொண்ட கணத்தை நான் எப்போதும் மறக்க மாட்டேன். ரோட்டரி அறக்கட்டளை அறங்காவலர் கிரெக் பாட் அப்போது என்னுடன் ஓர் RI குழுவில் சேவையாற்றிக் கொண்டிருந்தார். அவர் உயிர்ப் பரிசுத் திட்டத்தின் வழியாக அவசர இதய அறுவைச் சிகிச்சைக்கென டேனியலை விமானத்தில் அழைத்துவர முயன்றுகொண்டிருந்தார். ஆனால், டேனியலுக்குப் பயண அனுமதிச் சீட்டு கிடைக்கவில்லை. அவன் சில மாதங்கள்தான் வாழ்வான் என்று மருத்துவர்கள் சொல்லியிருந்தார்கள்.

கிரெக் இதை என்னிடம் சொன்னபோது, உயிர்ப் பரிசுத் திட்டம் ஹெய்தியில் செயல்படுவது எனக்கு நினைவுக்கு வந்தது. நாம் அங்கு அறுவைச் சிகிச்சை செய்யலாம் என்று எண்ணினேன். இது நடந்தபோது, புதன்கிழமை. டேனியலின் மருத்துவப் பதிவுகளைக் கிரெக் திரட்டினார். எனக்குத் தெரிந்த உயிர்ப் பரிசு அறுவைச்சிகிச்சை வல்லுனர் மாதந்தோறும் ஒரு முறையோ இரு முறையோ தான் ஹெய்திக்கு வருவார். அவர் அப்போது ஹெய்தியில் இருந்தார். வியாழக்கிழமையன்று, அந்த அறுவைச் சிகிச்சை வல்லுனர் மருத்துவப் பதிவுகளைப் பார்த்து, தன்னால் டேனியலுடைய இதயத்தைச் சரி செய்ய இயலும் என்று சொல்லிவிட்டார். ஆனால், அவர் விரைவில் பயணம் செய்யவேண்டியிருந்தது. அதனால், நாங்கள் வெள்ளிக்கிழமை காலைக்குள் டேனியலை ஒரு மருத்துவ வளாகத்துக்கு அழைத்துவரவேண்டும்.

டேனியலும் அவனுடைய பெற்றோரும் கிராமப்புற ஹெய்தியின் குண்டும் குழியுமான சாலைகளில் 90 நிமிடங்கள் ஸ்கூட்டர் பயணம் செய்து அந்த வளாகத்துக்கு வந்தார்கள். அங்கு, அந்த அறுவைச் சிகிச்சை வல்லுனர் வெற்றிகரமாக அவனுக்கு அறுவைச் சிகிச்சை செய்தார். இதையடுத்து, கிரெக்கும் நானும் நன்றியுணர்வுடன் மற்ற திட்டங்களைக் கவனிக்கத் தொடங்கினோம்.


ரோட்டரியின் அழகு, குறிப்பாக, ரோட்டரி அறக்கட்டளையின் அழகு, நாம் ரோட்டரி கணங்களை எந்த நேரத்திலும் உருவாக்கலாம். நீங்கள் உங்களுடைய ரோட்டரி கணத்தை இன்னும் கண்டுபிடிக்கவில்லை என்றால், தொடர்ந்து தேடுங்கள். அதைக் கண்டுபிடிப்பதற்கான சிறந்த இடம், நம் அறக்கட்டளையின் வழியாக ரோட்டரிக்குச் சேவையாற்றுவது. அது உங்கள் வாழ்க்கையை மாற்றும்.

**பாரி ரசின்**

TRF அறங்காவலர் தலைவர்



# கொடுப்பதில் உள்ள மகிழ்ச்சியை அனுபவியுங்கள்



ரோட்டரி அறக்கட்டளை உங்கள் பரிசுகளை வீட்டிற்கு அருகாமையிலும், உலகெங்கிலும் உள்ள வாழ்க்கைகளை மாற்றும் சேவை திட்டங்களாக மாற்றுகிறது. கடந்த 106 ஆண்டுகளில், அறக்கட்டளை 4 பில்லியன் வாழ்க்கைகளை மாற்றும் மற்றும் நிலையான திட்டங்களுக்காக செலவிட்டுள்ளது. உங்கள் உதவியுடன், நம் சமூகத்திலும், உலகெங்கிலும் உள்ள பல வாழ்க்கைகளை சிறப்பாக மாற்ற முடியும்.

TRF என்பது வெளி உலகத்திற்கான நமது ஜன்னல் ஆகும். இந்த ஜன்னல் வழியாகப் பாருங்கள், பிரசவத்திற்கு முந்தைய பராமரிப்பு கிடைக்காததால் கர்ப்பத்துடன் போராடும் இளம் கர்ப்பிணித் தாயை நீங்கள் காண்பீர்கள்; போலியோ-சரிசெய்யும் அறுவை சிகிச்சை செய்ய வாய்ப்பு இல்லாததால், போலியோவால் ஊனமுற்ற சிறுவன் நான்கு கால்களிலும் ஊர்ந்து செல்வதை நீங்கள் பார்ப்பீர்கள். சுத்தமான தண்ணீர் மற்றும் முறையான சுகாதாரத் திற்காக போராடும் ஆயிரக்கணக்கானோர்களையும், படிக்கவோ எழுதவோ தெரியாத லட்சக்கணக்கானவர் களையும் காண்பீர்கள்.

நம் முன் இரண்டு தேர்வுகள் உள்ளன-ஒன்று ஜன்னலை மூடி, நம் கண்களையும் மூடிக்கொண்டு, எல்லாம் சரியாகிவிட்டது என்று பாசாங்கு செய்யலாம் அல்லது இந்த எல்லா பிரச்சனைகளிலும் ஏதாவது செய்ய ஒரு உதவி கரம் நீட்டலாம். அதைச் செய்வதற் கான சிறந்த வழி ரோட்டரி அறக்கட்டளை ஆகும். TRF திட்டங்கள் உலகெங்கிலும் உள்ள லட்சக்கணக்கான மக்களுக்கு உணவு, தண்ணீர், கல்வி மற்றும் சுகாதார வசதிகளை வழங்குகின்றன.

ஆனால் நாம் அறக்கட்டளைக்கு ஆதரவளித்தால் தான் அந்த திட்டங்கள் நடக்கும். எனவே நாம் தொடர்ந்து ‘உலகில் நல்லதைச் செய்ய’ விரும்பினால், TRF-இன் அனைத்து திட்ட நிதிகளையும் ஆதரிக்க வேண்டும்.

மற்றவர்களிடமிருந்து எதையாவது பெறுவதை விட, கொடுக்கும் செயல் உங்களுக்கு அதிக மகிழ்ச்சியை தரும். ஒருவருக்கு எதையாவது கொடுக்கும் போது அவர் முகத்தில் தோன்றும் புன்னகையை பார்க்கும் போது ஏற்படும் மனநிறைவு ஒரு விவரிக்க முடியாத உணர்வு. கொடுப்பதில் உள்ள மகிழ்ச்சியை ஒருமுறை அனுபவியுங்கள், பின் நீங்கள் மீண்டும் மீண்டும் கொடுப்பீர்கள்.

கொடை என்ற மெழுகுவர்த்தியை ஏற்றி உலகில் நம்பிக்கையை ஏற்படுத்த வழிகாட்டுங்கள்.

**பரத் பாண்ட்யா**

TRF அறங்காவலர் துணை தலைவர் 2022–26

# Rotarians!

**Visiting Chennai for business?**

**Looking for a compact meeting hall?**



Use our air-conditioned Board Room with a seating capacity of 16 persons at the office of the Rotary News Trust.

**Tariff:**

**₹2,500 for 2 hours**
**₹5,000 for 4 hours**
**₹1,000 for every additional hour**

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org


## உலக ரோட்டரி எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| ரோட்டரி சங்கங்கள் | : | 36,926 |
| ரோட்டராக்ட் சங்கங்கள் | : | 11,191 |
| இன்டராக்ட் சங்கங்கள் | : | 14,018 |
| ரோட்டரி கம்யூனிட்டி கார்ப்ஸ் (RCC) | : | 13,018 |
| ரோட்டரியினர் | : | 1,172,284 |
| ரோட்டராக்டர்கள் | : | 164,711 |
| இன்டராக்டர்கள் | : | 322,414 |

As on August 14, 2023

## ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கை

As on August 1, 2023

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 137 | 5,994 | 6.34 | 73 | 492 | 33 | 254 |
| 2982 | 84 | 3,679 | 6.50 | 35 | 836 | 85 | 92 |
| 3000 | 132 | 5,371 | 10.46 | 104 | 1,616 | 172 | 215 |
| 3011 | 135 | 4,972 | 29.08 | 82 | 2,404 | 124 | 37 |
| 3012 | 152 | 3,726 | 23.08 | 75 | 790 | 83 | 61 |
| 3020 | 86 | 4,822 | 7.55 | 45 | 992 | 117 | 351 |
| 3030 | 101 | 5,547 | 15.40 | 125 | 1,935 | 471 | 384 |
| 3040 | 111 | 2,397 | 14.60 | 60 | 758 | 69 | 213 |
| 3053 | 73 | 2,908 | 16.13 | 36 | 591 | 42 | 128 |
| 3055 | 80 | 2,873 | 11.73 | 67 | 1098 | 67 | 376 |
| 3056 | 89 | 3,839 | 25.55 | 44 | 490 | 99 | 202 |
| 3060 | 106 | 4,912 | 15.86 | 68 | 2,198 | 55 | 142 |
| 3070 | 124 | 3,312 | 16.36 | 49 | 523 | 51 | 62 |
| 3080 | 107 | 4,067 | 12.12 | 121 | 1,617 | 147 | 121 |
| 3090 | 108 | 2,375 | 4.88 | 48 | 601 | 191 | 164 |
| 3100 | 113 | 2,281 | 12.01 | 15 | 137 | 32 | 151 |
| 3110 | 145 | 3,800 | 11.37 | 17 | 110 | 33 | 106 |
| 3120 | 86 | 3,561 | 15.89 | 37 | 415 | 26 | 55 |
| 3131 | 140 | 5,293 | 25.94 | 144 | 2,612 | 190 | 145 |
| 3132 | 87 | 3,480 | 13.19 | 38 | 537 | 104 | 173 |
| 3141 | 111 | 5,814 | 26.61 | 152 | 5,078 | 163 | 213 |
| 3142 | 105 | 3,707 | 21.04 | 94 | 1,816 | 83 | 91 |
| 3150 | 110 | 4,119 | 12.67 | 154 | 1,832 | 100 | 130 |
| 3160 | 84 | 2,745 | 8.93 | 32 | 234 | 95 | 82 |
| 3170 | 148 | 6,504 | 15.25 | 116 | 1,764 | 163 | 178 |
| 3181 | 87 | 3,528 | 10.63 | 39 | 462 | 81 | 118 |
| 3182 | 87 | 3,550 | 10.20 | 46 | 229 | 104 | 103 |
| 3191 | 90 | 3,160 | 18.04 | 107 | 2,722 | 117 | 35 |
| 3192 | 81 | 3,443 | 20.85 | 118 | 2,416 | 85 | 40 |
| 3201 | 173 | 6,645 | 9.75 | 134 | 1,967 | 87 | 93 |
| 3203 | 95 | 4,931 | 7.58 | 87 | 1,145 | 119 | 39 |
| 3204 | 74 | 2,422 | 6.85 | 24 | 226 | 17 | 13 |
| 3211 | 159 | 5,000 | 7.76 | 10 | 152 | 19 | 133 |
| 3212 | 127 | 4,581 | 11.18 | 89 | 3,582 | 141 | 153 |
| 3231 | 95 | 3,332 | 7.38 | 39 | 436 | 39 | 417 |
| 3232 | 177 | 6,196 | 19.29 | 126 | 7,265 | 138 | 99 |
| 3240 | 105 | 3,517 | 16.66 | 71 | 1,133 | 63 | 227 |
| 3250 | 108 | 4,115 | 21.19 | 68 | 970 | 59 | 191 |
| 3261 | 105 | 3,491 | 22.69 | 23 | 242 | 20 | 45 |
| 3262 | 112 | 3,732 | 15.76 | 76 | 709 | 642 | 284 |
| 3291 | 140 | 3,662 | 25.42 | | | 55 | 725 |
| **India Total** | **4,569** | **167,403** | | **2,888** | **55,132** | **4,581** | **6841** |
| 3220 | 70 | 1,945 | 15.78 | 98 | 4,385 | 83 | 77 |
| 3271 | 177 | 3,102 | 17.92 | 190 | 3,325 | 332 | 28 |
| 3272 | 161 | 2,281 | 14.69 | 80 | 1,122 | 20 | 49 |
| 3281 | 327 | 8,077 | 18.11 | 281 | 1,995 | 144 | 208 |
| 3282 | 182 | 3,558 | 9.92 | 203 | 1,426 | 30 | 47 |
| 3292 | 154 | 5,538 | 18.49 | 180 | 4,517 | 84 | 134 |
| **S Asia Total** | **5,640** | **191,904** | | **3,920** | **71,902** | **5,274** | **7,384** |

Source: RI South Asia Office

Rotary PEOPLE OF ACTION

# முன்மாதிரி அரசுப் பள்ளியை உருவாக்கிய RC நீலகிரிஸ்

ரஷீதா பகத்



*Rtn தீபிகா உன்னி, முன்னாள் தலைவர் விஜயகுமார் தர், சஞ்சய் கன்னா, ஷீலா பசின், சங்கச்செயலாளர் சுனில் கோயல் பெட்டட்டி கிராம பள்ளியில் மாணவர்களுடன்.*

தமிழ்நாட்டில், நீலகிரி மாவட்டத்தில் குளிர்ச்சியான பகுதியில் உள்ள கோத்தகிரி அருகே சிறிய கிராமமான பெட்டாட்டியில் உள்ள பஞ்சாயத்து யூனியன் அரசு நடுநிலைப் பள்ளி புதுப்பொலிவு பெற்றுள்ளது. துடிப்புடனும், வண்ணமயமாகவும், கண்ணுக்கு குளிர்ச்சியாக காட்சியளிக்கும் இந்த பள்ளிக்கு சென்றாலே புத்துணர்ச்சி பொங்கும். குழந்தைகளின் அரட்டையும், புன்சிரிப்பும் தவிர்க்க முடியாதது. இதை வேறு எந்த அரசு பள்ளியிலும் காணமுடியாது. நீலகிரி ரோட்டரி சங்கம் ரூ.51 லட்சம் செலவில் இந்த பள்ளியை முற்றிலும் மாற்றியமைத்துள்ளது. வகுப்பறைகள், கழிப்பறைகள், சமையலறை, வரிசையாக புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள நூலகம், டெஸ்க்டாப் மற்றும் மடிக்கணினி

பயன்படுத்த தக்கவாறு அமைந்துள்ள கணினி மையம், அறிவியல் ஆய்வகம் என பார்க்கும் இடங்கள் எல்லாம் புதுப்பொலிவுடன் திகழ்கின்றன.

பணக்காரர்களும் பிரபலங்களும் நிலம் வாங்கி அழகான குடில்கள் கட்டியுள்ள குன்னூருக்கு அருகில் உள்ள பெட்டாட்டி கிராமத்தில் அமைந்துள்ள பள்ளிக்கு நான் சென்றிருக்கிறேன். நீலகிரி ரோட்டரி சங்க உறுப்பினர்கள் என்னை அங்கு அழைத்துச் சென்றனர். ஆரம்பத்தில் பள்ளிக்கு புத்தகங்கள் வழங்கும் திட்டமானது 68 குழந்தைகள் படிக்கும் பள்ளியில் இப்போது மாயாஜாலத்தை உருவாக்கியுள்ளது. 1941-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த சங்கத்தில் 45 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் 13 பேர் பெண்கள்.

இந்த அரை கோடி ரூபாய் திட்டத்துக்கு பின்னணியாக



இருந்தவர் ஏர் கமாடோர் சஞ்சய் கன்னா. கடந்த 2022-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சங்கம் ‘வாங்க படிக்கலாம்’ திட்டத்தை முன்னெடுத்தது. பள்ளிக்காக புத்தகங்கள் சேகரிக்கப்பட்டன. பல புத்தகங்கள் சங்கத்தின் உறுப்பினர் டாக்டர் பார்வதியால் வழங்கப் பட்டவை. அவர் இங்கு சில மாதங்களும், இங்கிலாந்தில் சில மாதங்களும் வசித்து வருகிறார். இங்கு இருக்கும்போது ரோட்டரி கூட்டங்களுக்கு தவறாமல் வந்துவிடுவார். இங்கிலாந்தில் இருக்கும் காலத்தில் அங்கிருந்து பல நல்ல புத்தகங்கள் எங்களுக்கு அனுப்பிவைப்பார் என்கிறார் கன்னா.

ரோட்டேரியன்கள் இந்த புத்தகங்களை பல்வேறு பள்ளிகளுக்கு விநியோகிக்கும்போது அரசுப் பள்ளிகளில் அடிப்படை வசதிகள் மிகவும் மோசமாக இருப்பதையும், சுகாதாரமற்ற முறையில் இருப்பதையும் நாங்கள் உணர்ந்து கொண்டோம். கழிப்பறைகள் கறைபடிந்து துர்நாற்றம் வீசின. சமையலறையும் மோசமாக இருந்தது. பாழடைந்த வகுப்பறைகளில் மாணவர்கள் ஈரமான தரைகளில் அமர்ந்து கல்வி கற்பதைக் கண்டோம். மொத்தத்தில் கல்வி கற்பதற்கான சூழலே அங்கு இல்லை என்று கூறலாம்.

பள்ளியின் மோசமான நிலை, வாசிப்புத் திட்டத்தில் ஈடுபட்டிருந்த சங்கத்தின் குழுவினருக்கு மனச் சோர்வையும், விரக்தியையும் ஏற்படுத்தியது. கல்வி கற்பதற்கான சூழலை உருவாக்காமல் அவர்களுக்கு கல்வி கற்பதற்கான உபகரணங்களை கொடுப்பதில் எந்த பயனும் இல்லை என்பதை நாங்கள் உணர்ந்து கொண்டோம். அப்போதுதான் பள்ளியைச் சீரமைத்து நன்றாக செயல்பட வைக்க வேண்டும் என்ற யோசனை எங்கள் மனதில் உதித்தது.

எங்களிடம் இரண்டுவித யோசனைகள் இருந்தன. ஒன்று பல பள்ளிகளில் சிறிதளவு தலையீட்டுடன் பணி செய்வதா அல்லது ஒரு பள்ளியை அடையாளம் கண்டு அதை மாதிரிப் பள்ளியாக உருவாக்குவதா என்பதுதான் அது. ஒரு பள்ளியை தேர்ந்தெடுத்து அதை மாதிரிப் பள்ளியாக உருவாக்கினால், அதேபோல இதர சேவை நிறுவனங்களும் மற்ற பள்ளிகளை தத்து எடுத்து சீரமைக்கக்கூடும் என்பதால் மாதிரிப் பள்ளியை உருவாக்க முடிவு செய்தோம் என்றார் சங்கத்திற்கு நன்மதிப்பை பெற்றுத்தரும் குழுவின் தலைவர் தீபிகா உன்னி.

பெட்டாட்டி பள்ளியை நாங்கள் தேர்ந்தெடுத்தற்கு இரண்டு காரணங்கள். அந்த பள்ளி ஏறக் குறைய 2 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட வளாகத்தில் அமைந்திருந்தது. பள்ளியை புதுப்பிக்கவும், மறுகட்டமைக்கவும் வாய்ப்பு இருந்தது. அந்த பள்ளியில் 8-ம் வகுப்பு வரை மட்டுமே இருந்தது. மொத்தம் 41 மாணவர்களே படித்து வந்தனர். பள்ளி சீரமைக்கப்பட்டு, வசதிகளுடன் இருந்தால் பெற்றோர்கள் அதிக அளவில் குழந்தைகளை இங்க படிக்க அனுப்பு வார்கள் என்று நாங்கள் கருதினோம். அந்த வளாகத்தில் மொத்தம் 8 வகுப்பறைகள் இருந்தன. பள்ளிகள் சீரமைக்கப்பட்டு புதுப்பொலிவு பெற்றால் நிச்சயம் 200 மாணவர்கள் அங்கு படிக்க முடியும் என்பதை அவர்கள் நன்கு தெரிந்துவைத் திருந்தனர். பள்ளி வளாகத்தில் நிறைய இடம் இருந்தது நல்ல வாய்ப்பாக அமைந்தது.

நாங்கள் புதுப்பிக்கும் பணியை சமையலறையிலிருந்து தொடங்கினோம். ஏனெனில் அங்கு மதிய உணவு தயாரிக்கப்படுகிறது. சமையலறையின் சுவர்களில் பூஞ்சை பிடித்திருந்தது. ரேஷன் பொருள்கள் தரையிலேயே வைக்கப்பட்டிருந்தன. எலிகள் சுதந்திரமாக சுற்றித்திரிந்தன. மாணவர்கள், மாணவிகளுக்கு தனித்தனியாக கழிப்பறைகள் அமைக்க வேண்டும் என்பதை நாங்கள் உணர்ந்து கொண்டோம். அத்துடன் ஆசிரியர்களுக்கு தனியாக கழிப்பறை கட்டவும் முடிவு செய்தோம் என்றார் கன்னா. சில தனிப்பட்ட காரணங்களுக்கு அவர் தாற்காலிகமாக ரோட்டரியிலிருந்து விலகி நிற்கிறார்.

வகுப்பறைகள் மிகவும் மோசமாக இருந்தன. தரைகள் ஆங்காங்கே குண்டும் குழியுமாக இருந்தன.

## பள்ளியின் பழைய நிலை

























படங்கள்: RC நீலகிரிஸ்

## RC நீலகிரியின் ஆதரவால் புதுப்பிக்கப்பட்ட பின்














RC *நீலகிரிஸ் அமைத்துக் கொடுத்துள்ள மேடையில் பள்ளி ஆண்டு விழா கொண்டாடப்படுகிறது.*

சுவர்கள் பெயர்ந்திருந்தன. சில வகுப்பறைகள் நடுவில் மெல்லிய மரப்பட்டைகளால் பிரிக்கப் பட்டிருந்தன. மேற்கூரைகள் ஒழுகின. வகுப்பறைகளில் மேஜை, நாற்காலிகள் உடைந்திருந்தன. பெஞ்சுகள் உடைந்திருந்ததால் மாணவர்கள் தரையில் உட்கார வேண்டிய நிலை இருந்தது.

நீலகிரி எப்போது குளிர்ச்சியாக இருப்பதால் மாணவர்கள் வெறும் தரையில் உட்கார்ந்து கல்விகற்க முடியாது. வகுப்பறையில் ஒரு சிறிய பல்பு மட்டுமே இருந்தது. எனவே பள்ளியை முழுமையாக சீரமைக்க வேண்டியிருந்தது என்றார் சங்கத்தின் தலைவர் குரூப் கேப்டன் CHN குமார்.

தொடக்கத்தில் கூட்ட நிதி மூலம் நிதி திரட்டினோம். எங்களது இலக்கு ரூ.15 லட்சம். நாங்கள் சிறியதாகவே அதாவது இரண்டு மூன்று வேலைகளை மட்டுமே செய்ய நினைத்தோம். ஆனால், குழந்தைகளின் கண்களில் உற்சாகத்தையும், நம்பிக்கையையும் பார்த்தபோது அதிகம் செய்ய விரும்பினோம். கடந்த 2022-ஆம் ஆண்டு அக்டோபரில் நாங்கள் அவர்களைத் தொடர்பு கொண்டோம். ஆனால், 2023 ஜனவரியில்தான் பணிகளைத் தொடங்கினோம். ஏப்ரல் மாத்த்தில் பணிகளை முடித்து பள்ளியை அவர்களிடம் ஒப்படைத்து விட்டோம் என்றார் கன்னா.

மொத்தம் ரூ.51 லட்சம் செலவானது. தொடக்கத்தில் சங்க உறுப்பினர்கள், நண்பர்கள், குடும்பத்தினர் மூலம் நிதி சேர்த்தோம். பின்னர் கார்ப்போரேட் நிறுவனங்கள் நிதியுதவ முன்வந்தன. கிட்டத்தட்ட திட்ட மதிப்பில் பாதி, அதாவது ரூ.24 லட்சம் கார்ப்பொரேட் நிறுவனங்களின் பொறுப்புணர்வு நிதி மூலம் கிடைத்தது. முன்னாள் தலைவர் விஜய்குமார் தர் இதற்கு பெருமுயற்சி எடுத்துக்கொண்டார்.

கோடக் மஹிந்திரா நிறுவனம் அதிகபட்சமாக ரூ.17.6 லட்சம் வழங்கியது. ஒரு பிளாக்கை புதுப்பிப் பதற்கான நிதியை வழங்கியது. ஸ்டார் கெமிக்கல்ஸ் நிறுவனம் ரூ.1 லட்சம் சமையலறையை புதுப்பிக்க வழங்கியது. ஒடிஸாபெர்ரோடெக் நிறுவனம் ஆங்கில சொல்லித்தரும் ஆசியருக்கு மாதம் ரூ.10,000 வீதம் ஒருவருடம் ஊதியம் வழங்க முன்வந்துள்ளது. சங்க உறுப்பினர்கள் தங்கள் பங்களிப்பாக ரூ.4 லட்சம் கொடுத்தனர். குன்னூரில் உள்ள பிரபலங்கள் சிலர், மாணவர்கள் மதிய உணவு சாப்பிடும் பகுதியை மிக நேர்த்தியாகவும் சுத்தமாகவும் சீரமைக்க உதவினர். முன்பு அதாவது குளிர்காலத்தில் குழந்தைகள் குளிர்ச்சியான தரையில் அமர்ந்து மதிய உணவு சாப்பிடும் நிலை இருந்தது. இப்போது குழந்தைகள் சாப்பிட டேபிள், நாற்காலிகள் போடப்பட்டுள்ளன.

இதில் சுவாரஸ்யமானது என்னவென்றால், குழந்தைகளின் பெற்றொர்கள் ஆங்கில ஆசிரியர் வேண்டும் என்று கோரிக்கை வைத்ததுதான். தங்கள் குழந்தைகள் ஆங்கிலம் கற்றுக்கொள்ள வேண்டும். பின்னாளில் அவர்கள் நல்ல வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற பெற்றோர்களின் ஆதங்கள் இதன் மூலம் வெளிப்பட்டது. அதுமட்டுமல்ல, அவர்கள் ஹிந்தி கற்பிக்கும் ஆசிரியர் வேண்டும் என்றும் கேட்டனர். அதாவது தங்கள் குழந்தைகள் ஹிந்தி படித்தால்

# ஆங்கிலம் ப்ளீஸ்!



லிகிஷா பள்ளி தலைமை ஆசிரியர் ராதா கிருஷ்ணராஜுடன்.

ரோட்டேரியன்கள் தத்தெடுத்த பெட்டாட்டி பஞ்சாயத்து பள்ளி பழைய மாணவர்கள் சிலரிடம் நான் உரையாடியபோது, அவர்கள் ஆங்கில மொழி கற்கவும், பேசவும் விரும்புவது தெரியவந்தது. கணினி அறையில் 8-ஆம் வகுப்பு படிக்கும் யாழினி என்ற பெண், தாம் ஆங்கிலத்தில் பேச விரும்புவதாக நம்பிக்கையுடன் கூறினார். நான் கேட்ட கேள்விகளுக்கு ஆங்கிலத்திலேயே பதில் கூறினார். அவளது ஆசிரியை மகிழ்ச்சி அடைந்தார். எனது தாயார் வீட்டை கவனித்துக் கொள்கிறார். எனது தந்தை டிரைவராக இருக்கிறார். நான் நன்கு படித்து வளர்ந்த பின் ராணுவத்தில் டாக்டராக பணிபுரிய விரும்புகிறேன் என்று உற்சாகத்துடன் கூறினார். 8-ஆம் வகுப்புக்குப் பிறகு வேறு பள்ளியில் சேர்ந்து உயர்கல்வி பெறப்போவதாகவும் அவர் மேலும் கூறினார்.

பின்னர் சங்கத்தின் முன்னாள் தலைவரும், குன்னூரில் ரோட்டரி தகன மையம் அமைக்க பின்னணியாக இருந்தவருமான லெப். ஜெனரல் எம்.ஜி.கிரிஷ், என்னிடம் கூறுகையில், யாழினியிடம் பேசுவதற்கும் வழிகாட்டுவதற்கும் ராணுவ பெண் டாக்டர் ஒருவரை ஏற்பாடு செய்வதாக கூறினார்.

லிகிஷா என்ற மாணவியும் ஆங்கிலத்தில் பேச விரும்பினாள். என் அம்மா வீட்டை கவனித்துக் கொள்வதாகவும், அப்பா விவசாயி எனவும் கூறினார். எங்களுக்குச் சொந்தமான விவசாயப் பண்ணையில் முட்டைகோஸ், உருளைக்கிழங்கு, பீட்ரூட் போன்ற காய்கறிகள் பயிரிடுவதாக கூறினார். ஸ்பெல்லிங் பீ போட்டியில் இரண்டாவது இடத்தை வென்றவர். கணினியை இயக்க கற்று வருவதாகவும், புத்தகத்திலிருந்து சில பகுதிகளை தம்மால் கணினியில் தட்டச்சு செய்ய முடியும் என்று கூறினார்.



யாழினி



ஆகாஷ்

அவளது கனவு என்ன? என்று கேட்டதற்கு, ஐ.ஏ.எஸ். அதிகாரியாக வேண்டும் என்றார். 8 ஆம் வகுப்பு படிக்கும் ஆகாஷுக்கு ஆங்கிலத்தில் பேசத் தெரியவில்லை. அதனால் தமிழில் பேசினார். தமது தாய், தந்தை இருவரும் பண்ணையில் வேலை செய்வதாக கூறினார். மேலும் உயர்கல்வி பயின்று சிவில் என்ஜினீயர் ஆவதே தமது விருப்பம் என்று தெரிவித்தார்.




*மாணவர்களுடன் சங்க உறுப்பினர்கள். சங்கத்தலைவர் CHN குமார் வலதில் உள்ளார்.*

இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் செல்லமுடியும் என்று அவர்கள் நினைக்கின்றனர் என்றார் விஜயகுமார் தர்.

ரோட்டேரியன்கள் ஒரு ஆங்கில ஆசிரியரை நியமித்து அவருக்கான இரண்டு ஆண்டு ஊதியத்தை வழங்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டதால் குழந்தைகள் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் பயிலும் வாய்ப்பு கிடைத்துள்ளது. குழந்தைகள் இனி ஆங்லத்தில் பேசுவதிலும் கவனம் செலுத்த முடியும். 8-ம் வகுப்பு மாணவர்களில் பெரும் பாலானவர்கள் ஆங்கிலத்தில் உரையாடத் தொடங்கியதிலிருந்து ஆங்கில ஆசிரியையின் பெரும்பணியைப் புரிந்து கொள்ள முடிகிறது!

பள்ளி இப்போது பரந்த, பளபளப்பான புதிய சமையலறையை பெற்றுள்ளது. மதிய உணவு சமைப்பதற்கான பொருள்கள், பாத்திரங்களை வைக்கவும் இடம் தாராளமாக உள்ளது. வேறு பள்ளிகளில் மதிய உணவு விஷயத்தில் சில பிரச்னைகள் இருக்கும் நிலையில் இங்கு தரமான உணவு வழங்கப்படுவதாக சங்கத்தின் தலைவர் குமார் தெரிவித்தார். இங்கு சமையலறை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இல்லாதது பெரும் பிரச்னையாக இருந்தது. உண்மை நிலை அதுதான். ஆனால், இப்போது சமையலறை முதல் தரத்தில் உள்ளது. தாஜ் ஹோட்டலில் பணிபுரியும் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஒருவர், மரம் நடும் விழாவில் பங்கேற்க வந்திருந்தார். அவர் சமையலறையை பார்த்துவிட்டு ஸ்டார் ஹோட்டலுக்கு இணையாக இருப்பதாக கூறி பாராட்டினார் என்றார்.

சங்கத்தின் செயலாளர் சுனில் கோயல் கூறுகையில், சிறிய குழந்தைகள் படிக்கும் வகுப்பறைகளில் அதிக சிவில் வேலைகளுக்கு தேவையிருக்க வில்லை. அங்கு சின்னச் சின்ன வேலைகள் மற்றும் வர்ணம் பூசுதல் மட்டுமே நடந்தது. ஆனால், மூத்த மாணவர்கள் படிக்கும் வகுப் பறைகளில் மேற்கூரை, சுவர்கள், ஜன்னல்கள், மின்விளக்குகள் பொருத்துதல், மாணவர்கள் உட்காருவதற்கு பெஞ்சு, மேஜைகளை அமைத்தல் ஆகிய பணிகளை நாங்களே செய்யவேண்டியிருந்தது. பிரகாசமான பச்சை மற்றும் சிவப்பு வர்ணங்கள் பூசப்பட்டன. இங்குள்ள படுகர் சமூகத்தினர் பிரகாசமான வண்ணங்களையே விரும்பினார்கள் என்றார். பள்ளித்தலைமை ஆசிரியை மற்றும் ஆசிரியர்கள் வண்ணங்களை தேர்வு செய்தனர் என்றார் சங்கத்தின் நிர்வாகி ஷீலா பாஸின்.

சிவில் என்ஜினீயரான சங்க உறுப்பினர் ஒருவர் 8 வகுப்பறைகள், சமையலறை, உணவு சாப்பிடும் அறை, கழிப்பறைகள் அனைத்தையும் சீரமைக்கும் பணிகளை மேற் கொண்டார். இந்திய கிராமங்கள் பலவற்றில் பூப்பெய்திய பின் (வயதுக்கு வந்த பிறகு) பெண்கள் படிப்பை நிறுத்திவிடுகிறார்கள். இதைத் தடுக்கும் வகையில், பெண்களுக்கு சுத்தமான, சுகாதாரமான தனி கழிப்பறைகள் கட்டித்தருவது எங்கள் நோக்கமாக இருந்தது என்று தீபிகா விளக்கினார்.

இதில் சுவாரஸ்யமானது என்னவென்றால், 1967-ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந்த பள்ளி நிலம் ரோட்டேரியன் ஒருவரால்

நன்கொடையாக வழங்கப்பட்டது என்பதுதான். தலைமையாசிரியை ராதா கிருஷ்ணராஜ் கூறுகையில், முன்பு இந்த பள்ளியில் 41 மாணவர்கள் மட்டுமே படித்து வந்தனர். ஆனால், பள்ளி முற்றிலுமாக சீரமைக்கப்பட்டு, ஆங்கில ஆசிரியர் நியமனம் செய்யப்பட்ட பிறகு, புதிதாக கணினிகள் நிறுவப்பட்ட பிறகு மாணவர்களின் எண்ணிக்கை 68 ஆக உயர்ந்துள்ளது. கணினி இப்போது பிரபலமாகிவிட்டது. மாணவர்களுக்கு அறிவியல் பாடம் கற்றுத்தரும் ஆசிரியையே விஜயலட்சுமியே, கணினி பாடங்களையும் கற்றுத் தருகிறார். மாணவர்களும் ஆர்வமாக கணினியை இயக்க கற்றுக்கொண்டுள்ளனர். இப்போது ஒரு டஜனுக்கும் மேலான மாணவ, மாணவிகள் இதில் தேர்ச்சி பெற்றுள்ளனர். ரோட்டேரியன்கள் பழைய கணினி கருவிகளை பழுது நீக்கியதுடன், புதிய கணினி இயந்திரங்களையும் நிறுவியுள்ளது குறிப்பிடத்தக்கது.

பள்ளி வகுப்பறைகள் இப்போது புதுப்பொலிவுடன் காட்சியளிப்பதால் இப்பகுதியில் உள்ள மக்கள், தங்கள் குழந்தைகளை பள்ளியில் சேர்ப்பதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். பள்ளி ஆசிரியர்களும், பள்ளி சீரமைக்கப்பட்டு, புதுப்பிக்கப் பட்டுள்ளது குறித்து உள்ளூர் மக்களிடம் தெரிவித்து வருவதால் மாணவர்கள் சேர்க்கை அதிகரித்துள்ளது.

பள்ளியில் ஸ்மார்ட் போர்டு (டிஜிட்டல் கரும்பலகை) இருந்த போதிலும் அது சரிவர வேலை செய்யவில்லை. அதை நாங்கள் சரிசெய்து கொடுத்தோம். இப்போது பல நிகழ்ச்சிகள் அதன் மூலம் நடத்தப்படுகின்றன என்றார் கன்னா. பள்ளி சீரமைக்கப்பட்ட மூன்று மாதங்கள் கன்னா, பள்ளியில்தான் இருந்தார் என்று அருகிலிருந்த ரோட்டேரியன்கள் அவரை கிண்டல் செய்தனர். பள்ளி நூலகம் சீரமைக் கப்பட்டுள்ளதால் அங்கு வைக்கப் பட்டுள்ள ஏராளமான புத்தகங்கள் மாணவர்களை கவர்ந்துள்ளன. ரோட்டேரியன் அவர்களுக்கு ரோட்டரியின் சின்னம் பொறிக்கப் பட்ட மஞ்சள் நிற சீருடைகள் மற்றும் காலணிகளை வழங்கியுள்ளனர்.

மாணவர்கள் ஆர்வத்துடன் புத்தகம் படிக்கும் காட்சியை அல்லது கணினி திரையில் ஆங்கிலம் அல்லது தமிழில் எழுத்துக்களை பதிவிடும் காட்சியை நான் கிளிக் செய்தபோது, முன்பு எப்படி ஒரே ஆசிரியர் 4, 5 மற்றும் 6-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஒரேநேரத்தில் வகுப்பு எடுத்தார் என்பதை சஞ்சய் கன்னா விளக்கினார்.



முதல் வரிசையில் 4-ம் வகுப்பு மாணவர்கள். இரண்டாவது வரிசையில் 5-ம் வகுப்பு மாணவர்கள் என உட்காரவைக்கப்பட்டு பாடம் நடத்தினர். அப்படியென்றால் மாணவர்கள் எந்த சூழ்நிலையில் படித்திருப்பார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள். காஷ்மீரைச் சேர்ந்த விஜய் தர் கூறுகையில், காஷ்மீர் அரசு பள்ளிகளிலும் இதே நிலைதான் என்றார். 4,5 மற்றும் 6-ம் வகுப்பு மாணவர்களுக்கு இன்றும் ஒரே வகுப்பறையில்தான் பாடம் நடத்தப்படுகிறது என்றார் அவர்.

உண்மையில் நீலகிரியில் எத்தனைப் பள்ளிகள் இருக்கிறது என்பது பிரச்னை இல்லை. ஆனால், எத்தனை பள்ளிகள் அடிப்படை வசதிகளுடன் தரமான கல்வியை வழங்குகிறது என்பதுதான் பிரச்னை. நீலகிரி மாவட்டத்தில் 600-க்கும் மேலான அரசுப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன (3-4 கி.மீ. சுற்றளவில் 10 பள்ளிகள் உள்ளன.) என்கிறார் ராதா. ஆனால், இதில் வருத்தமளிப்பது என்னவெனில், சில பள்ளிகளில் மாணவர்களே இல்லை. பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை தனியார் ஆங்கில வழி கல்வி பள்ளிகளில் சேர்ப்பதையே விரும்புகின்றனர். இங்கு அரை கிலோ மீட்டருக்கு ஒரு பள்ளி இருப்பதை பார்க்கலாம் என்கிறார் விஜய் தர். அதனால்தான் நாங்கள் ஆங்கில ஆசிரியரை நியமித்தோம் என்றார் அவர்.

சமீபத்தில்தான் எனது டிரைவரின் மகள் இங்குள்ள, ஆண்டுக்கு ரூ.40,000 கட்டணம் வசூலிக்கும் ஒரு உயர்ந்த பள்ளியில் சேர்ந்துள்ளார். அவர் என்னிடம் உதவி கேட்டு வந்தார். நான் அவரது குழந்தையை இந்த பள்ளியில் சேர்க்கும்படி கூறினேன். ஆனால், அவர் சமாதானம் அடையவில்லை. பள்ளியின் பெயர்தான் வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது என்றார் அவர்.

மற்ற அரசுப் பள்ளிகள் போல் இல்லாமல் இந்த பஞ்சாயத்து

பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கழகம் முறையாகச் செயல்பட்டு வருகிறது. பள்ளி சீரமைக்கப்பட்டு, அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்ட பிறகு அது மேலும் உற்சாகத் துடன் செயல்பட்டு வருகிறது. பள்ளிக்கு அரசு ஐந்து ஆசிரியர்களை நியமித்துள்ளது. ஆனால், மாணவர் களுக்கு தரமான கல்வி அளிக்க வேண்டுமானால், மேலும் ஆசிரியர்கள் தேவை. உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? இப்போது ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து ஆசிரியர்களை நியமிப் பதற்காக தங்கள் ஊதியத்திலிருந்து பங்களிப்புச் செய்கிறார்கள். பெற்றோர்கள் சிலரும் தாங்களாக ஒரு குழந்தைக்கு மாதம் ரூ.100 வீதம் பணம் கொடுக்க முன்வந்துள்ளனர். இதன் மூலம் அதிக ஆசிரியர்களை நியமிக்க முடியும்.

அவர் மேலும் கூறுகையில், மாதம் ரூ.68,000 என்பது மிகப்பெரிய தொகை. அந்த தொகையை எப்படி செலவழிப்பது என்பதை பெற்றோர் ஆசிரியர் கழகம் முடிவு செய்யும். பள்ளியைப் பராமரிக்க அரசு ஆண்டுக்கு ஒரு முறை வழங்கும் தொகை ரூ.22,000-ம் தான் என்பதை நான் தெரிந்து கொண்டேன். பள்ளியைத் தூய்மையாக வைத் திருக்க, பல்புகளை மாற்றியமைக்க, சிறு சிறு பழுதுகளை சரி செய்யவே இந்த தொகை செலவிடப்படுகிறது. இப்போது பள்ளி சீரமைக்கப்பட்டுள்ளதால், மாணவர்கள் எண்ணிக்கை 80 ஆக உயரும் போது மேலும் ஒரு ஆசிரியர் நியமிக்கப்பட வேண்டும் என்கிறார் கன்னா. ஆங்கில ஆசிரியருக்கான ஊதியத்தை ரோட்டரி சங்கம் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், கணினி ஆசிரியைக்கான ஊதியத்தை சங்க உறுப்பினரின் சகோதரர் பணிசெய்யும் அமெரிக்காவை அடிப்படையாக கொண்ட நிறுவனம் ஏற்றுக்கொண்டுள்ளது.




இந்த பஞ்சாயத்துப் பள்ளியின் தோற்றம் முற்றிலும் மாறிய சூழ்நிலையில், ஆசிரியர்கள், குழந்தைகள் மற்றும் பெற்றோர் களின் ஆர்வத்தையும் பார்த்து, ரோட்டேரியன்கள் 8-ம் வகுப்புக்கு பிறகு மாணவர்களின் மேல்நிலைக் கல்விக்கு ஒரு உத்தியை வகுத் துள்ளனர். திறமையான மாணவர்கள் வெளியேறுவதற்கு முன்னதாக அவர்களின் எதிர்காலத்தை பாதுகாக்க விரும்பினோம். பள்ளியில் இப்போது அடிப்படை கட்டமைப்பு வசதிகள் இருப்பதால் 8-ம் வகுப்பிற்கு பிறகு ஒரு நல்ல இணைப்பை ஏற்படுத்த திட்டமிட்டு வருகிறோம் என்று புன்னகையுடன் தெரிவித்தார் கன்னா.

இந்த பகுதியில் உள்ள சலுகை பெற்ற அல்லது தனியார் பள்ளியை தத்தெடுக்க வேண்டும் என்பது திட்ட மாகும். மேலும் சங்கத்தின் இன்டராக் பள்ளியான ஸ்டேன்ஸ் மேனிலைப் பள்ளி முதல்வர் கிளென் குரோனிங், சங்க உறுப்பினர் என்பதால், இந்த ஆண்டு முதல் 9-ம் வகுப்பில் இரு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள உறுதி தெரிவித்துள்ளார். வேறு சில பள்ளிகளின் உதவியையும் நாங்கள் நாடி வருகிறோம்.

ஆனால், இதற்கிடையில் இந்தப் பள்ளி அதன் மேல்நோக்கிய பயணத்தை தொடரும். கூடுதல் பாடத்திட்ட நடவடிக்கைகளில் பள்ளி அதிக ஆர்வம் காட்டி வருகிறது. மாணவர்களும் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த தயாராக இருக்கிறார்கள். எனவே அவர்களுக்காக ஒரு அரங்கத்தை நாங்கள் கட்டித் தந்துள்ளோம். அவர்களின் பொழுது போக்குக் காகவும், ஆங்கில பேச்சுத்திறனை வளர்க்கும் நோக்கிலும் ஆங்கில திரைப்படங்களை அவ்வப்போது திரையிடவும் முடிவு செய்துள்ளோம். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும். கார்கில் வெற்றிதினத்தன்று எங்கள் தலைவர், குரூப் கேப்டன் குமார், குழந்தைகளிடம் கார்கிலில் என்ன நடந்தது என்று விளக்கினார். இது போன்று ஏதாவது ஒரு நிகழ்ச்சியை வெள்ளிக்கிழமைதோறும் நடத்த விரும்புகிறோம் என்றார் தீபிகா.■

ADVT.

# KLE SOCIETY

Lingaraj College Road, Belagavi, Karnataka, India

300 Institutions | 18000+ Faculty | 138000+ Students | 4000+ Healthcare Beds

JOIN OUR

# WEBINAR

Monday September 4 7 PM IST

## REGISTER NOW

XUSOM.COM/INDIA/


Tuesday September 12 7 PM IST

## 6 YEARS

PRE-MED TO

## DOCTOR OF MEDICINE / DOCTOR OF VETERINARY MEDICINE

## PROGRAMME



| First 2 years | Next 2 years | Next 2 years |
|---|---|---|
| Start @ KLE, Campus Karnataka, India | Continue @ Xavier's Campus Aruba, Caribbean island - Netherland | Complete @ Xavier's affiliated Teaching Hospitals USA / Canada |

**Limited Seats**

The session starts in September 2023

To apply, Visit:

**application.xusom.com**

Contact: Uday @+91 91 0083 0083 +91 98 8528 2712

email: infoindia@xusom.com

XAVIER STUDENTS ARE ELIGIBLE FOR H1/J1 Visa PROGRAMME

# உகாண்டாவில் அகதி குழந்தைகளுக்கான மனநல ஆரோக்கிய அமர்வுகள்

ஜெய்ஸ்ரீ



*ரோட்டரி இ-க்ளப் ஆஃப் எம்பவரிங் யூத் கூகுல் மீட்டில் நடத்திய நிகழ்ச்சியில் பங்கேற்ற உகாண்டா நாட்டு குழந்தைகள்.*

உகாண்டாவில் உள்ள RAC நாகிவேல் அகதிகள் முகாம், ரோட்டரி இ-கிளப் ஆஃப் எம்பவரிங் யூத், RID 3132-ல் ஏற்பாடு செய்யப்பட்ட மனநலத் திட்டமான புராஜெக்ட் மைண்ட்ஸ்ட்ராங்கின் ஒரு பகுதியாக, 10 முதல் 16 வயதுடைய 25 அகதிக் குழந்தைகளைத் தேர்ந்தெடுத்துள்ளது. 90 நிமிட ஆன்லைன் அமர்வை சங்க உறுப்பினர் சங்கீதா சந்திரன் கூகுள் மீட்டில் தொகுத்து வழங்கினார். கதை சொல்லுதல் மற்றும் வரைதல் அமர்வுகளுடன் குழந்தைகளை ஈடுபடுத்தினார். அகதி முகாமில் இருப்பது திணற வைக்கும் அனுபவமாகும். ஆனால் இந்த அமர்வுகள் குழந்தைகளுக்கு மகிழ்ச்சியான தருணங்களை அளித்தன. அவர்கள் அனைவரும் அன்பாகவும், ஆர்வமாகவும், வைராக்கியமாகவும் இருந்தனர், என்கிறார் சங்கீதா.

ரோட்ராக்ட் சங்கத்தின் முன்னாள் தலைவரான Rtr எரிக் முபிகாவுடன் ஒரு உரையாடலைத் தொடர்ந்து இ-கிளப் உறுப்பினர் பிந்து ஷிர்சாத் அவர்களால் இந்த திட்டம் தொடங்கப்பட்டது. இது “உலகின் முதல் அகதிகள் முகாமில் இயங்கும் ரோட்டரி சங்கம் ஆகும். எங்கள் சங்கம் இளம் அகதிகளால் ஆனது, அவர்கள் எங்கள் குடியேற்றத்தை சிறப்பாகவும் அனைவருக்கும் வசதியாகவும் மாற்ற விரும்புகிறார்கள் என முபிகா கூறுகிறார். முபிகா காங்கோவிலிருந்து குடிபெயர்ந்த அகதி மற்றும் சங்கத்தின் பட்டய உறுப்பினர் ஆவார். அவர் குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு யோகா கற்றுத் தருகிறார், மேலும் சமையல் எண்ணெய் மற்றும் கைவினைப் பொருட்களை சில்லறை விற்பனை செய்கிறார்.

“எங்கள் கவனம் முக்கியமாக மனநல மேம்பாட்டு முயற்சி களில் உள்ளது. எனவே, அகதிக் குழந்தைகளிடையே மகிழ்ச்சியையும் நேர்மறையையும் பரப்புவது பற்றி முபிகா விவாதித்தபோது, நாங்கள் புராஜெக்ட் மைண்ட்ஸ்ட்ராங்கை வடிவமைத்தோம், என்று பிந்து கூறுகிறார், மேலும் குழந்தைகள் தங்கள் உணர்வுகளை எமோஜிகள் மூலம் வெளிப்படுத்திய ஒரு அமர்வை நினைவு கூர்ந்தார். “அவர்களில் பெரும்பாலோர் ‘மகிழ்ச்சியான’ எமோஜிகளைக் காட்டினாலும், ‘கோபமான’ மற்றும் ‘சோகமான’ எமோஜிகளை காட்டிய சிலரைக் காணும் போது எங்கள் இதயம் கனத்தது மேலும்

## நாகிவேல் ரோட்ராக்ட் கிளப்



Rtr எரிக் முபிகா அகதி குழந்தைகளை மகிழ்விக்கிறார்.

நாகிவேல் அகதிகள் முகாம் தென்மேற்கு உகாண்டாவில் தான்சானியாவின் எல்லையில் உள்ள இசிங்கிரோ மாவட்டத்தில் அமைந்துள்ளது. RAC நாகிவேல் அகதிகள் குடியேற்றத்தை உருவாக்குவதில் மறைந்த சாம் ஓவோரி முக்கிய பங்கு வகித்தார் என்கிறார் முபிகா. அப்போதைய RIPN ஆக, ஓவோரி ஒரு நிகழ்வில் கலந்து கொண்டார், அங்கு குடியேற்றத்தைச் சேர்ந்த 13 இளம் அகதிகள் சமூகத்திற்கு உதவும் திட்ட யோசனைகளுக்காக அமெரிக்க அகதிகள் குழுவால் (ARC) கௌரவிக்கப்பட்டனர். அவர்களின் உற்சாகம் மற்றும் உறுதியால் ஈர்க்கப்பட்ட அவர், அவர்களை கொண்டு ஒரு ரோட்ராக்ட் சங்கத்தை உருவாக்க முன்வந்தார். இவ்வாறு சங்கம் 2017-ல் உகண்டாவின் RC கித்வாதுலே மற்றும் ம்பரார, மற்றும் அமெரிக்காவின் ரோஸ்வில் மற்றும் ARC ஆகியவற்றின் ஆதரவுடன் பிறந்தது.

அகதிகள் தங்கள் சொந்த நாட்டை விட்டு வெளியேறும்போது, அவர்கள் பெரும்பாலும் தங்கள் உடைமைகளை விட்டுவிட்டு, அணிந்திருக்கும் ஆடைகளைத் தவிர வேறு எதுவும் இல்லாமல் முகாமுக்கு வருகிறார்கள். நாகிவேல் முகாமில் நுழைவதற்கான முதல் இடம் வரவேற்பு மையம் ஆகும், அங்கு அவர்கள் பல வாரம் தங்க வேண்டியிருக்கும். அங்கு எந்த சேவையையும் அணுக முடியாததால் ஆரம்ப நாட்கள் அவர்களுக்கு கடுமையாக இருக்கும். எனவே, ARC-இன் ஆதரவுடன் கூடுதல் ஆடைகள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களைக் கொடுத்து அவர்களை வசதியாக உணர வைக்கிறோம் என்று விளக்குகிறார் முபிகா.

உகாண்டா ரோட்ராக்ட் சங்கம் 22 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது மற்றும் தற்போது பொது கழிப்பறை களை கட்டுவதற்கும், அதன் தொழில் பயிற்சி மையத்திற்கு தையல் இயந்திரங்களை வாங்குவதற்கும் முயற்சித்து வருகிறது. பெண்களின் வருமானத்தைப் பெருக்க அவர்களுக்கு தையல் பயிற்சி அளிக்க விரும்புகிறோம்; அவர்கள் எங்கள் மையத்தில் உள்ள தையல் இயந்திரங்களைப் பயன்படுத்தி தங்கள் வாடிக்கையாளர்களுக்கு துணி களை தைக்கலாம், என்கிறார் முபிகா.

ப்ராஜெக்ட் மைண்ட்ஸ்ட்ராங் குழந்தைகள் உணர்ச்சி ரீதியாக முதிர்ச்சியடைய உதவியது மேலும் அவர்கள் அனைவரும் தொகுப்பு சங்கத்தின் ரோட்டேரியர்களுடன் தொடர்புகொள்வதில் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்பதை என்னால் பார்க்க முடிந்தது, என்கிறார் முபிகா.

ஒரு சிறுவன் 'எனக்கு அமைதி வேண்டும்' என்று ஒரு அட்டையை வைத்திருந்தான்.''

கோபத்தை நிர்வகித்தல் பற்றிய அமர்வைக் குறிப்பிடும் சங்கீதா, குறிப்பாக பதின்ம வயதினரின் கோபப் பிரச்சினை களைத் தீர்ப்பது மிகவும் முக்கியம் என்கிறார்.'' இந்த குழந்தைகள் தாங்கள் வாழும் உலகில் நிறைய அநீதிகளைக் காண்கிறார்கள் மற்றும் தவறான செயல்களைத் தீர்க்க இயலாமல் போவது அவர்களின் பிற்கால வாழ்க்கையில் வன்முறை நடத்தையைத் தூண்டக்கூடும்.

சங்கீதா ஒரு ஒருங்கிணைந்த சிகிச்சை ஆலோசகர் மற்றும் TCS-ல் ஆரோக்கிய துறைக்கு தலைமை தாங்குகிறார். மன ஆரோக்கியம் என்பது ஒரு பெரிய சவாலாக இருக்கிறது, குறிப்பாக இளைஞர்களுக்கு. கவலை, மனச்சோர்வு மற்றும் கோபத்தைப் புரிந்துகொள்வதற்கும் அவற்றைப் போக்குவதற்கும், நேர்மறையான மனநிலையை வளர்ப்பதற்கும் நாங்கள் தொடர்ந்து மனநல ஆரோக்கிய நிகழ்ச்சிகளை நடத்துகிறோம். MSW மாணவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கு மனநல உதவியாளர்களாக தன்னார்வத் தொண்டு செய்ய நாங்கள் பயிற்சி யளிக்கிறோம். அவர்கள் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் PHCகளுக்குச் சென்று மனநல பிரச்சனைகள் உள்ளவர்களைக் கண்டறிந்து மனநல ஆதரவை வழங்குகிறார்கள் என்று பிந்து கூறுகிறார்.

கடந்த ஆண்டு பட்டயப்படுத்தப் பட்ட இ-கிளப்பில் கனடா மற்றும் அமெரிக்காவில் இரண்டு உறுப்பினர்கள் உட்பட தற்போது 12 உறுப்பினர்கள் உள்ளனர்.''

நிகழ்ச்சியின் போது அகதி குழந்தைகளுக்கு புத்தகங்கள், குறிப்பேடுகள், எழுதுபொருட்கள், கலைப் பொருட்கள் மற்றும் சிற்றுண்டிகளை வழங்குவதற்காக உகாண்டா ரோட்ராக்ட் கிளப்பிற்கு சங்கம் நிதி வழங்கியது. இந்த ஆண்டு ரோட்டேரியர்கள் முகாமில் பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வாங்குவதற்கு நிதியளிக்க திட்டமிட்டுள்ளனர். ஆனால், ஆப்பிரிக்க நாட்டிற்கு பணத்தை அனுப்புவது அவ்வளவு எளிதானது அல்ல, பரிமாற்றக் கட்டணங்கள் மிகவும் அதிகம். ரோட்ராக்டர்களுக்கு பணம் சென்றடைய சுமார் 10 நாட்கள் ஆகும் என்கிறார் பிந்து.■

# RC பிலாஸ்பூர் பெண் கைதிகளை மகிழ்விக்கிறது

ரஷீதா பகத்

2000ஆம் ஆண்டில் சத்தீஸ்கர் உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றியதால், RC பிலாஸ்பூர், RID 3261இன் தலைவர் ஹமிதா சித்திக், பிலாஸ்பூர் மத்திய சிறைக்குச் செல்வதற்கு ஏராளமான வாய்ப்புகளைப் பெற்றார். பெண் கைதிகளில் பெரும்பாலானவர்கள் - மொத்தம் 208 பேர் - மனச் சோர்வடைந்த நிலையில் இருப்பதையும், அவர்களுடன் வாழ அனுமதிக்கப்பட்ட 6 வயதுக்குட்பட்ட இளைய குழந்தைகள் மிகவும் மகிழ்ச்சியற்றவர்களாகவும், அடிப்படை மனித உரிமைகளை இழந்தவர்களாகவும் உள்ளனர்'' என்று அவர் அங்கு கண்டறிந்தார்.

கடுமையான மனச்சோர்வு, துன்பம், வலி, மகிழ்ச்சியின்மை மற்றும் பொதுவான அதிருப்தி போன்ற பல எதிர்மறைகளை மத்திய சிறைச்சாலை வெளிப்படுத்தியதால், இந்த துரதிர்ஷ்டவசமான பெண்கள் மற்றும் குழந்தைகளின் வாழ்க்கையில் சில மகிழ்ச்சியை எவ்வாறு ஏற்படுத்த முடியும் என்று அவர் யோசிக்க ஆரம்பித்தார்.

அப்படித்தான் ப்ராஜெக்ட் குஷி பிறந்தது.

ரோட்டரி நியூஸிடம் பேசிய ஹமீதா, பிலாஸ்பூர் சிறையில் இருக்கும் பெரும்பாலான பெண் கைதிகள் கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டவர்கள் என்றும், சிறை கையேடு 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளை அவர்களுடன் தங்க அனுமதிக்கிறது என்றும் கூறினார்; மூத்த குழந்தைகள் அருகில் உள்ள ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனத்தால் பராமரிக்கப்படும் ஒரு முகாமில் தங்கவைக்கப் பட்டுள்ளனர். மொத்தமாக 20 இளைய குழந்தைகளும், 13 மூத்த குழந்தைகளும் அங்கே உள்ளனர்.

பொதுவாக சிறைக்குள்

*பெண் கைதிகளை மகிழ்விக்க ஒரு நாடகம்.*





சென்று கைதிகள் மற்றும் அவர்களது குழந்தைகளுடன் உரையாடுவது எளிதல்ல. ஆனால் அவர் ஒரு வழக்கறிஞர் மற்றும் சட்டீஸ்கர் மாநிலத்தின் துணை அட்வகேட் ஜெனரல் என்பதால், அவர் சத்தீஸ்கர் மாநில சட்ட சேவைகள் ஆணையத்தின் ( CSLSA) தலைவர் நீதிபதி கௌதம் பாதுரியை அணுகி, “RC பிலாஸ்பூரின் தலைவராக நான் வரும் ஆண்டில் சிறை கைதிகளான பெண்கள் மற்றும் குறிப்பாக அவர்களின் குழந்தைகளுக்காக நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்ய விரும்புகிறேன். பாடுவதற்கும் நடனமாடுவதற்கும், தெரு நாடகம் பார்ப்பதற்கும், ரங்கோலி வரைவதற்கும், சில கலாச்சார நிகழ்ச்சிகளை ரசிப்பதற்கும், நிகழ்ச்சி களை நடத்துவதற்கும், ஓவியப் போட்டியில் பங்குபெறுவதற்கும் கிடைக்கும் ஒரு வாய்ப்பின் மூலம் அவர்களின் இருண்ட வாழ்வில், குறைந்தது ஒரிரு நாட்களுக்கு, சில மகிழ்ச்சியைக் கொண்டுவர இது முயற்சிக்கும் என்று கூறினேன்,” என ஹமீதா நினைவு கூர்ந்தார்.

சிறை வளாகத்தில் இதுபோன்ற நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய நீதிபதி அவருக்கு உடனடியாக அனுமதி அளித்தார். திட்டத்தின் விவரங்களைக் கொடுப்பதற்கு முன், பெரும்பாலான பெண்கள் தங்கள் கணவனைக் கொலை செய்வது போன்ற கடுமையான குற்றத்தைச் செய்த தீவிர நிலைமைகளைப் புரிந்துகொள்வது அவசியம் என்று அவர் கூறுகிறார். பல ஆண்டுகளாக, அவர்களில் பெரும்பாலோர் தங்கள் கணவர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களால் இழைக்கப்பட்ட கொடுமைகளால் அமைதியாகவும் உதவியற்றவர்களாகவும் அவதிப் படுகிறார்கள். குடித்துவிட்டு வீட்டிற்கு வரும் கணவனின் கொடுமையையும், வன்முறையையும் அவர்கள் சந்திக்க வேண்டியுள்ளது; “அவர்கள் குழந்தைகளை கவனித்துக் கொள்வதில்லை மற்றும் வீட்டிற்கும் அல்லது குழந்தைகளுக்குமான தங்கள் பொறுப்புகளை நிறைவேற்று வதில்லை.” பெரும்பாலான நேரங்களில், விரக்தியில், பெண் யாருடைய கைகளில் இத்தகைய சித்திரவதைகளை அனுபவித்தாரோ, அந்த ஆணைக் கொன்றுவிடுகிறாள். குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள குடும்ப உறுப்பினர்கள் யாரும் முன்வராத நிலையில், அவர்கள் கைதிகள் இல்லை என்றாலும், அவர்கள் தாயுடன் சிறையில் அடைக்கப்படுகிறார்கள்.

ஆனால், குழந்தைகள் உண்மையில் கூண்டில் அடைக்கப் பட்ட உயிரினங்கள் போல் உள்ளனர், எந்த குழந்தையும் வளரக்கூடாத சூழலில் அவர்கள் வளர்கின்றனர். “மனச்சோர்வடைந்த சில பெரிய பெண்களுடன் நான் உரையாடினேன், அவர்கள் பார்வையில் வெறுமை மற்றுமே இருக்கிறது நீங்கள் அவர்களிடம் என்ன பேசினாலும், அந்த வார்த்தைகள் இருண்ட, வெற்று இடத்தில் தான் விழுகின்றன” என்று அவர் கூறுகிறார்.

மனச்சோர்வடைந்த பெண் களுக்கும் குழந்தைகளுக்கும் உளவியல் ஆலோசனைகள் கிடைக்கவில்லையா என்று கேட்டதற்கு, அவர் சிரித்துக் கொண்டே கூறுகிறார்: ஆம், இது

அனைத்தும் பெயருக்காக இருக்கிறது, ஆனால் பெரும்பாலானவை இயந்திரத்தனமானவை மேலும் தாய் மற்றும் தந்தை கொடுக்கும் கவனிப்புக்கு அவை நிகரில்லை. உணர்திறன் கொண்ட கண்களால் மட்டுமே இதைக் காண முடியும்; நிலவும் மனச்சோர்வை உங்களால் பார்க்க முடியவில்லை என்றால், எப்படி அதற்கு நிவாரணம் அல்லது சிகிச்சை அளிப்பீர்கள்?''

இந்த பின்னணியில், ஹமீதா தனது சங்க உறுப்பினர்களுக்கு இரண்டு நாள் ப்ராஜெக்ட் குஷியை திட்டமிட்டு செயல்படுத்தும் யோசனை பற்றி தெரிவித்தார். ஹமீதா தனிப்பட்ட முறையில் நிதியுதவியை ஏற்பாடு செய்ததாலும், பல சங்க உறுப்பினர்கள் நிகழ்ச்சிக்கு தேவையான உடைகள், குழந்தைகளுக்கான பரிசுகள், ஓவியம் மற்றும் ஓவியப் போட்டிகளுக்கான எழுதுபொருட்கள் மற்றும் தேவையான பிற பொருட்களைப் பரிசளித்து ஆதரவளித்ததன் மூலம், பிலாஸ்பூர் மத்திய சிறை மே மாதத்தில இரண்டு நாட்களுக்கு முற்றிலும் மாறி காட்சியளித்தது.

திருமண விழா நடப்பது போல சிறைச்சாலை விளக்குகளாலும் மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அந்த பெண்கள் வெளிப்படுத்திய மகிழ்ச்சியை நீங்கள் பார்த்திருக்க வேண்டும்; அவர்கள் செய்த கொடூரமான குற்றங்களின் காரணமாக அவர்களை வெளியே அழைத்து வரமுடியாது, ஆனால் மிகவும் சோகமான, இருண்ட மற்றும் மனச்சோர்வு நிறைந்த, மற்றும் எதிர்காலத்திற்கான சிறிய நம்பிக்கை கூட இல்லாத ஒரு வாழ்க்கையிலிருந்து நிச்சயமாக அவர்களுக்கு இரண்டு நாட்கள் மகிழ்ச்சியைக் கொடுக்க முடியும்.

இந்தியாவில் எந்த சிறையிலும் இது போன்ற நிகழ்வு நடப்பது இதுவே முதல்முறை என்று கூறும் ஹமீதா, பெண்கள் அறை முழுவதும் ஒளிரும் வண்ணத்துடன் அலங்கரிக்கப்பட்டதாக கூறுகிறார். யோகா மற்றும் தியானத்துடன் அந்த நாள் தொடங்கியது. பாடுதல், நடனம், மெஹந்தி மற்றும் ரங்கோலி போன்ற பல்வேறு போட்டிகளில் பெண்கள் கலந்து கொண்டனர், ''மேலும் அவர்கள் எவ்வளவு திறமையானவர்கள், குறிப்பாக



*பாடல் நிகழ்ச்சி.*

பாடுதல் மற்றும் நடனத்தில் என்பதை கண்டு நாங்கள் ஆச்சரியப்பட்டோம்.

குழந்தைகளுக்கு, நிறைய வேடிக்கை மற்றும் உல்லாசங்கள் இருந்தது. அவர்கள் நடனம், ஓவியம் வரைதல், மார்பிள் பந்தயம், ஃபான்சி ஆடை போட்டி போன்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். இரண்டாம் நாள் பொம்மலாட்டம் மற்றும் மேஜிக் ஷோவை வெகுவாக ரசித்தனர். பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு தையல் இயந்திரங்கள், புத்தகங்கள், படிக்கும் பொருட்கள், எழுது பொருட்கள் மற்றும் கிரேயன்கள், பந்துகள், மட்டைகள், கேரம் போர்டு, பேட்மிண்டன் ராக்கெட்டுகள் போன்றவை வழங்கப்பட்டன. குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு சிறு நூலகமும் அமைக்கப்பட்டது.

குரு காசிதாஸ் பல்கலைக் கழகத்தின் பிகேவியர்ஸ் கிளப் மூலம் மனச்சோர்வு மற்றும் போதைப்பொருள் துஷ்பிரயோகத்தின் ஆபத்தான மற்றும் தீவிரமான பிரச்சினை குறித்து நாடகம் நடத்தப்பட்டது. நீதிபதி பாதுரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் காவல்துறையினர் மற்றும் சிறைக் கண்காணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



ஃபான்ஸி ஆடை போட்டியில் குழந்தைகள்.

ஆனால் இது ஒருமுறை நடக்கும் நிகழ்வாக மற்றும் இருக்குமா, அப்படியானால் குழந்தைகளின் எதிர்காலம் என்னவாகும் என்று ஹமீதாவிடம் கேட்டேன். “இந்த ஆண்டும் இத்திட்டத்தை மீண்டும் செய்ய விரும்புகிறேன், மேலும் இந்த ஆண்டு சங்கத்தலைவர்களுடன் விவாதிக்கிறேன். இந்த நிகழ்வு நிரந்தரமாக நடத்தப்பட்டால் நன்றாக இருக்கும், அந்த பெண்களுக்கு இது போன்ற ஏதாவது ஒன்று தேவை. அவர்களின் பொழுதுபோக்கிற் காக நாங்கள் அவர்களுக்கு ஒரு ஹார்மோனியத்தை பரிசாக அளித் தோம் என்று ஹமிதா கூறுகிறார்.



RC *பிளாஸ்பூரின் முன்னாள் தலைவர் ஹமீதா சித்திகி தையல் மிஷின்களை*
CSLSA *தலைவர் நீதிபதி கௌதம் பாதுரி முன்னிலையில் வழங்குகிறார்.*



*யோகா மற்றும் தியானம் நிகழ்ச்சி.*

அப்போது தான், ஹமீதா ஒரு குழப்பமான சூழலை பற்றி விவரிக்கிறார்; பாலின பாகுபாடு. “ இதில் முரண்பாடு என்னவென்றால், ஆண் கைதிகள் ஒப்பீட்டளவில் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். அவர்களுக்காக தையல் இயந்திரங்கள், ஹார்மோனியங்கள் போன்ற பல விஷயங்கள் இருக்கிறது. மேலும் அவர்கள் சிரிப்புடனும், வேடிக்கையாகவும் காணப்படுகின்றனர், ஆனால் பெண்கள் பிரிவு புறக்கணிக்கப்படுகிறது மற்றும் அவர்கள் வெளிப்படையாக மகிழ்ச்சியற்றவர்களாக உள்ளனர். நான் மூன்று மகள்களின் தாய்; பெண்களின் பிரச்சினைகள் எனக்கு மிகவும் முக்கியம் என்று அவர் மேலும் கூறினார்.

இந்த வழக்கறிஞர் இப்போது அருகில் உள்ள கட்டிடத்தில் வசிக்கும் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தால் பராமரிக்கப்படும் வளர்ந்த குழந்தைகளுக்கு எப்படி உதவுவது என்று யோசித்து வருகிறார். அவர் வளர்ந்த குழந்தைகளை ஆதரிக்க முயற்சிக்கிறார்; இங்கிருந்து சில குழந்தைகளை வெளியே அழைத்துச் சென்று விடுதிகள் மற்றும் பள்ளிகளில் சேர்க்க வேண்டும். அவர்களின் தோற்றம் அல்லது வேர்கள் பற்றி அவர்களுக்குத் தெரியாது; அவர்கள் சார்ந்த மதம் மற்றும் சமூகம் பற்றியும் தெரியாது. மதப் பிளவுகள் நல்லது என்று நான் சொல்லவில்லை, ஆனால் ஒரு அடையாளத்தைக் கொண்டிருப்பதும் உங்கள் வேர்களை அறிந்து கொள்வதும் நல்லது. உணர்ச்சி ரீதியாக, அவர்கள் மிகவும் குழப்பமடைந்துள்ளனர்... எல்லோரும் வந்து அவர்களுக்கு எதையாவது கொடுக்கிறார்கள். எப்போதும் மக்களிடம் இருந்து பொருட்களை பெறுவதில் அதிக கண்ணியம் இல்லை. அவர்கள் விடுதி அல்லது உறைவிடப் பள்ளியில் மரியாதையுடன் வாழ வேண்டும்.

பெற்றோர்கள் இல்லாமல் குழந்தைகள் முற்றிலும் மாறுபட்ட வாழ்க்கை முறையைக் கொண்டுள்ளனர். அவர்களுக்கு உணர்ச்சிகரமான தொடர்புகள் இல்லை; இயந்திரத்தனமாக அவர்களுக்கு உணவு, தூக்கம், படிப்பு மட்டும் உள்ளது, ஆனால் கவனிப்பு, பாசம் மற்றும் பாதுகாப்பு இல்லாமல் போனால் அவர்கள் எதிர்கால குற்றவாளிகளாக மாறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. எல்லா தொடர் கொலைகாரர்களுக்கும் மிகவும் தொந்தரவு மிகுந்த குழந்தைப் பருவம் இருப்பதை நாம் அறிவோம்'' என ஹமீதா மேலும் கூறுகிறார்:

முன்னால் உள்ள பணி கடினமானது, ஆனால் குறைந்தது இரண்டு நாட்களுக்கு சங்கம் பெண்களை மகிழ்ச்சியடையச் செய்ய முடிந்ததில் அவர் மகிழ்ச்சியடைகிறார். ஊடகங்கள் இந்த நிகழ்வை பரவலாக பதிவு செய்தனர் மற்றும் பெண்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். அவர்களில் ஒருவர் ''எங்களைப் பற்றி நினைத்ததற்கு நாங்கள் உங்களுக்கு போதுமான நன்றி சொல்ல முடியாது' என்று கூறியது என்னை மிகவும் கவர்ந்தது. மீடியா கவரேஜைப் பார்த்து, ''பத்திரிகைகள் எங்களைப் பற்றி எழுதும்



*நீதிபதி பாதுரி மற்றும் ஹமீதா பெண் கைதிகள் வரைந்த கோலங்களை ரசிக்கின்றனர்.*




அளவுக்கு நீங்கள் எங்களுக்கு மரியாதை கொடுத்துள்ளீர்கள்'' என்று மற்றொருவர் கூறினார். ஜாமீன் நிராகரிக்கப்பட்ட பெண்களுக்கு உதவ எங்களால் பெரிதாக எதுவும் செய்ய முடியவில்லை அவர்களில் சிலர் 14 ஆண்டுகளாக இங்கு இருக்கிறார்கள். ஆனால் எங்கள் சங்கம், இந்தத் திட்டத்தின் மூலம், தங்கள் அடையாளத்தை இழந்தவர்களை அடையாளம் காண முடிந்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த கட்டுரையை ஒரு புன்னகையுடன் முடிப்போம். ஃபான்ஸி ஆடை போட்டியின் போது குழந்தைகளில் ஒருவர் ஹிந்தி திரைப்படத்தின் பிரபலமான காட்சியின் தாமதமான நீதி பற்றிய உன்னதமான உரையாடலை பேசி நடித்தார்: நமக்கு நீதிமன்றங்களில் கிடைப்பதெல்லாம் தேதிகள் மட்டும் தான்; நீதி அல்ல. அந்த நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய நீதிபதி பாதுரி இதை கேட்டு சிரித்தார்!■

# பரோபகாரத்தில் ஒரு பயணம்

**ராஜேந்திர சாபூ**

ஒரு ரோட்டேரியனாக எனது பயணம் பலரால் பாதிக்கப்பட்டது. சிலர் எனக்கு அற்புதமான ஆலோசனை வழங்கினர், மற்றவர்கள் தாராளமாக நன்கொடைகள் அளித்தனர். என் வாழ்க்கையின் எட்டு தசாப்தங்களை நான் திரும்பிப் பார்க்கும்போது, எனது பணி என்னை முதலில் கல்கத்தாவிற்கும் பின்னர் சண்டிகருக்கும் அழைத்துச் சென்ற போதும், நான் பிறந்த இடமான பிர்லாபூர் எவ்வாறு என் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகித்தது என்பதை என்னால் உணர முடிகிறது. அது என் கர்ம பூமி.

புகழ்பெற்ற தொழிலதிபரும் சுதந்திரப் போராட்ட வீரருமான G D பிர்லாவுடன் நெருக்கமான உறவைப் பகிர்ந்து கொள்ளும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. பிர்லாபூரில் பிறந்ததாலும், என் தந்தை பிர்லா சணல் ஆலையில் பணி புரிந்ததாலும், பிர்லா குடும்பத்துடன் பழகும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. நான் கல்கத்தாவில் ஹிந்துஸ்தான் மோட்டார்ஸில் இருந்த காலத்தில் தான் பிர்லா சகோதரர்களில் இளையவரான B M பிர்லாவை முதன் முதலில் சந்தித்தேன், அவர் புதுமையான கணக்கியல் முறையைப் பற்றிய விலைமதிப்பற்ற ஞானத்தை எனக்கு வழங்கினார்.

நான் எனது தொழில்முனைவுப் பயணத்தைத் தொடங்கியபோது, ஹிந்த் மோட்டார்ஸுக்குத் திரும்பினேன் மற்றும் இந்திய கார்ட் நூல் தயாரிப்பில் பங்களித்தேன். இந்த காலகட்டத்தில், பிர்லா பூங்காவில் ஆதித்ய விக்ரம் பிர்லா மற்றும் சுதர்சன் பிர்லா இருவருடனும் கிரிக்கெட் விளையாடும் மகிழ்ச்சி எனக்கு கிடைத்தது. நாங்கள் பகிர்ந்து கொண்ட தோழமை, நண்பர்களாகிய எங்கள் பிணைப்பை வலுப்படுத்தியது.

**பிலானி மற்றும் கல்கத்தாவிலிருந்து சண்டிகர் வரை:**

G D பிர்லாவின் வழிகாட்டுதலின் கீழ் வேலை மற்றும் சமூக சேவை சார்ந்த வாழ்க்கையை பின்பற்றி, எனது தந்தை உத்திரபிரதேசத்தின் ரேணுகூத்தில் இந்துஸ்தான்

*PRIP ராஜேந்திர சாபூ, ABCCIR தலைவர் ராஜஸ்ரீ பிர்லா, PRIP கல்யாண் பானர்ஜியின் மனைவி பினோட்டா ஒரு போலியோ சொட்டு மருந்து முகாமில்.*



அலுமினியம் லிமிடெட் நிறுவனத்தை நிறுவினார், அதில் மண்டேலியா ஒட்டு மொத்த நிர்வாகியாக பணியாற்றினார்.

1960ல், சண்டிகரில் க்ரோஸ்பெக்கர்ட் சாபூ என்ற ஊசி தொழிற்சாலையை நான் நிறுவியபோது, விதி எனக்கு ஒரு அசாதாரண சந்திப்பை அளித்தது. என் மாமனார் மண்டேலியா மற்றும் எனது தந்தை சாபூ ஆகியோருடன் G D பிர்லா அவர்கள் என் தொழிற் சாலைக்கு வருகை தந்தார். ரோட்டரியில் எனது ஈடுபாட்டை பற்றி குறிப்பிட்டபோது, நான் எனது நேரத்தை வீணடிப்பதாக அவர் தெரிவித்தார். இருப்பினும், RI இயக்குநராக நான் நியமனம் செய்யப்பட்டதை அவருக்குத் தெரிவித்தபோது அவரது பார்வை மாறியது, மேலும் அவர் என்னை உயர்ப்பதவியை இலக்காக கொள்ள ஊக்குவித்தார்.

மறைந்த G D பிர்லா, மகாத்மா காந்தியின் அறங்காவல் கருத்துக் களால் ஈர்க்கப்பட்டு, வணிக இலாபங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு தத்துவத்தை ஏற்றுக்கொண்டார். பிர்லா குழுமத்தின் நோக்கம் பயன்படுத்தப்படாத வளங்களை மேம்படுத்துதல், கல்வியை மேம்படுத்துதல் மற்றும் புதிய, சுதந்திர இந்தியாவை உருவாக்க பங்களிப்பதாகும். இந்த உறுதிப் பாட்டின் ஒரு பகுதியாக, குழுவின் இலாபத்தின் ஒரு பகுதியானது சமூகத்தின் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து மறு முதலீடு செய்யப்பட்டது.

1991–92ல் RI தலைவராக நான் இருந்த காலத்தில், குடும்பத்தின் பரோபகார பாரம்பரியத்தை தொடர்ந்து நிலைநிறுத்தி வந்த ஆதித்யா பிர்லா மற்றும் அவரது மனைவி ராஜஸ்ரீ பிர்லாவை சந்திக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. 2008இல், ராஜஸ்ரீ சிகாகோவுக்குச் சென்று கல்வி முயற்சிகளுக்காக ரோட்டரி அறக்கட்டளைக்கு $300,000 நன்கொடையாக வழங்கினார். இதைத் தொடர்ந்து, போலியோ ஒழிப்புக்காக G D பிர்லாவின் நினைவாக $1 மில்லியன் நன்கொடையை பரிசீலிக்குமாறு நான் அவரிடம்



**இடமிருந்து:** PRIP *சாபூ, மைக்ரோசாஃப்ட் துணை நிறுவனர் பில் கேட்ஸ் மற்றும் ராஜஸ்ரீ பிர்லா.*

கேட்டுக் கொண்டேன், அதற்கு அவர் உடனடியாக ஆதரவளித்தார்.

ராஜஸ்ரீயின் நன்கொடை குறித்த அறிவிப்பு எவன்ஸ்டனில் உள்ள தலைமையகத்தில் ஒரு ரோட்டரி நிகழ்வில் வழங்கப்பட்டது. அதில் முக்கிய ரோட்டரி தலைவர்கள் கலந்து கொண்டனர். அடுத்த நாள், அவரைக் கௌரவிக்கும் வகையில் ஒரு பெரிய விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது.

சமூகப் பணிக்கான ராஜஸ்ரீயின் அர்ப்பணிப்பு பணப்பங்களிப்பு களுக்கு அப்பாற்பட்டது. அவர் புனேவில் ஆதித்யா பிர்லா நினைவு மருத்துவமனையை நிறுவி, அத் தியாவசிய சுகாதார சேவைகளை வழங்கி, சமூகத்தின் நல்வாழ்வுக்கு பங்களித்தார். கூடுதலாக, மருத்துவ முகாம்களை நடத்துதல் மற்றும் போலியோ தடுப்பூசிகளை வழங்குதல் போன்ற சுகாதாரப் பாதுகாப்பு முயற்சிகளில் அவரது பணி, அவரது தனிப்பட்ட ஈடுபாடு மற்றும் மக்களின் வாழ்க்கையை மேம் படுத்துவதற்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியது.

போலியோவுக்கு எதிரான போராட்டத்தில் அவர் முன்னணி நபராக இருந்து வருகிறார், மொத்தமாக $15 மில்லியன்களை போலியோ ஒழிப்பு முயற்சிகளுக்கு நன்கொடையாக அளித்துள்ளார். $1 மில்லியன் வருடாந்திர பங்களிப்பில் தொடங்கி, 2014-இல் இந்தியா போலியோ இல்லாத நாடாக அறிவிக்கப்பட்ட பிறகும் அவர் தனது ஆதரவைத் தொடர்ந்தார், உலகம் இந்த நோயிலிருந்து விடுபடும் வரை நன்கொடை அளிப்பதாக உறுதியளித்தார்.

ஆதித்யா பிர்லா சமூக முன்முயற்சி கள் மற்றும் கிராமப்புற மேம்பாட்டு மையத்தின் (ABCCIR) தலைவராக, கல்வி, வேலைவாய்ப்பு, குடிநீர், பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் கிராமப்புற ஏழைகள் மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு உதவி செய்வதில் கவனம் செலுத்தல் என பல தொண்டு மற்றும் சமூக முயற்சி களை மேற்பார்வையிடுகிறார். ABCCIR மூலம், உலகளவில் 3,000 கிராமங்களில் சுமார் 7 மில்லியன் மக்களுக்கு உதவியுள்ளார், குறிப்பாக தாய்லாந்து மற்றும் எகிப்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத் தியுள்ளார்.

ராஜஸ்ரீயின் பரோபகார முயற்சிகள் போலியோ ஒழிப்புக்கு அப்பாற்பட்டவை. பெண் சிசுக்கொலையை எதிர்த்துப் போராடுவதற்கு, பாப்புலேஷன் ஃபர்ஸ்ட் போன்ற அமைப்புகளுடன் அவர் தீவிரமாக ஒத்துழைத்து, அவர்களின் ஆசிய பசிபிக் மற்றும் உலகளாவிய குழுக்களில் பணியாற்றுகிறார். பல இந்திய கிராமங்களில் சமூகத் தடைகளை எதிர்த்து விதவை மறுமணத்திற்காகவும் அவர் வாதிடுகிறார்.

இந்தியன் எக்ஸ்பிரஸில் முதலில் வெளியானது.

எழுத்தாளர் ரோட்டரி இன்டர்நேஷனலின் முன்னாள் தலைவர்

# தபால்தலைகளை சேகரிக்கும் மும்பை ரோட்டேரியன்

ரஷீதா பகத்

இந்த ரோட்டேரியன் 100 மாத காலம் ரோட்ராக்ட்டில் இருந்ததற்காக பெருமைப்படுகிறார். ஐந்து கண்டங்களைச் சேர்ந்த 50-க்கும் மேலான நாடுகளின் சார்பில் முதல்நாள் வெளியிடப்பட்ட தபால் தலைகளை சேகரித்து வைத்துள்ளார்.

கடந்த 30 ஆண்டுகளாக ரோட்டரி தபால்தலைகள் மற்றும் முத்திரை தபால் உறைகளைச் சேர்த்து வைத்துள்ள பரத் மெர்ச்சன்ட, RID 3141-க்கு உட்பட்ட பாம்பே ஸீஃபேஸ் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர். ரோட்டரி தபால்தலைகளை விரும்பி ஆர்வமுடன் சேகரித்து வரும் இந்த ரோட்டேரியனின் அரை நூற்றாண்டுக்கு முந்தையது.

நான் பாம்பே ரோட்ராக்ட் சங்கத்தின் தலைவராக இருந்த போது கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். பம்பாய் நகரின் முதல் ரோட்ராக்ட் சங்க நிறுவன இயக்குநராக இருந்தேன். என் சகோதரர் நிறுவனத்தலைவராக இருந்தார்.

நானோ அல்லது எனது நண்பர்களோ பயணம் செய்யும் போதெல்லாம் ரோட்டரி தபால்தலை அல்லது முதல்நாள் முத்திரையிட்ட உறை பற்றி விசாரிப்போம். ஆனால், எனக்கு அதில் முழு வெற்றி கிடைக்கவில்லை. இரண்டு வருடங்களில் ஒரு தபால்தலை அல்லது முத்திரையிடப்பட்ட உறை கிடைத்தது என்று அவர் கூறினார்.

அடுத்தடுத்த ஆண்டுகளில் மெர்ச்சென்ட் தொழிலில் கவனம் செலுத்தியதால் 1997-ஆம் ஆண்டில்தான் பாம்பே ஸீஃபேஸ் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினரானார். முழுநேர ரோட்டேரியனாக மாறிய



*RC பாம்பே ஸீஃபேஸ் உறுப்பினர் பரத் மெர்ச்சன்டின் ரோட்டரி முத்திரை தபால் உறைகள் சேகரிப்பு.*

அவர், ரோட்டரி தபால்தலைகள் சேகரிப்பில் மீண்டும் கவனம் செலுத்தினார். அவரும் அவரது நண்பர்களும் வெளிநாடுகளுக்குச் செல்லும்போதெல்லாம், ரோட்டரி தபால்தலைகள் பற்றி விசாரித்து அவற்றை வாங்கி சேகரிக்கத் தொடங்கினார். ஆனால், ரோட்டரி தபால்தலை மற்றும் முத்திரை உறைகளை வாங்குவதற்கு சிறந்த வழி தபால்தலை விற்பனை நிலையங்கள்தான் என்பதை விரைவில் உணர்ந்து கொண்டார். பாம்பேயில் உள்ள தபால்தலை விற்பனையாளர் ஒருவர் தபால்தலைகள் சேகரிப்பில் எனக்கு இருக்கும் ஆர்வத்தை பார்த்துவிட்டு ரோட்டரி தபால்தலை வெளியீடு அல்லது அவை கிடைக்கும்போதெல்லாம் எனக்கு தகவல் தெரிவிப்பார். நான் உடனே அவரை சந்தித்து அந்த தபால்தலைகளை வாங்கி விடுவேன்.

ஒருசில நேரங்களில் தபால்தலைக்காக ரூ.1000 கூட செலவழிக்க வேண்டி வரும். பழைய தபால் தலைகளுக்கு மவுசும் விலையும் அதிகம். தபால் தலையின் விலை எந்த நாடு என்பதையும், தேவையையும் பொறுத்தது.

தபால்தலை சேகரிப்பில் ஆர்வமுள்ள மெர்ச்செண்டிடம் இப்போது 500-க்கும் மேலான ரோட்டரி தபால் தலைகளும், 100-க்கும் மேலான முத்திரையிடப் பட்ட உறைகளும் இருக்கின்றன. அவர் வைத்திருக்கும் 1948-ஆம் ஆண்டுக்கு முந்தைய ரோட்டரி












மிகப் பழமையான 10-5-48 தேதியிடப்பட்ட பிரேசில் நாட்டு ரோட்டரி தபால் தலை.



பரத் மெர்ச்சன்ட் தன் தபால் உறை சேகரிப்புடன்.

தபால்தலை பிரேசில் நாட்டில் வெளியிடப்பட்டது (படத்தை பார்க்கவும்). பெரும்பாலான ரோட்டரி தபால்தலைகள் ஏதாவது ஒரு சிறப்பு நிகழ்வுகளில் வெளியிடப் பட்டதாகும். அதாவது ரோட்டரியின் வெள்ளிவிழா, பொன் விழா, வைர விழா நிகழ்வின்போது வெளியிடப் பட்டவை. சில தபால் தலைகள் ரோட்டரி சிறப்பு மாநாடு, எவரெஸ்ட் மலையேறும் நிகழ்வு, போலியோ பிளஸ் நிகழ்வுகளில் வெளியிடப் பட்டவை. 2005-ஆம் ஆண்டில்தான், அதாவது ரோட்டரி நூற்றாண்டு விழாவின்போதுதான் இந்தியா உள்ளிட்ட நாடுகளில் அதிக அளவில் தபால் தலைகள் வெளியிடப்பட்டன.

படிப்படியாக ரோட்டரி தபால் தலை சேகரிப்பில் ஆர்வம் குறையத் தொடங்கியதால் அவர் இப்போது தாம் சேகரித்த தபால்தலைகள் பாம்பே வெஸ்ட் ரோட்டரி சங்கத்திடம் கொடுப்பது குறித்து சிந்தித்து வருகிறார். மும்பையின் ஜூஹு பகுதியில் இந்த சங்கத்திற்கு சொந்த கட்டடம் உள்ளது. அங்கு நான் சேகரித்த தபால் தலைகளை காட்சிப்படுத்தலாம் என்கிறார்.

ரோட்டரி தபால் தலை சேகரிப்பதில் ஆர்வம் காட்டி வரும் மெர்ச்செண்டுக்கு இப்போது 70 வயதாகிறது. இந்தியாவில் நான் சென்ற ஒவ்வொரு நகரத்திலும் நடைபெறும் ரோட்டரி சங்க கூட்டத்தில் தவறாமல் கலந்துகொண்டு கொடியை பரிமாறிக்கொள்ள நான் தவறியதில்லை என்கிறார் மகிழ்ச்சியுடன் மெர்ச்செண்ட்.■

---

Rotary PEOPLE OF ACTION

# NGO மையத்துக்கு மடிக்கணினி நன்கொடை

ரோட்டரி செய்திக் குழு



விழாவில் சங்கத் தலைவர் ஸ்ரீரங் தேஷ்பாண்டெ, திட்ட இயக்குநர் சாதனா வாஜெ, மற்ற உறுப்பினர்கள், சினேஹன்கித் உதவி அமைப்புத் தலைவர் பரிமளா பட் பங்கேற்றனர்.■

கண் பார்வைக் குறைபாடு கொண்ட மாணவர்களுக்கு உதவும் வகையில், எழுத்துகளைக் குரலாக மாற்றுகின்ற காட்சி அல்லாத மடிக்கணினி அணுகல் (NVDA) என்ற மென்பொருளைக் கொண்ட ஒரு மடிக்கணினியையும், ஸ்மார்ட்ஃபோனுடன் இணைக்கக் கூடிய இரண்டு ப்ளூடூத் ஹெட்ஃபோன்கள், விசைப்பட்டை களையும் சினேஹன்கித் உதவி அமைப்பு என்ற NGOஆல் நடத்தப்படுகிற, டொம்பிவ்லி-யில் உள்ள ஸ்ரீ M K சௌத்ரி நினைவு மையத்துக்குக் கொடையளித்தது RC தானே வெஸ்ட், RID 3142. இந்தப் பொருட்கள் கண் பார்வைக் குறைபாடுள்ள 40க்கும் மேற்பட்ட மாணவர்களுடைய கல்விக்குப் பயன்படும்.

முன்னாள் தலைவர் சுசித் கட்காரி உருவாக்கிய நன்கொடை நிறுவல் நிதியின் பலன்களின் மூலம் இந்தத் திட்டத்துக்கு நிதியளிக்கப்பட்டது. இந்தப் பொருட்களை வழங்கும்

# ரோட்டேரியன்களுக்கு மனிதாபிமான உணர்வு தேவை

ரோட்டரி செய்திக்குழு




*RC ரூப்நகர் தலைவர் நம்ரிதா பர்மர் சங்கம் சார்பாக ரூ.9.84 லட்சம் TRF-க்கு RID ராஜு சுப்ரமணியனிடம் அளிக்கிறார். உடன் PRIP ராஜேந்திர சாபூ மற்றும் அவர் மனைவி உஷாவும் உள்ளனர்.*

ஒரு ரோட்டேரியனின் வெற்றி மற்றும் மனநிறைவுக்கான உண்மையான அளவுகோல் விருதுகள் மற்றும் அங்கீகாரம் பெறுவது அல்ல, மாறாக சமூகத்தில் மக்கள் வாழ்வில் அர்த்தமுள்ள மற்றும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதுதான் என்று RI இயக்குநர் ராஜு சுப்பிரமணியன் RID 3080-க்கு உட்பட்ட ரூப்நகர் ரோட்டரி சங்கத்தின் புதிய தலைவர் நம்ரிதா பார்மரின் பதவியேற்பு நிகழ்ச்சியில் பேசுகையில் குறிப்பிட்டார். தனிப்பட்ட ஆதாயம் அல்லது அங்கீகாரத்தைவிட மற்றவர்களின் நலனில் அக்கறை செலுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். ஏழைகளின் துன்பத்தை போக்கவும், அவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தவும் முதன்மையான குறிக்கோளாக இருக்கும் மனிதாபிமானத்தை வளர்த்துக் கொள்வோம் என்று அவர் கூறினார்.

ரோட்டரி தலைவருக்கு இருக்க வேண்டிய இரண்டு முக்கிய குணங்கள் அடக்கம் மற்றும் பணிவு. ரோட்டரி தலைமைக்கு ஆணவம் மற்றும் ஈகோ இரண்டுக்கும் எந்த பங்கும் இல்லை. நாம் சிறிய சேவைகள் செய்வதன் மூலம் தேவைப்படும் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கிறோம் என்றார் அவர்.

ரோட்டேரியன்கள் தங்கள் அமைப்பை முதலில் நேசிக்க வேண்டும். அப்போது தான் எதையும் செய்ய முடியும் என்று கூட்டத்தில் பங்கேற்றவர்களை வலியுறுத்தி கேட்டுக்கொண்டார். இந்த நிகழ்ச்சியில் PRIP ராஜேந்திர சாபூ மற்றும் அவரது மனைவி உஷா ஆகியோரும் பேசினர்.■

# 2025–26 RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் டி கமர்கோ



RC சான்டோ அன்ட்ரெ, சாவொ பௌலொ, பிரேசில் உறுப்பினரான மரியோ செசர் மார்டின்ஸ் டி கமர்கோ பரிந்துரைக்கும் குழுவால் 2025–26 RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். வேறு போட்டியாளர்கள் இல்லாவிட்டால், செப்டம்பர் 15 அன்று அவர் அலுவல்பூர்வமாக நியமிக்கப்படுவார்.

டி கமர்கோ உச்சத்திலிருந்து கீழ்நோக்கிப் பணியாற்றுவதன்மூலம் ரோட்டரியின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்தத் திட்டமிடுகிறார். “இன்றைக்கு உறுப்பினர்கள் மற்றும் நிதிக்கு ரோட்டரி வலுவான போட்டியைச் சந்திக்கிறது. நாம் இந்தப் பிராண்டைப் புதுப்பிக்கவேண்டும், குறிப்பாகச் சில பகுதிகளில் இதற்கான கூடுதல் தேவை உள்ளது. RI தலைவர் உலகெங்கும் உள்ள ரோட்டரியன்களிடம் பேசுவதற்கு நாம் பல மேம்படுத்தப்பட்ட சந்திப்புக் கருவிகளைப் பயன்படுத்தவேண்டும். நம்முடைய மிகப் பெரிய சொத்துகளை நாம் வலியுறுத்துவோம். அது, நம்முடைய 1.4 மில்லியன் தன்னார்வலர்கள்” என்கிறார் இவர்.

நியமிப்புகள் மற்றும் ஆட்சிக்கான ரோட்டரியின் செயல்முறையை மேம்படுத்தவும் இவர் விரும்புகிறார். “ரோட்டரி குறிப்பிட்ட பொறுப்புகளுக்குத் தன்னார்வலர்களை நியமிக்க இன்னும் வெளிப்படையான, தெளிவான அளவுகோல்களைக் கொண்ட, பலன்களைத் தரவு அடிப்படையில் மதிப்பிடுகிற ஓர் அமைப்பைப் பின்பற்ற வேண்டும்.”

இவர் தன்னுடைய ரோட்டரி சங்கம் ஆதரிக்கிற, ஒவ்வோர் ஆண்டும் 150,000 மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்குச் சேவையாற்றுகிற காசா டெ எஸ்பெரன்சா (நம்பிக்கை இல்லம்) என்ற மருத்துவ மனையின் வாரியத்தில் சேவையாற்றியுள்ளார்.

அமெரிக்கா, ஜெர்மனியில் படித்துத் தொழில் நிர்வாகம் மற்றும் சட்டத் துறைகளில் பட்டம் பெற்றுள்ள டி கமர்கோ 1980லிருந்து ரோட்டரியனாகச் சேவையாற்றிவருகிறார். இவர் ரோட்டரியில் இயக்குநர், அறங்காவலர், RI கற்றல் வழிநடத்துநர், குழு உறுப்பினர், தலைவர், செயல் படை உறுப்பினர் ஆகிய பொறுப்புகளில் சேவையாற்றியுள்ளார். இவரும் இவருடைய மனைவி டெனைஸும் TRF-யின் Major Donors மற்றும் Benefactors ஆவர்.■

*©Rotary.org*

# நடமாடும் மார்பக புற்றுநோய் கண்டறியும் மையம்

V முத்துகுமரன்

சென்னையில் உள்ள ஸ்ரீ இராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் கமலம் உடையார் நடமாடும் புற்றுநோய் கண்டறியும் வாகனத்தை ரோட்டரி இயக்குநர் அனிருத்தா ராய் சௌதுரி கொடியசைத்து தொடங்கிவைத்தார். மெட்ராஸ் வடபழனி ரோட்டரி சங்கம், மெட்ராஸ் வெஸ்ட் ரோட்டரி சங்கம் மற்றும் ஆஸ்திரேலியாவில் உள்ள ஹில்ஸ் கெல்லிவில்லி (RID 9685) இணைந்து $170,000 செலவில் இத்திட்டத்தை நிறைவேற்றியுள்ளன. லாப நோக்கற்ற குடும்ப அறக்கட்டளை வாகனத்துக்காக ரூ.30 லட்சம் வழங்கி யுள்ளது. ஆப்கானிஸ்தான், கென்யா, கானா நாட்டு குழந்தைகளுக்கு இதய அறுவைச்சிகிச்சைகள் ராய்ப்பூர், பெங்களூரு மற்றும் கொல்கத்தாவில் நடப்பதைப் போலவே சென்னையில் உள்ள ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ மனையிலும் நடத்தப்படலாம் என்று அவர் கூறினார். மேலும் IPDG N நந்தகுமார், தமது பதவிக்காலத்தில் ரூ.80 கோடி மதிப்பிலான சேவைத் திட்டங்களை நிறைவேற்றியதற்காக அவருக்கு பாராட்டுத் தெரிவித்தார். ஜாம்பியாவில் சமீபத்தில் 6 மில்லியன் டாலர் செலவில் தொடங்கப்பட்ட மலேரியா ஒழிப்பு திட்டத்தின் விளைவாக அங்கு இறப்பு விகிதம் வெகுவாக குறைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### மேலும் இரண்டு வாகனங்கள்

SRIHER அமைப்பின் கீழ் மார்பக புற்றுநோய் கண்டறியும் வாகனம் தொடங்கிவைக்கப்பட்டது மூன்றாவது திட்டமாகும். ஏற்கெனவே மெட்ராஸ் சென்ட்ரல் ஆதித்யா ரோட்டரி சங்கம் கடந்த 2022 மார்ச் மாதம் இதய நோய் கண்டறியும் சிகிச்சை வாகனத்தை அறிமுகப்படுத்தியது. மேலும் PDG ஸ்ரீதர் பதவிக்காலத்தில் 10 கருவிகளுடன் டயாலிஸிஸ் சிகிச்சை மையம் நிறுவப்பட்டது என்றார் IPDG N நந்தகுமார். இதயநோய் சிகிச்சை பராமரிப்பு வாகனம் ரூ.2 கோடியில் நிறுவப்பட்டது. இதன் மூலம் இதுவரை 10,000-த்துக்கும் மேலான நோயாளிகள் பயன்பெற்றுள்ளனர் என்று அவர் மேலும் கூறினார். நடமாடும் வாகனம் மூலம் மார்பக புற்றுநோயின் பல்வேறு நிலைகளை கண்டறியும் திட்டத்தை மேற்பார்வையிட்டுவரும் திட்ட ஒருங்கிணைப்பாளரும் மற்றும் ஸ்ரீ இராமச்சந்திரா பல்மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் தலைவருமான Dr தமிழ்ச் செல்வனுக்கு அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார். விரைவில் மேலும் மார்பக புற்றுநோய் கண்டறியும் இரு நடமாடும் வாகனங்கள் இயக்கப்படும் என்றும் அவர் கூறினார். சக்தி திட்டத்தின் கீழ் சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில் உள்ள அரசு மருத்துவமனைகள், பொது சுகாதார நிலையங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் நடத்திவரும் மருத்துவ கிளினிக்குகளுக்கு 10 மார்பக புற்றுநோய் கண்டறியும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் மார்பக புற்றுநோய் மற்றும் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் குறித்து பெண்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அது




*திட்ட துவக்க விழாவில் திட்ட ஒருங்கிணைப்பாளர் Dr தமிழ்ச்செல்வன், IPDG N நந்தகுமார், RC மெட்ராஸ் வடபழனி தலைவர் ஹேமா மணி, SRIHER துணை வேந்தர் Dr உமா சேகர், தமிழக சமூக நலத்துறை ஆணையர் V அமுதவல்லி மற்றும் சுமேதா நந்தகுமார்.*



RID *அனிருதா ராய்சௌத்ரியுடன்* RID 3233 DGE *மஹாவீர் போத்ரா,* PDG S *முத்துபழனியப்பன் மற்றும்* RID 3232 DG *ரவி ராமன்.*

தொடர்பான பரிசோதனையை முன்கூட்டியே செய்துகொள்ள வலியுறுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

DG ரவி ராமன், சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள ஏழை மக்களுக்கு உதவும் தனித்துவமான திட்டத்தை மூன்று சங்கங்கள் சேர்ந்து கூட்டாக நிறைவேற்றி வருவதை பாராட்டினார். மார்பக புற்றுநோய் மற்றும் கர்ப்பை வாய் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை புற்றுநோய் கண்டறியும் வாகனங்கள் மூலம் செயல்படுத்தும் ரோட்டரியின் திட்டத்தில் மாநில அரசும் சேர்ந்து செயல்பட தயாராக இருப்பதாக தமிழ்நாடு சமூக நலத்துறையின் ஆணையர் அமுதவள்ளி தெரிவித்தார். தேவைப்பட்டால் இந்த திட்டத்துக்கு உதவ மகளிர் சுய உதவிக் குழுக்களையும் துணை மருத்துவர்களையும் ஈடுபடுத்த தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். மார்பக புற்றுநோய், கர்ப்பப்பை வாய் புற்றுநோய் பரிசோதனை மற்றும் சிகிச்சைகள் குறித்த தகவல்கள் மக்களைச் சென்றடைய மாநிலத்தில் உள்ள 55,000 அங்கன்வாடிகள் பயன் படுத்தப்படும் என்றார்.

மருத்துவமனை ரோட்டரியுடன் இணைந்து 50-துக்கும் மேலான மருத்துவ மற்றும் பல்மறுத்துவ முகாம்களை நடத்தியுள்ளது. இதயநோய் கண்டறியும் நடமாடும் வாகனம் மூலம் நடத்தப்பட்ட பரிசோதனை மூலம் 284 நோயாளிகள் அறுவைச்சிகிச்சைக்காக கண்டறியப் பட்டு அவர்களுக்கு விருப்பமான மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக ரோட்டரி செய்திக்குழுவிடம் பேசிய மெட்ராஸ் வடபழனி ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்தவரும் திட்ட ஒருங்கிணைப்பாளருமான பூவராகன், சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாநகராட்சி, மருத்துவ மனைகள், பொது சுகாதார நிலையங்கள் மற்றும் சேவை அமைப்புகள் ஆதரவுடன் மார்பக புற்றுநோய் கண்டறியும் நடமாடும் வாகனம் மூலம் ஆண்டுக்கு 2,000 பெண்களுக்கு பரிசோதனை நடத்த இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது என்றார். PDGs-க்கள் ISAK நாசர், முத்துபழனியப்பன், முன்னாள் DRFC G அம்பலவாணன், DGE மஹாவீர் போத்ரா (RID 3233) மற்றும் DGN வினோத் சாரோகி (RID 3234) இத்திட்டத்துக்கு பங்களித்தமைக்காக பாராட்டப்பட்டனர்.■


**ROTARY NEWS PLUS**

படித்தீர்களா?

அல்லது உங்கள் e-mail-ல் உள்ள Junk folder-க்கு செல்கிறதா?




ஒவ்வொரு மாதமும் நாங்கள் **Rotary News Plus** என்னும் ஆங்கில ஆன்லைன் வெளியீட்டினை **ஒவ்வொரு உறுப்பினருக்கும்** e-mail மூலம் அனுப்புகிறோம்.

**Rotary News Plus** இதழை எங்கள் வளைத்தளமான *www.rotarynewsonline.org*-யிலும் காணலாம்.

# PRIP பானர்ஜியின் ரோட்டரி அருங்காட்சியகம்

வித்யோத்தமா ஷர்மா

முன்னாள் RI தலைவரான கல்யாண் பானர்ஜி, ரோட்டரியின் மிக உயர்ந்த பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதில் இருந்து, உலகம் முழுவதிலுமிருந்து தான் பெற்ற நினைவுப் பரிசுககளை கொண்டு ஒரு அழகிய காட்சிக் கூடத்தை உருவாக்கியுள்ளார்.

வாபியின் GIDC பகுதியில், நான்கு பக்கங்களிலும் அழகான தோட்டத்துடன் அலங்கரிக்கப் பட்டுள்ள ஒரு அழகான பங்களாவில் ஒரு விசாலமான அறை உள்ளது, இது இப்போது ரோட்டரி உலகின் சரித்திரத்தில் ஒரு பகுதியாக மாறிவிட்டது. ஏனெனில், கருபிகா என்று அழைக்கப்படும் அந்த பங்களாவின் மேல் தளத்தில் அமைந்துள்ள 750 சதுர அடி அறையில், PRIP கல்யாண் பானர்ஜியின் மிகவும் பிரபலமான தனிப்பட்ட அருங்காட்சியகம் உள்ளது. இந்தியாவில் கல்யாண் டா என்று அன்புடன் அழைக்கப்படும் பானர்ஜி, RI தலைவராக தேர்ந் தெடுக்கப்பட்ட நான்கு இந்தியர்களில் மூன்றாவது நபராவார், 2011–12-ல் ரோட்டரி உலகிற்கு அவர் தலைமை தாங்கினார்.

கல்யாண் பானர்ஜி கேலரி என்று அழைக்கப்படும் இந்த அருங் காட்சியகத்தில், நூற்றுக்கணக்கான பரிசுகள் நேர்த்தியான பிரிவுகளாக அமைக்கப் பட்டு, காட்சிக் கூடத்தில் பானர்ஜியின் ரோட்டரி பயணம் மற்றும் அந்த சுற்றுப் பயணங்களில் அவர் பெற்ற பரிசுகள் பற்றிய ஒரு கண்ணோட்டத்தை வழங்குகிறது. புகைப்படங்கள், தொப்பிகள், புத்தகங்கள், சிற்பங்கள், சான்றிதழ்கள், தட்டுகள், கோப்பைகள், சுவர் தொங்கல்கள், கலைப்பொருட்கள், சிலைகள், ஓவியங்கள், தரை விரிப்புகள், சால்வைகள், கொடிகள், ஆடைகள், டி ஷர்ட்கள் மற்றும் பல பொருட்கள் இடம் மற்றும் கவனத்திற்காக ஒன்றோடொன்று அங்கு போட்டியிடுகின்றன. காட்சி க்கூடத்தின் கருவாக ஒரு அடிப்படை மையமும், அதைச் சுற்றி அடுக்குப் பாதைகளும் உள்ளது. எந்த இடமும் காலியாக விடப்படவில்லை.

“இது முழுக்க முழுக்க என் மனைவி பினோட்டாவின் யோசனை” என்கிறார் பானர்ஜி. “பல ஆண்டுகளாக நாங்கள் பல பரிசு களையும் நினைவுச் சின்னங்களையும்

PRIP *கல்யாண் பானர்ஜி மற்றும் பினோட்டா (வலதிலிருந்து 3வது), இன்டீரியர் டிஸைனர் மோனா ஷா, யுனைடட் ஃபாஸ்ஃபரஸ் துணைத்தலைவர் சான்ட்ரா ஷ்ராஃப் மற்றும்* RC *வாப்பி முன்னாள் தலைவர் ப்ரஃபுல் திவானி ஆகியோருடன்.*





சேகரித்துள்ளோம். ஒரு நாள் அவர், “அவற்றை அட்டைப்பெட்டிகளில் அடைப்பதற்குப் பதிலாக ஏன் காட்சிப்படுத்தக்கூடாது?” என்றார். எங்கு சென்றாலும் RI தலைவருக்கு உலகம் எவ்வாறு வரவேற்பளித்தது என்பதைக் காட்ட விரும்பினார். TRF அறங்காவலர் (2001–05), பின்னர் RI தலைவர் மற்றும் TRF அறங்காவலர் தலைவராக (2016–17) இருந்தபோது அன்பு மற்றும் பாராட்டுக்கான அடையாளமாக தம்பதிகளுக்கு பரிசாக வழங்கப்பட்ட பல நினைவு பரிசுகளை அவர்கள் சேகரித்தனர்.

யோசனை சரியாக இருந்த போதிலும், பானர்ஜி தம்பதிக்கு அது எப்படி அமையும் என்று தெரிய வில்லை. அதை முன்னெடுத்துச் செல்ல அவர்களுக்கு ஒரு நிபுணரின் உதவி தேவைப்பட்டது. அந்த நிபுணர் மும்பையின் இன்டீரியர் டிசைனர்-கட்டிடக்கலைஞர்-மோனா ஷா ஆவார். பானர்ஜி வாபியில் உள்ள அவர்களின் பங்களாவின் போர்டிகோவின் மேல் பகுதியில் ஒரு விசாலமான அறையைக் கட்டினார்கள். மோனா வேலையை தொடங்கினார். “வடிவமைப்பிற்கான பாராட்டுக்கள் முழுவதுமாக மோனாவுக்குச் செல்ல வேண்டும்” என்று பானர்ஜி கூறுகிறார். “கண்காட்சி களை பல்வேறு பிரிவுகளாக வகைப்படுத்தி, பின்னர் அவற்றை எவ்வாறு ஏற்பாடு செய்வது என்று அவர் தான் முடிவு செய்தார். அவர் பினோட்டா மற்றும் என்னிடமிருந்து உள்ளீடுகளை பெற்றாலும், வடிவமைப்பு முழுவதுமாக அவருடைய படைப்பாகவே இருந்தது. காட்சிக் கூடத்தை மோனா ஷா வடிவமைத்திருந்தாலும், அதன் கட்டுமானம், தச்சு மற்றும் தளப்பாடங்கள் வடிவமைப்பு உள்ளிட்டவை பானர்ஜியின் உள்ளூர் சங்கமான RC வாபியைச் சேர்ந்த ரோட்டரியன் பிரஃபுல் திவானியால் கையாளப்பட்டது.

RI தலைவராக இருந்த பானர்ஜியின் பதவிக்காலம் முடிந்ததும் காட்சிக்கூடத்தின் பணிகள் தொடங்கப்பட்டன. 2015 முதல் செயல்படும் இது 2009–10, 2011–12 மற்றும் 2014–15 ஆண்டுகளின் பரிசுப் பொருட்களை கொண்டுள்ளது. “2013–14ல் என்னால் அதைச் செய்ய முடியவில்லை” என்று அவர் கூறுகிறார். சுமார் எட்டு முதல் பத்து பிரிவுகள் அங்கே உள்ளன, அவற்றில் ஒன்று உலகம் முழுவதும் RI-இன் மிகப்பெரிய வெற்றிக் கதையான போலியோ பிளஸ்க்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

சீனா, ஆப்பிரிக்கா, சியோல், துபாய், கல்யாண் பானர்ஜி அறங்காவலர் தலைவர், உலகம் முழுவதிலும் இருந்து அங்கீகாரம் மற்றும் ரோட்டரி அறக்கட்டளை ஆகியவை பிற வகைப்பாடுகள் மற்றும் துணை வகைப்பாடுகளாகும்.

காட்சிகளுடன், மோனா புகைப் படங்கள் மற்றும் ஆடியோ-விஷுவல் படங்களுக்கும் உரிய முக்கியத்துவம் கொடுத்துள்ளார். ஒரு இளம் கல்யாண் பானர்ஜி ரோட்டரி உலகில் சேர்ந்த புகைப்படங்களும், அவரும் பினோட்டாவும் திருமணம் செய்து கொண்ட புகைப்படங்களையும் அவர் காட்சிப்படுத்திய அதே வேளையில், முன்னாள் தலைவராக அவர் வழங்கிய ஐந்து முக்கிய உரைகளைப் பார்க்கக்கூடிய ஒரு இடத்தையும் உருவாக்கியுள்ளார். இயர் போன்களும் வழங்கப்படுகின்றன. அறையின் இரண்டு மூலைகளிலும்,



அவரது வாழ்க்கையின் பரந்த திறமைகளை உள்ளடக்கிய புகைப்படங்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன. அவரது மறைந்த மனைவி, பினோட்டா, பல புகைப் படங்களிலிருந்து புன்னகைக்கிறார். அந்த மென்மையான ரோட்டரி துணைவியாரை சந்தித்தவர்கள், தம்பதியரின் புகைப்படங்களுக்கு முன் சில நிமிடங்கள் நின்று தான் செல்கின்றனர்.

“நான்கு சுவர்களுக்குள் பல தசாப்தங்களாக நீடித்த கல்யாண் பானர்ஜியின் ரோட்டரி பயணத்தை பட்டியலிட்டு வடிவமைத்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்” என்கிறார் மோனா. “ஒரு மாபெரும் பணியை வெற்றியை நோக்கி எடுத்துச் செல்வதும், சக ரோட்டரி உறுப்பினர்களுக்கு காட்சிக்கூடம் கொண்டு வந்த மகிழ்ச்சியையும் உத்வேகத்தையும் காண்பதும் ஒரு மெய்சிலிர்க்கும் அனுபவமாக இருந்தது. முதலில் அவரது முழு சேகரிப்பையும் பல்வேறு பரனைகள் மற்றும் அவரது அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகளின் பகுதி களிலிருந்து நகர்த்தி, அவற்றை பிராந்திய வாரியாகவும் நிகழ்வு ஆண்டுகளின் அடிப்படையிலும் வகைப்படுத்தும் எளிமையான பணியுடன் நாங்கள் தொடங்கினோம். ரோட்டரி சங்கத்தை நோக்கிய அவரது வாழ்நாள் பணியின் போது அவர் பெற்ற நினைவுச் சின்னங்கள் மற்றும் பரிசுகள் ஒவ்வொன்றிற்கும் கவனத்தை ஈர்க்க நான் செய்த பணியை மிகவும் ரசித்தேன்.

பினோட்டாவின் கனவு நனவாகியது, அவர் தனது கணவருக்கு “தங்கள் ரோட்டரி பயணத்தின் நினைவுகளை” பல ஆண்டுகளாக உயிருடன் வைத்திருக்க இந்த காட்சிக் கூடத்தை பரிசளித்தார். நாடு தழுவிய நினைவுச்சின்னங்கள், உலக மற்றும் இந்தியாவின் முக்கிய தலைவர்களுடன் ஆவணப்படுத்தப்பட்ட படங்கள், பல்வேறு சந்தர்ப்பங்களில் உலக ரோட்டேரியன்களின் படங்கள், நாடு தழுவிய அன்பின் பரிசுகள், ரோட்டரி அல்லாத வேறு சங்கங்களின் நினைவுச் சின்னங்கள், வெவ்வேறு துணிகளில் நெய்யப்பட்ட தலைமைத்துவ கருப்பொருட்கள், பல்வேறு ஆண்டுகளின் RI இயக்குநர்கள் குழுவின் படங்கள், உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தலையணிகளின் படங்கள், குடும்ப படங்களுக்காக ஒரு பகுதி ஆகியவை இங்கே உள்ளன என திவானி மேலும் கூறுகிறார்,

RI தலைவராக, பானர்ஜி 97 நாடுகளுக்கும், RIPE-ஆக அதில் 45 நாடுகளுக்கும் விஜயம் செய்திருந்தார். அவர் TRF அறங்காவலர் மற்றும் அறங்காவலர் தலைவராக இருந்த போதும் நினைவு பரிசுகளை பெற்றார். காட்சிக்கூடத்தில் சுமார் 140 நாடுகளில் இருந்து நினைவுப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. குர்பானி அல்லது ஒரு இனிமையான இசை பார்வையாளர்களை பிரதான காட்சிக்கூடத்திற்குள் நுழையும் போது வரவேற்கிறது மற்றும் முழுவதும் ஒலிக்கிறது. “வெளி நாட்டவர்கள் குர்பானியைப் புரிந்து கொள்ள முடியாததால் நாங்கள் மற்றொரு இசைத் தொகுப்பையும் வைத்துள்ளோம்” என்று பானர்ஜி விளக்குகிறார். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ரோட்டரியர்கள், GSE (குரூப் ஸ்டடி எக்ஸ்சேஞ்ச்) குழுக்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் முக்கிய பார்வையாளர்களாக வருகின்றனர்.







அந்த காட்சிக்கூடம் உருவெடுக்காது என்று தோன்றிய ஒரு காலக்கட்டமும் இருந்தது. அது ரோட்டரி ஆண்டு 2016–17, அப்போது பானர்ஜி TRF தலைவராக இருந்தார். எனது அறங்காவலர் பதவியின் கடைசி ஆண்டுகளில், பினோட்டா உடல்நிலை சரியில்லாமல் இருந்தார், அவருக்காக என் நேரத்தை செலவிட விரும்பினேன்,'' என்று அவர் நினைவு கூர்ந்தார். ஒரு கனிவான மற்றும் அமைதியான பெண்ணான பினோட்டா ரோட்டரியர்கள் மற்றும் அவர்களது துணைவர்களிடமிருந்து மிகுந்த மரியாதையையும் அன்பையும் பெற்றவர். அவர் தனது கணவர் பல்வேறு நிலைகளில் ரோட்டேரியராக தனது கடமைகளை ஆற்றியபோது அவருக்கு எப்போதும் பக்கபலமாக இருந்தார். அவருடைய உடல்நிலை மோசமடையத் தொடங்கிய போது, அவருக்கு நேரத்தையும் கவனத்தையும் கொடுக்க பானர்ஜி முடிவு செய்தார். அவர் தனது பதவியை ராஜினாமா செய்தார். பினோட்டாவுக்கு நான் தேவைப்படும்போது என்னால் என் கடமைகளைச் செய்ய முடியாது என்று உணர்ந்தேன். ஆனால், பல மூத்த ரோட்டரி தலைவர்கள் என்னுடைய ஆறு மாதங்கள் ஏற்கனவே முடிந்துவிட்டதாகவும், திடீரென்று எனது பதவியை நிரப்பும் எந்த புதிய நபரும் அடுத்த ஆறு மாதங்களில் அதிகம் செய்ய முடியாது என்றும் கூறினார். எனவே, நான் தொடர்வதே அர்த்தமுள்ளதாக தோன்றியது. பின்னர் நான் எனது ராஜினாமாவை வாபஸ் பெற்றேன்.

82 வயதான பானர்ஜி, கரக்பூரில் உள்ள ஐஐடியில் இரசாயன பொறியாளராக பட்டம் பெற்றவர், மேலும் யுனைடெட் ஃபாஸ்ஃபரஸ் வாரியத்தில் பல தசாப்தங்களாக சேவையில் இருந்து கடந்த ஆண்டு ஓய்வு பெற்றார். வங்கதேசத்தின் யுனைடெட் பாஸ்பரஸ் லிமிடெட் தலைவராகவும் இருந்துள்ளார். வாபி இண்டஸ்ட்ரீஸ் அசோசியேஷன் தலைவராகவும், இந்திய தொழில் கூட்டமைப்பு குஜராத் பிரிவின் தலைவராகவும் இருந்துள்ளார்.

அவர் இப்போது கல்வியறிவு மற்றும் மருத்துவ சேவைகள் துறையில் தனது முயற்சிகளை புதுப்பிக்கிறார். ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் சோமர்வில் கல்லூரியில் சர்வதேச ஆலோச னைக் குழுவில் பணியாற்றும் பேராசிரியர் நயன் படேலும் இந்த முயற்சியில் இணைந்துள்ளார். முன்னாள் மாவட்ட கவர்னராக இருந்த படேல், மகாராஷ்டிராவுக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்தியாவில் தொழுநோய் தடுப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளார். "ஆரம்பத்திலிருந்தே நான் கல்வியறிவு மற்றும் சுகாதார சேவைகளில் ஆர்வமாக இருந்ததால் மீண்டும் அதில் ஈடுபடுகிறேன்'' என்கிறார் பானர்ஜி.

நீங்கள் வயதாகி ஓய்வு பெற்றிருந்தாலும், உங்கள் பணிகளை நிறுத்த வேண்டியதில்லை. நல்ல வேலையை எப்போதும் தொடரலாம். கல்வியறிவு மற்றும் ஆரோக்கியம் ஆகிய துறைகளிலும் நம் முயற்சிகளின் காட்சிக் கூடத்தை என்றாவது ஒரு நாள் அமைப்பேன் என்று சமீபத்தில் விம்பிள்டனில் இருந்து திரும்பிய இந்த விளையாட்டு பிரியர் கூறுகிறார்.■

# பெரிய கனவுகளைக் கொண்டுள்ள ஒரு மும்பை ரோட்ராக்ட் சங்கம்

ரஷீதா பகத்

மும்பையில் உள்ள RAC ஜெய் ஹிந்த் கல்லூரி, RID 3141 என்ற ஒரு ரோட்ராக்ட் சங்கத்தின் தலைவர் குஷி ஷெட்டி, கடந்த ஆண்டை திரும்பிப் பார்க்கும்போது அச்சங்கம் செய்துள்ள பல சுவாரஸ்யமான விஷயங்களை நினைத்து பெருமையுடன் சிரிக்கிறார். அதில் ஒன்று, அவர் தனது சங்கத்தின் பல கடந்தகால தலைவர்கள் கண்ட கனவை நினைவாக்கியுள்ளார் – அது புத்தக வெளியீட்டுடன் ஒரு இலக்கிய விழாவை நடத்தியது.

70 சதவீதம் பெண்களுடன், 178 உறுப்பினர்களைக் கொண்ட இந்த சங்கம் செய்த சிறப்பான திட்டங்களில் ஒன்று, ஆசியாவின் மிகப்பெரிய குடிசைப்பகுதியான தாராவியின் குழந்தைகளுக்காக மகிழ்ச்சியான மற்றும் வேடிக்கையான கண்காட்சி மஸ்தி மேளாவை நடத்தியதாகும். இந்த முன்முயற்சியானது, ஒரு பெரிய சேரியில் வளரும் இந்தக் குழந்தைகளின் வாழ்க்கையில் மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்டது, அவர்களின் அன்றாட மற்றும் மிகவும் சோர்வடைந்த வாழ்க்கையிலிருந்து அவர்களுக்கு சற்று ஓய்வை அளிக்கிறது.

குழந்தைகளின் கற்பனையை கவரும் வகையிலும், அவர்களின் உற்சாகத்தை தூண்டும் வகையிலும் பல்வேறு விளையாட்டுகள் நடத்தப்பட்டன. மிகவும் பிரபலமான சில விளையாட்டுகளில் பந்து வீசுதல் மற்றும் ரிங் டாஸ் ஆகியவை இருந்தது. அதில் குழந்தைகள்





இலக்கைத் தாக்கும் போது பரிசுகள் வழங்கப்பட்டன. ‘சரியான ஓடுகளைக் கண்டுபிடி’ என்ற விளையாட்டு அவர்களின் கண்காணிப்புத் திறனை மேம்படுத்து வதற்காக வடிவமைக்கப்பட்டது, மேலும் ‘ஜம்பிங் ஜாக்’ விளையாட்டு அவர்களுக்கு மகிழ்ச்சியாக அலறுவதற்கு போதுமான வாய்ப்பைக் கொடுத்தது.

“ஒரு பஞ்சு மிட்டாய் கடை அவர்களுக்கு ஒரு இனிமையான விருந்தை வழங்கியது, இது அங்கே பண்டிகை சூழ்நிலையை கூட்டியது மற்றும் குழந்தைகளின் முகத்தில் புன்னகையை ஏற்படுத்தியது. ஊட்டச்சத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு, குழந்தைகளுக்கு இட்லி-சட்னி, பாவ்-பாஜி மற்றும் இனிப்புக்காக ஷீரா போன்ற உணவுகள் அடங்கிய சத்தான மதிய உணவை வழங்கப்பட்டதை எங்கள் சங்கம் உறுதி செய்தது. மஸ்தி மேளாவின் நோக்கம் ஒரு வேடிக்கையான கண்காட்சியை உருவாக்குவது மட்டுமல்லாமல்; அன்பு, மகிழ்ச்சி மற்றும் சமூக உணர்வைப் பரப்புவதாகவும் இருந்தது. இந்த நிகழ்வானது, எளிய கருணை செயல்களின் உருமாற்றும் ஆற்றலையும், அவை மற்றவர்களின் வாழ்வில் ஏற்படுத்தக்கூடிய ஆழமான தாக்கத்தையும் வெளிப்படுத்தியது, என்று 2022–23 சங்கத்தலைவர் குஷி கூறினார்.

மகிழ்ச்சி மற்றும் சிரிப்புடன் அந்த நாள் முடிந்தது; “இந்த நாளின் நினைவுகள் இந்த குழந்தைகளுடன் நீண்ட காலம் இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்,” என்று சங்கச் செயலாளர் ஜைனப் ஜெட்புர்வாலா கூறினார்.



**மேலே:** *சங்க செயலாளர் ஜைனப் ஜெட்புர்வாலா.*

**வலதிலிருந்து:** *தாராவி குழந்தைகள் RAC ஜெய் ஹிந்து கல்லூரி நடத்திய மஸ்தி மேளா நிகழச்சியில்.*

அடுத்த திட்டமானது, சமீபத்தில் சங்கம் ஏற்பாடு செய்த மும்பை மாணவர்கள் திரைப்பட விழா. ஐந்தாவது ஆண்டாக நடக்கும் இந்த திரைப்பட விழா ஆர்வமுள்ள இளம் திரைப்பட இயக்குனர்களுக்கு ஒரு தளத்தை வழங்குகிறது. இவ்விழாவில் 10–12 நிமிட கால அளவிலான 20 குறும்படங்கள் கலந்துக்கொண்டன, மேலும் அவை பலதரப்பட்ட தலைப்புகள் மற்றும் முன்னோக்குகளைக் காட்சிப்படுத்தியது. கார்த்திக் மல்லூர், சௌரப் பாரத், பிரியங்கா தன்வார் மற்றும் அபூர்வா ஷாலிகிராம் உள்ளிட்ட பிரபல தொழில் வல்லுநர்கள் நடுவர்களாக இருந்து, நிகழ்ச்சிக்கு தங்கள் நிபுணத்து வத்தையும் வழிகாட்டுதலையும் வழங்கினர்.

''வெர்சோவாவில் உள்ள மதிப்புமிக்க கிரியேட்டிவ் அடா அரங்கில் திரையிடுவதற்காக 10 படங்கள் தேர்வு செய்யப்பட்டன. திரைப்பட இயக்குனர்களின் கலைத் திறன் மற்றும் கதை சொல்லும் திறன் ஆகியவற்றால் பார்வையாளர்கள் ஈர்க்கப்பட்டனர், அடுத்த தலைமுறை திரைப்பட இயக்குனர்களின் திறமையின் ஆழத்தை நேரடியாகக் அங்கே கண்டனர். மும்பையின் விண்டேஜ் கார் கலாச்சாரம் மற்றும் இன்றைய சிக்கலான சமூகத்தில் இளைஞர்கள் அணியும் முகமூடிகள் உள்ளிட்ட ஆழமான கருப்பொருள்களை திரைப்படங்கள் ஆராய்ந்தன'' என்கிறார் குஷி.

சிறந்த இயக்கம், ஒளிப்பதிவு, படத்தொகுப்பு ஆகியவற்றுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பணப் பரிசுகள் வழங்கப்பட்டன. முழுக் குழுவும் ஒன்று கூடி அவர்களின் சாதனைகளைக் கொண்டாடியதால் விழா சிறப்பாக முடிந்தது. பங்கேற்பாளர்கள் துடிப்பான நடனம் மற்றும் கூச்சல் மூலம் தங்கள் ஒற்றுமையை வெளிப்படுத்தியதால் சூழல் மகிழ்ச்சி மற்றும் உற்சாகத்தால் நிரம்பியது.

ஜூன் மாதத்தில், சங்கம் அதன் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட லிட் ஃபெஸ்ட்'23 ஐ ஸ்பீக்கிங் சோல்ஸ் மற்றும் ரீ-கிரியேட் ஸ்பேஸ்ஸுடன் இணைந்து ஏற்பாடு செய்தது, இது இலக்கிய ஆய்வு மற்றும் கலை வெளிப்பாட்டிற்கான துடிப்பான தளத்தை வழங்கியது. புத்தக வெளியீட்டு விழா மற்றும் எழுத்தாளர் சட்டநாதனுடனான உரையாடல் உள்ளிட்ட மனதைக் கவரும் நிகழ்வுகளால் நிகழ்ச்சி நிரம்பியிருந்தது. 'காமெடி சென்ட்ரல்' என்ற தலைப்பில் ஒரு ஸ்டாண்ட்-அப் நகைச்சுவை நிகழ்ச்சி, அல்ஃபாஸ் என்ற ஓபன் மைக் நிகழ்வு, VibeZ உடன் ஒரு மயக்கும் இசை மாலை மற்றும் ஒரு பாப்-அப் சந்தை ஆகியவை அதில் நடைபெற்றன.

தி ஹீல் என்ற புத்தகத்தின் வெளியீடு மற்றும்ஆசிரியர் சட்டநாதனுடனான கேள்வி பதில் அமர்வு பார்வையாளர்களுக்கு அவரது எழுத்துப் பயணத்தைப் பற்றிய ஒரு கண்ணோட்டத்தை அளித்தது. ஸ்டாண்ட்-அப் காமெடி நிகழ்ச்சியில் திறமையான நகைச்சுவை நடிகர்களான ரோலண்ட் டோமினிக் மற்றும் பிரவீன் பாண்டியா ஆகியோர் கலந்து கொண்டு, சிரிப்பு நிரம்பிய புத்துணர்ச்சியூட்டும் இடைவெளியை வழங்கினர்.

*சங்கத் தலைவர் குஷி ஷெட்டி (இடமிருந்து 6வது) ரோட்டராக்டர்களுடன் MUN நிகழ்ச்சியில்.*






“வளரும் கவிஞர்கள் மற்றும் மேடை பேச்சு கலைஞர்கள் தங்கள் படைப்புகளை வெளிப்படுத்த ஒரு தளத்தை அல்ஃபாஸ் வழங்கியது, இது ஒரு ஆதரவான மற்றும் உள்ளடக்கிய படைப்பு சமூகத்தை முன்னிலைப் படுத்தியது. VibeZ-இன் இசை மாலையில் திறமையான இசைக் கலைஞர்கள் மற்றும் பாடகர்கள் இடம் பெற்றனர், அவர்கள் தங்களின் சொந்தமான இசையமைப்புகள் மற்றும் பாலிவுட் பாடல் கலவை மூலம் பார்வையாளர்களை வசீகரித்து, ஒரு ரம்மியமான சூழலை உருவாக்கினர் என்று குஷி மேலும் கூறினார்.

பாப்-அப் சந்தையில், ரோட்டராக்டர்கள் வாடகைக்கு சில ஸ்டால்களை வழங்கி அதன் மூலம் இந்த திட்டங் களுக்கு நிதி திரட்டினர், சிறு வணிகங்கள் தங்கள் பிராண்டுகளை விளம்பரப்படுத்த அனுமதித்தனர் மற்றும் பங்கேற்பாளர்களுக்கு உள்ளூர் தொழில்முனைவோரை ஆராய்ந்து ஆதரிக்கும் வாய்ப்பையும் வழங்கினர். “இது திருவிழாவின் துடிப்பான சூழ்நிலையை மேலும் மேம்படுத்தியது, சமூகம் மற்றும் ஒத்துழைப்பின் உணர்வை வளர்த்தது” என ஜைனாப் மேலும் கூறினார்.

“இறுதியாக நாங்கள் ஒரு இலக்கிய திருவிழாவை நடத்தியதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இது பல கடந்தகால தலைவர்களின் கனவாக இருந்தது. ஆனால் அவர்களால் அதை செய்ய முடியவில்லை. ஆனால் இந்த ஆண்டு அதைச் செய்ய வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருந்தோம். எனவே நாங்கள் முதலில் எங்கள் முன்னாள் தலைவர்கள் சிலருடன் பேசினோம், அவர்களின் கனவுகள், யோசனைகள் மற்றும் திட்டங்களைப் பற்றி அறிந்து கொண்டோம். முடிவில், பாப்-அப் சந்தையுடன் ஒரு நாள் நிகழ்வை நடத்த எனது குழு முடிவு செய்தது” என குஷி கூறுகிறார். இந்த நிகழ்வுகளுக்கான அவரது குழுவில் ஏழு உறுப்பினர்கள் இருந்தனர்.

**மேலே:** Mumbai Students Film Festival *குழுவினர் திரைப்பட போட்டியில் வெற்றி பெற்ற ஒருவருக்கு சான்றிதழ் அளிக்கின்றனர்.*

**கீழே:** *மஸ்தி மேளா நிகழ்ச்சியில் குழந்தைகள்.*



பாப்-அப் சந்தை என்பது ஒரு வகையான மலிவு விலை சந்தை ஆனால் சிறிய அளவிலும் மற்றும் பிராண்ட் பிரத்யேகத் தன்மையுடன் இருந்தது, அது சிறு வணிகங்களுக்கு பிராண்ட் பிரத்தியேகத்தை வழங்குவதற்கான வாய்ப்பை வழங்கியது, இது கூட்டத்தில் மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்தியது என்று அவர் விளக்குகிறார். ''புத்தக வெளியீடு, திரைப்பட விவாதம், ஸ்டான்ட்-அப் காமெடி, கவிதை மற்றும் சிறு வணிகங்களின் பிராண்டுகள்... அனைத்தையும் ஒரே இடத்தில் வழங்கி, பார்வையாளர்களுக்கு வித்தியாசமான அனுபவத்தை வழங்கினோம்.''

''உலகளாவிய விழிப்புணர்வை வளர்ப்பதற்கும், இளம் மனங்களில் அரசியல் சாதுரிய உணர்வை வளர்ப்பதற்கும், ச ங்கம் ஐந்தாவது அற்புதமான நிகழ்வை ஏற்பாடு செய்திருந்து- ஐக்கிய நாடுகள் சபையின் மாதிரி. இந்த ஊக்கமளிக்கும் முன்முயற்சியானது மாணவர்களுக்கு ''சர்வதேச விவகாரங்களின் உலகத்தை ஆராய்வதற்கும், உலகளாவிய பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு ஒத்து ழைப்புடன் செயல்படுவதற்கும் ஒரு விலைமதிப்பற்ற வாய்ப்பை'' வழங்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் (UNHRC) மாதிரி போர் இடங்களில் மனித உரிமைகளை மீறுவது பற்றிய விவாத நிகழ்ச்சி நிரலுடன் உருவகப்படுத்தப்பட்டது. ''தீவிரமான அந்த இரண்டு நாட்களில், உருவகப்படுத்துதல் பலதரப்பட்ட மாணவர்களை ஒன்றிணைத்தது. அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு நாட்டின் பிரதிநிதிகளாக விவாதித்தனர். ரோல்-பிளே மற்றும் கலகலப்பான விவாதங்கள் மூலம், பங்கேற்பாளர்கள் இராஜதந்திரிகளின் பாத்திரத்தை ஏற்றனர், நிஜ உலக சவால்களை விவாதித்து புதுமையான தீர்வுகளை வகுத்தனர். இந்த நிகழ்வு அவர்களின் உலகளாவிய விவகாரங்கள் பற்றிய அறிவை சோதித்தது மட்டுமல்லாமல், அவர்களின் பேச்சுவார்த்தை, விமர்சன சிந்தனை மற்றும் பொதுப் பேச்சு திறன் ஆகியவற்றை மேம்படுத்தியது.

முடிவில் வரைவு தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டது. பங்கேற்பாளர்கள் தங்கள் கருத்துக் களைப் பங்களிக்கவும், ஆக்கப் பூர்வமான விவாதங்களில் ஈடுபடவும், அவர்களின் கூட்டு ஞானத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தீர்மானத்தை உருவாக்குவதற்கும் வாய்ப்பு கிடைத்தது. பொதுவான இலக்குகளை அடைவதில் குழுப்பணி மற்றும் ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை இந்த நிகழ்வு கோடிட்டுக் காட்டியது. ''ஆனால் விவாதத்தின் கடுமையான உணர்வை போக்க, இளைஞர்கள் ஒரு பொழுதுபோக்குப் பகுதியையும் திட்டமிட்டனர், அங்கு அவர்கள் தொடர்ந்து இலகுவான செயல்களில் ஈடுபட்டனர். அவர்கள் துண்டு சிட்கள் மூலம் செய்திகளைப் பரிமாறிக்கொண்டனர், நடனம் மற்றும் பல்வேறு பாத்திரங்களில் நடிப்பது, சுய வெளிப்பாடு மற்றும் படைப்பாற்றலுக்கான ஒரு தளத்தை வழங்கி, பங்கேற்பாளர்களை ஓய்வெடுக்கவும், கேளிக்கையுடன் இருக்கவும் அனுமதித்தது என்று அவர் மேலும் கூறினார்.

அடுத்தது என்ன என்று கேட்டதற்கு குஷி புன்னகையுடன்: இப்போது புதிய ரோட்டரி ஆண்டு தொடங்கியுள்ளதால், என் பொறுப்புகளை புதிய தலைவர், வேதிகா பன்சாலிடம் ஒப்படைத்துள்ளேன். எங்கள் சங்கம் வேடிக்கையான மற்றும் அர்த்தமுள்ள நிகழ்வுகளை தொடர்ந்து செய்யும் என்று அவர் மேலும் கூறுகிறார்.

(இதே சங்கத்தின் கூடுதல் திட்டங்கள் அடுத்த இதழில்)



*லிட் ஃபெஸ்ட் '23 நிகழ்ச்சி.*

# லவ் ஆல், என்கிறார் PRIP பானர்ஜி

ரோட்டரி செய்திக்குழு



*PRIP கல்யாண் பானர்ஜி, RC சண்டிகர் தலைவர் அனில் சத்தா மற்றும் DG அருண் மோங்கியா ஆகியோருடன்.*

RC சண்டிகர், RID 3080க்கான புதிய தலைமைத்துவத்தை நிறுவிய நிகழ்வில், PRIP கல்யாண் பானர்ஜி ரோட்டேரியர்களை “விம்பிள்டனின் உணர்வை போலவே பாரம்பரியம், ஒருமைப்பாடு, மரியாதை மற்றும் சிறந்து விளங்குதல் போன்ற மதிப்புகளைப் வளர்த்துக்கொள்ள” தூண்டினார். இங்கிலாந்தில் விம்பிள்டன் போட்டிகளை ரசித்துக் கொண்டு இருந்த அவர், சங்கத்தின் உறுப்பினரான PRIP ராஜேந்திர சாபூவால் நிறுவல் நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக அழைக்கப்பட்டார்.

“டென்னிஸின் ஒவ்வொரு ஆட்டமும் “லவ் ஆல்” என்று தொடங்குகிறது, அதேபோல அந்த உணர்வை நமது எல்லா முயற்சிகளிலும் நாம் பின்பற்ற வேண்டும்” என்றார் பானர்ஜி. மனநல விழிப்புணர்வு தேவை என்று அவர் வலியுறுத்தினார், குறிப்பாக பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உள்ள இளைஞர்கள் உட்பட இந்திய மக்கள் மீது கோவிட் தொற்றுநோய் ஏற்படுத்தியிருக்கும் பெரும் தாக்கத்தை சுட்டிக்காட்டினார். வேகமாக மாறிவரும் உலகத்துடன் ஒத்துப்போக, AI போன்ற மேம்பட்ட தொழில்நுட்பத்தை ஏற்றுக் கொள்ளுமாறு ரோட்டேரியர்களை பானர்ஜி வலியுறுத்தினார்.

சங்கத்தின் வரலாற்றைப் பற்றி கூறுகையில் சாபூ 1961-ல் ஒரு சவக்கிடங்குக்கு வேனை நன்கொடையாக வழங்கியதை நினைவு கூர்ந்தார். அவர் சங்கத்தின் தொடர் சாதனைகளை பாராட்டினார், மேலும் இரண்டு இந்திய தலைமை நீதிபதிகள் மற்றும் ஆறு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அதன் உறுப்பினர்களாக இருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

DG அருண் மோங்கியா RID 3080இல் 10 லட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு விரிவான கண் பரிசோதனை முகாம்கள், அம்பாலா கண்டோன்மென்ட்டில் ஒரு இரத்த வங்கி, நான்கு டயாலிசிஸ் மையங்கள் மற்றும் பல்வேறு நகரங்களில் இரண்டு கண் மருத்துவமனைகளை நிறுவுதல் போன்ற பல திட்டங்களை பற்றி பகிர்ந்து கொண்டார்.

RC சண்டிகரின் புதிய தலைவரான அனில் சத்தா, தனது தொடக்க உரையில், இந்த ஆண்டு சங்கம் மூலம் மேற்கொள்ளப்படும் சமூக நல முயற்சிகளை வெளியிட்டார். மொஹாலியில் ரூ.31 லட்சம் மதிப்பிலான மனித பால் வங்கியை நிறுவுவதற்கு சங்கம் தீவிரமாக செயல்பட்டு வருகிறது. கூடுதலாக, ரோட்டரி ரத்த வங்கி சமூக வள மையத்திற்கு ரூ.16.6 லட்சம் செலவில் அபெரிசிஸ் இயந்திரத்திற்கான ஒருமுறை பயன்படுத்தக்கூடிய பைகளை சங்கம் வழங்கும் என்றார்.■



*PRIP பானர்ஜி சங்கத்தின் காபி டேபிள் புத்தகத்தை (இடமிருந்து) IPP வினோத் கபூர், DG மோங்கியா, PRIP ராஜேந்திர சாபூ, சங்கத்தலைவர் சத்தா மற்றும் Rtn டீனா விர்க் ஆகியோர் முன்னிலையில் வெளியிடுகிறார்.*

# மனநோய்க்கு சிகிச்சை அளிக்கும் நவீன சாதனம்!

ஜெய்ஸ்ரீ

RC தில்லி நார்த் (RID 3012) மனநோய்க்கு சிகிச்சை அளிக்க அமெரிக்காவிலிருந்து நவீன கருவியை இறக்குமதி செய்துள்ளது. இந்த அதிநவீன கருவி, புது தில்லியில் உள்ள காஸ்மோஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் மென்டல் அண்ட் பிஹேவியரல் சயின்ஸ்சஸ் கழகத்தில் (CIMBS-Cosmos Insstitute of Mental Behavioural Sciences) நிறுவப்பட்டுள்ளது. இந்த கருவி காந்தசக்தி மூலம் மூளையைத் தூண்டி செயல்படவைக்கும்.

மனநலம் பாதிக்கப் பட்டவர்களின் குறைகளைக் கேளுங்கள் என்று RI தலைவர் விடுத்த அழைப்பை ஏற்று இதில் கவனம் செலுத்த தொடங்கினோம் என்றார் சங்கத்தின் தலைவர் ராஜ்கோபால் ரங்க்வாலா. மனச் சோர்வு, பித்துப்பிடித்த நிலை, மனச் சிதைவு மற்றும் மருந்து, மாத்திரைகள் மூலம் குணப்படுத்த முடியாத நிலையில் இந்த நவீன கருவி மூலம் சிகிச்சை அளிக்கலாம்.

RC பிர்டாமோட் மிட்டவுன், நேபாளம் (RID 3292) மற்றும் TRF மானிய உதவி மூலம் ரூ.1.5 கோடி செலவில் வாங்கப்பட்ட இந்த கருவியை சமீபத்தில் மத்திய சாலை மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் நிதின் கட்கரி, ரோட்டரி இயக்குநர் ராஜு சுப்பிரமணியம் முன்னிலையில் இயக்கிவைத்தார். IPDG லலித்கன்னா, DRFC சரத் ஜெயின் மற்றும் CIMBS இயக்குநர் டாக்டர் சுனில் மிட்டல் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

ஒரு சாமானிய மனிதனுக்கும் புரியும் வகையில் இதன் செயல் பாட்டை விளக்குகிறார் ரங்க்வாலா. இந்த கருவி மனநோயாளியின்





*CIMBS மருத்துவமனையில் தில்லி நார்த் அளித்துள்ள அதிநவீன கருவியை பயன்படுத்தி ஒரு டெமோ.*



**இடமிருந்து: IPDG லலித் கண்ணா, சங்கத்தலைவர் ராஜ் கோபால் ரங்வாலா, CIMBS இயக்குனர் Dr சுனில் மிட்டல், IPP அஷோக் மிட்டல், RI இயக்குனர் ராஜு சுப்ரமணியன், மத்திய அமைச்சர் நிதின் கட்கரி CIMBS-ல் புதிய மருத்துவ கருவி துவக்க விழாவில்.**

தலையில் தலைக்கவசம் போல (ஹெல்மெட்) பொருத்தப்படும். மின்சாரத்தின் மூலம் காந்தப்புலத்தால் தூண்டப்பட்டு மூளை செயல்படும் வகையில் புத்துணர்ச்சி பெறும். மருத்துவர்களின் அறிவுரைப்படி இதற்கான சிகிச்சை அமர்வு அரை மணிநேரம். இதுபோல் தொடர்ந்து ஒரு மாதத்தில் 20 முறை சிகிச்சை பெற வேண்டும். இதுவரை இந்த நவீன கருவி மூலம் 14 மனநல நோயாளிகளுக்கு இவ்வாறு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாகவும் சிகிச்சைக்கு நல்ல பலன் கிடைத் துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த காந்த சக்தியுடன் கூடிய இந்த அதிநவீன கருவி பயன்பாடு மற்றும் கிடைக்கும் இடம் குறித்து இதர சங்கங்களிடம், இதர மாவட்ட சங்கங்களிடமும் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம். அப்போது தான் மனநோய் மருத்துவத்துக்காக சிகிச்சை பெறும் நோயாளிகளை இந்த மருத்துவமனைக்கு பரிந்துரைக்க முடியும். ரோட்டரி சங்கங்கள் பரிந்துரைக்கும் நோயாளிகளில் 33 சதவீதம் பேருக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்படும். மேலும் 33 சதவீத மனநோயாளிகளுக்கு 50 சதவீத கட்டணத்தில் சிகிச்சை அளிக்கப்படும். மற்றவர்கள் முழு கட்டணத்தையும் செலுத்தினால் அவர்களுக்கு மனநல நோய்சிகிச்சை அளிக்கப்படும்.

91 உறுப்பினர்களைக் கொண்ட சங்கம் கடந்த ஆண்டு வைர விழாவைக் கொண்டாடியது. இந்த திட்டம் எங்கள் அர்ப்பணிப்புள்ள குழுவுக்கு பொருத்தமான பாராட்டாகும் என்றார் IPDG லலித்கன்னா. இவரும் சங்கத்தின் உறுப்பினர். கிராமப்புற பள்ளிகளுக்கு கணினி ஆய்வகம், ஸ்மார்ட் வகுப்பறைகள், கண்புரை நோய் அறுவைச்சிகிச்சை, செயற்கை கால்கள் பொருத்தும் முகாம், கிராமப்புற பள்ளி மாணவிகளுக்கு இலவச சைக்கிள் என பல்வேறு திட்டங்களை இந்த சங்கம் நிறைவேற்றியுள்ளது. 6 முதல் 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு முறைசாரா கல்வி வழங்கும் ஒற்றை ஆசிரியர் பள்ளிகள் மற்றும் பல்வல் மாவட்டத்தில் உள்ள தெஹர்கி கிராமத்தில் மகளிர்க்கு தையல் பயிற்சி அளிக்கும் மையம் ஆகியவை சங்கத்தின் நிதியுதவியால் செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.■



IPDG *கண்ணா மற்றும் சங்க உறுப்பினர்கள் மாணவர்களுக்கு* e-tablets *வழங்கியுள்ளனர்.*

# மொரீசியஸில் மாறுகண் கொண்ட குழந்தைகளுக்குச் சிகிச்சை

ரோட்டரி செய்திக்குழு



மொரீசியஸ் சுகாதார அமைச்சர் கைலேஷ் குமார் சிங் ஜகுட்பால் RC பாண்டிச்சேரி அகரம் முன்னாள் தலைவர் P K சௌரிராஜன் மற்றும் RC பகாட்டலே முன்னாள் தலைவர் அமரேஷ் ராம்லகுன் ஆகியோர் மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்ற ஒருவரை சந்திக்கின்றனர்.

"இந்த அறுவைச் சிகிச்சை இவளுடைய தன்னம்பிக்கையை உயர்த்திவிட்டது என்றார் மாறுகண் குறைபாட்டுக்குத் திருத்த அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட 18 வயதுப் பெண் ஒருவருடைய தாய். கண்ணில் கட்டுடன் மருத்துவ மனைப் படுக்கையில் அமர்ந்திருந்த இன்னோர் இளைஞர் "16 ஆண்டு களாக எல்லாரும் என்னுடைய மாறுகண்ணைக் கேலி செய்துகொண்டிருந்தார்கள். இந்த அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு நான் மகிழ்ச்சியாக உணர்கிறேன், இப்போது நான் என் வாழ்க்கையை நன்கு கையாண்டு வெல்லுவேன்" என்றார்.

RC பாண்டிச்சேரி அகரம், RID 2981, ஆப்பிரிக்காவைச் சேர்ந்த RC பகாடெல்லெ கோரிக்கையின் கீழ், ஆப்பிரிக்காவில் உள்ள மொரீசியஸில் மாறுகண் அறுவைச் சிகிச்சைத் திட்டம் ஒன்றைத் தொடங்கியது. இந்தியாவைச் சேர்ந்த ஐந்து கண் மருத்துவர்கள் (மும்பையைச் சேர்ந்த டாக்டர் மிலிந்த் கில்லெதார், RC பாண்டிச்சேரி ஈவ்ஸைச் சேர்ந்த டாக்டர் மாதுரி, பிரியங்கா மற்றும் வனஜா வைத்திய நாதன்) மொரீசியஸில் உள்ள போர்ட் லூயிஸில் இருக்கும் சுப்ரமணிய பாரதி அரசுக் கண் மருத்துவ மனையில் 18 வயதுக்குட்பட்ட சுமார் 175 சிறுவர்களுக்கு மாறுகண், மற்ற கண் குறைபாடுகளுக்கான பரிசோதனைகளை நடத்தினார்கள். 65 குழந்தைகள் மாறுகண் அறுவைச் சிகிச்சைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். ஏப்ரல் மாதத்தில் இவர்களுக்கு அறுவைச் சிகிச்சை நடைபெற்றது.




இந்திய கண் சிகிச்சை மருத்துவர்களுடன் ராம்லகுன் மற்றும் சௌரிராஜன் முகாம் துவக்க விழாவில்.

RC பாண்டிச்சேரி அகரம் தலைவர் K சௌரிராஜன், "எங்கள் மாவட்டத்தின் முதல் பன்னாட்டுச் சேவைத் திட்டம் இதுதான் என்று நினைக்கிறேன். இந்தத் தீவு நாட்டில் கண் குறைபாடுகளுக்குச் சிகிச்சையை தொடர மொரீசியஸ் நல அமைச்சகம், RC பகாடெல்லெ உடன் நாங்கள் ஓர் MoUல் கையொப்பமிட்டோம்," என்றார்.

மேலும் இந்திய மருத்துவர்கள் மொரீசியஸ் மருத்துவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்தார்கள். "மாறுகண் குறைபாடு ஒரு மோசமான உளவியல் தாக்கத்தை உண்டாக்குகிறது. குறிப்பாக, பள்ளி செல்லும் குழந்தைகளை நண்பர்கள் பொது இடங்களில் கேலி செய்வதால், அவர்கள் மேலும் பாதிக்கப்படுகிறார்கள். இதற்குச் சிகிச்சை அளிக்கா விட்டால், கண் பார்வை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துவிடும்" என்றார் RC பகாடெல்லெ தலைவர் அமரேஷ் ராம்லகுன். ■

ADVT.

www.iisuniv.ac.in

# IIS (deemed to be UNIVERSITY) JAIPUR

FORMERLY **ICG**

# Admissions Open 2023-24

UG/PG/Ph.D./D.Litt./D.Sc. & Professional Programmes

## Undergraduate Programmes
- B.A. ▸ B.Sc. ▸ B.Com.
- B.A./B.Sc./B.Com. Hons.
- B.A./B.Sc./B.Com. - Research
- B.A./B.Sc./B.Com. Hons. - Research

## Specialized Programmes
- **B.Com. Hons.** (Proficiency in Chartered Accounting/Proficiency in Company Secretaryship) Specialized programmes and separate academic calendars for aspirants of CA & CS.
- **B.Com. Hons.** (Applied Accounting and Finance) Accredited by ACCA UK

## UG-Professional Programmes
- **B.A.** (J.M.C.) ▸ **B.F.A.** ▸ **B.C.A.**
- **B.Sc. Hons.** (Forensic Science)
- **B.Sc. Hons.** (Data Analytics & AI)
- **B.Sc. Hons.** (Home Science)
- **B.Sc. Hons.** (Fashion Design)
- **B.Sc. Hons.** (Multimedia & Animation)
- **B.Sc. Hons.** (Jewellery Design & Technology)
- **B.B.A.**
- **B.B.A.** (Aviation & Tourism Management)
- **B.Voc.*** *UGC Approved

## Integrated Programmes
- **B.A. B.Ed.*** ▸ **B.Sc. B.Ed.***
  *NCTE Approved
- **B.Sc. M.Sc.** (Nano Science & Technology)

## Post Graduate Programmes
- M.A. ▸ M.Sc. ▸ M.Com. ▸ M.F.A.
- M.S.W. ▸ M.Sc. Home Science
- M.B.A. (Semester Based)
- M.A./M.Sc. in Yogic Sciences
- RCI approved professional diploma in Clinical Psychology

## DISTINGUISHING FEATURES
- Extra & Co-curricular Activities
- Placement Support
- Wi-Fi enabled campus
- Conveyance / Hostel Facility
- NCC, NSS, Sports

## Co-Educational Programmes
**@ IISU Block, ISIM Campus,**
**Mahaveer Marg, Mansarovar**
- **B.C.A.** ▸ **B.B.A.** ▸ **B.Lib.Sc.**
- **M.A.** (Digital Media & Communication)
- **M.C.A.**
- **M.B.A.** (Dual Specialization, Trimester based)
  MBA/MCA AICTE Approved

## Short Term Courses
- Cyber Security and Cyber Law (Online)
- Certificate Course in Textile Design

## Research Programmes
- **Ph.D.** (Admission through Research Entrance Test.)

Research Entrance Test : **22 July 2023**

## Preparatory Classes along with UG/PG Programmes
- Civil Services ▸ NET ▸ USCMA

## College of Physiotherapy & Allied Health Sciences
(Co-Educational) & IIS Sitapura Campus
- B.P.T. ▸ M.P.T. ▸ Ph.D.

FOR COUNSELLING AND ANY QUERIES, CONTACT AT

**9358819994**
ARTS & SOCIAL SCIENCES

**9358819995**
SCIENCE

**9358819996**
COMMERCE & MANAGEMENT

**8949322320**
PHYSIOTHERAPY

or mail at : **admissions@iisuniv.ac.in**



## BHAAVIKA THANVI
B.A. (HONS.)-PSYCHOLOGY, 2020 BATCH

**UPSC CIVIL SERVICES 2022**
**RANK - 100**

## SOME OF OUR DISTINGUISHED ALUMNAE




Padmini Solanki, IAS | Aruna Rajoria, IAS | Yasha Mudgal, IAS | Darshika Rathore Ajinkya, Endpoint, Middle East, UAE



Laxmi Tatiwala, Chartered Accountant | Shweta Sirohi Gupta, Careflight, Sydney, Australia | Beenu Dewal, 8th Rank, RAS 2018 | Manvi Soni, International Shooter



Priyanka Raghuvanshi, RPS | Fg. Lieutenant Swati Rathore, Indian Air Force | Vasundhara Singh, Dietician, AIIMS, New Delhi | Fg. Off. Shivanshi Pathak, Indian Air Force



Bhawana Garg, RAS | Maj. Komal Rathore, Indian Army | Lt Karnika Singh, Indian Army | Sqn. Ldr. Unnati Sahera, Flying Officer

Gurkul Marg, SFS, Mansarovar, Jaipur, Rajasthan-302020
+0141 2400160 / 161, 2397906 / 07
Toll Free No. : **1800 180 7750**

# சென்னை அன்னெட்ஸ் எவரெஸ்ட் தள முகாமின் உச்சியை அடைந்தனர்

கிரண் ஜெஹ்ரா

சென்னையில் உள்ள அவரது வீட்டில் வசதியாக அமர்ந்து, எவரெஸ்ட் சிகரத்தின் தள முகாமை தான் அடைந்த மூச்சடைக்கக் கூடிய படங்களை தனது தாயின் மொபைலில் ஸ்க்ரோல் செய்கிறார் ஓவியம் லட்சுமணன், RID3232 துணை ஆளுநர் வித்யா ரகுவின் மகனான அவர், தனது அசாதாரண பயணத்தின் சோதனைகள் மற்றும் வெற்றிகளை மீண்டும் உயிர்ப்பிக்கிறார். "எனது உடல் மற்றும் மன வலிமையின் எல்லைகளை தாண்டி, அபாரமான இமயமலையின் முன் நான் பிரமித்து நின்றது நேற்றுபோல் தான் இருக்கிறது" என்று அவர் கூறுகிறார். எவரெஸ்ட் சிகரத்தின் தள முகாம் இமயமலையில் 5,364 மீட்டர் (17,600 அடி) உயரத்தில் உள்ளது. 11 வயது சிறுவனான அவர், ஏழே நாட்களில் மலையேற்றத்தை முடித்து ஆசியா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸில் 'மவுண்ட் எவரெஸ்ட் தள முகாம் மலையேற்றத்தை மிக வேகமாக முடித்த குழந்தை' என்ற சாதனையை படைத்தார்.

RC மெட்ராஸ் ஈஸ்ட் உறுப்பினரான மகேஷ் பட்டாபிராமனின் 12 வயது மகள் துசிதா, மற்றொரு குழுவுடன் மலையேற்றத்தை முடித்தார், "இது ஒரு அற்புதமான அனுபவம்," என்று கூறினார். அவரது எட்டு பேர் கொண்ட குழு காத்மாண்டுவில் இருந்து ராமேச்சாப்பை சென்றடைந்தபோது, "நாங்கள் பரபரப்பான நகரத்தை கடந்து சென்றோம், காட்சி படிப்படியாக கிராமப்புற சூழலுக்கு மாறியது. மலைகள் மற்றும் சிறிய கிராமங்கள் வழியாக செல்லும் சாலை, பாரம்பரிய நேபாள வாழ்க்கையின் காட்சிகளை எங்களுக்கு வழங்கியது. நாங்கள் ஆறுகள், மலைச்சரிவு வயல்வெளிகள் மற்றும் பசுமையான காடுகளை கடந்து, எங்கள் பயணத்தின் இயற்கை அழகை கூட்டினோம்," என்றார் அவர்.

ஓவியம் கூறுகையில், எங்கள் பயணத்தின் சிறப்பம்சங்களில் ஒன்று இமயமலைத் தொடரின் காட்சியாகும். அது ஒரு தெளிவான நாளாக இருந்ததால், தூரத்தில் பனி படர்ந்த மலைகளைப் பார்த்து நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம், இது எங்கள் பயணத்திற்கு பிரமிக்க வைக்கும் பின்னணியை உருவாக்குகிறது, என்றார்.

ராமேச்சாப்பில், "நேபாளத்தின் லுக்லாவில் உள்ள டென்சிங்–ஹிலாரி விமான நிலையத்திற்குச் செல்ல நாங்கள் 10 பேர் மட்டுமே அமரக்கூடிய ஒரு விமானத்தில் ஏறினோம், இது உலகின் மிக ஆபத்தான விமான நிலையமாக கருதப்படுகிறது, அதன் காரணிகள் அதன் புவியியல் இருப்பிடம், மிகக் குறுகிய ஓடுபாதை மற்றும் வரையறுக்கப்பட்ட மின்சாரம். முழு விமானமும் எங்களுக்காக இருந்ததாலும், விமானம் வசதியாக இருந்ததாலும் உற்சாகமாக இருந்தது. நான் பயப்படவில்லை என்கிறார் துசிதா. இந்த விமானத்தை "வானத்தில் ஒரு மினி பஸ். இது சிலிர்ப்பாக இருந்தது" என ஓவியம் விவரித்தார்.

அவர் ஷெர்பாக்களை கண்டு வியந்தாக கூறினார், அவர்கள் போற்றப்படாத நாயகர்கள், ஒவ்வொரு அடியிலும் எங்களுக்கு வழிகாட்டி ஆதரவளித்தனர். அவர்கள் நிலப்பரப்பு மற்றும் வானிலை மாற்றங்களை பற்றிய விளக்கமான அறிவைக் கொண்டிருந்தனர், மேலும்






*துசிதா,* RC *மெட்ராஸ் ஈஸ்ட் உறுப்பினர் மகேஷ் பட்டாபிராமனின் மகள்.*

எங்களின் பாதுகாப்பான மற்றும் வெற்றிகரமான மலையேற்றத்தை உறுதி செய்தனர். எங்களது ஷெர்பாக்கள் எங்களவுக்கு சோர்வாக இருந்தாலும், தள முகாமில் நாங்கள் தங்கியிருந்த போது, அந்த இடத்தில் குறைந்த பணியாளர்கள் இருந்ததால், எங்களுக்கு சூடான பானங்கள் மற்றும் உணவை பரிமாற ஓடினர். கடினமான பாதைகளில் செல்வது முதல் கடுமையான சூழ்நிலையில் கூடாரங்கள் அமைப்பது வரை, எவரெஸ்ட் பகுதியின் பிரமிக்க வைக்கும் அழகை அனுபவிக்க ஒவ்வொரு மலையேற்ற வீரருக்கும் வாய்ப்பு இருப்பதை உறுதி செய்தனர்.

குழந்தைகள் இருவரும் மலையேற்றம் முழுவதும் பரிமாறப் பட்ட உணவை ருசித்து உண்டனர். “பழக்கமில்லாத ராஜ்மா மற்றும் பருப்பு” பற்றி ஓவியம் முதலில் தயங்கினர், பின்னர் “அத்தயக்கத் துடன் உன்ன, உடனடியாக சொர்க்கத்திற்கு கொண்டு செல்லப் பட்டார். அதன் சுவைகள் வித்தியாச மாகவும், ஆரோக்கியமாகவும் இருந்தன. துசிதா, நாம்சே கிராமத்தில் உள்ள ஒரு ஓட்டலில் வழங்கப்படும் தால் பாத் மற்றும் ஹாட் சாக்லேட் ஆகியவற்றை மிகவும் விரும்பினார்.

58 முறை தள முகாம் மலை யேற்றத்தை மேற்கொண்ட விஞ்ஞானி ஒருவரையும், 21,000 அடியில் உள்ள முகாம் 2க்கு மலை யேற்றம் செய்ய திட்டமிட்டிருந்த 82 வயது முதியவரையும் சந்தித்தது துசிதாவிற்கு “உத்வேகம்” அளித்தது. சூரியனை ஒரு வட்ட வானவில் சூழ்ந்திருக்கும் அரிய நிகழ்வான சன் டாக் நிகழ்வைப் பார்க்கும் அதிர்ஷ்டமும் எனக்கு கிடைத்தது. இது மனதைக் கவரும் காட்சியாக இருந்தது.


எவரெஸ்ட் தள முகாமிற்கு தங்கள் வெற்றிகரமான வருகையைப் பற்றி பேசுகையில், இவர்கள் கடிக்கும் குளிர் காற்று, உறைந்த முகங்கள் மற்றும் அனைத்து சிரமங்களையும் துடைத்த வெற்றியின் பெரும் உணர்வை நினைவு கூர்ந்தனர். சோர்வு இருந்தாலும், இந்தியக் கொடியை ஏந்தியபடி மற்றும் RID 3232 அன்னெட்ஸ் (Annets) பேனரை பிடித்துக்கொண்டு உலகின் மிக உயரமான சிகரத்தின் அடிவாரத்தில் நிற்பதில் நான் மகிழ்ச்சியடைந்தேன். நான் சாதித்ததைப் நினைத்து பெருமைப்பட்டேன். துசிதாவிற்கு இந்த மலையேற்றம் “ஒரு அற்புதமான அனுபவமாக இருந்தது மற்றும் எனது சொந்த திறனின் உச்சத்தை அடைய நான் பயன் படுத்தக்கூடிய படிப்பினைகளை எனக்கு வழங்கியுள்ளது”.■



**ஓவியம் லட்சுமணன்,**
**RID 3232 AG வித்யா ரகுவின் மகன்.**

# புனே கரும்பு விவசாயிகளுக்கு வீட்டுப் பயன்பாட்டு பொருட்கள்

ஜெய்ஸ்ரீ



*RC புனே ஈஸ்ட் சங்கத்தினர் ஒரு கிராமத்தில் வீட்டு பயன்பாட்டு உபகரணங்களை அளிக்கின்றனர்.*

கடந்த மூன்று ஆண்டுகளாக புனே ஈஸ்ட் ரோட்டரி சங்கம் (RID 3131), புனே ஊரகப் பகுதிகளில் புலம் பெயர்ந்த மற்றும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய ஏழைக் குடும்பங்களுக்கு வீட்டு உபகரணங்களை வழங்கி வருகிறது. ஒவ்வொரு தொகுப்பிலும் (கிட்) பயோ கியாஸ் அடுப்பு, சோலார் விளக்கு, டிடெர்ஜென்ட் சோப்புகள், கழிப்பறை சாமான்கள், ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கன்டெய்னர்கள், முதலுதவிப் பெட்டி, சானிடரி பேடுகள், தார்பாலின்கள் உள்ளிட்ட பொருட்களை ஒரு டிராவல் பேக்கில் வைத்து வழங்குகிறது. இந்த திட்டம் சங்க உறுப்பினரும் DGE-யுமான வீதல் ஷா மனதில் 2020–21 இல் உருவானது. இந்த திட்டத்தின் கீழ் இதுவரை 2,500 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

புனே புறநகர் பகுதிகளில் கரும்பு பயிரிடும் விவசாயப் பண்ணைகள் நிறைய உள்ளன. மற்ற இடங்களில் வேலைக்குச் செல்லும் விவசாயக் கூலிகள் அறுவடை நேரத்தில் நான்கு மாதங்கள் இந்த பண்ணைக்கு வந்து செல்கின்றனர். பெரும்பாலான விவசாயிகள் ஒன்றும் இல்லாமல் தான் வருவார்கள். நாங்கள் அவர்களுக்கு வீட்டுப் பயன்பாட்டு உபகரணங்களை இலவசமாக வழங்குவோம். அறுவடை நேரத்தில் அது அவர்களது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதாக இருக்கும் என்கிறார் ஹாப்பி ஃபேமிலி

கிட்ஸ் திட்டத்தின் மாவட்டத் தலைவர் விஜய் பாடீல். மேலும் அவர்கள் செல்லும் கிராமங்களில் ஏழை குடும்பங்களுக்கும் இந்த பொதிகளை வழங்கியுள்ளனர்.

வீட்டுப் பயன்பாட்டு உபகரணங்கள் அடங்கிய ஒவ்வொரு தொகுப்பும் ரூ.3,500 மதிப்பு கொண்டது. ஃபோஸிகோ இந்தியா (Foseco Inddia) நிறுவனம் தொடர்ந்து இந்த திட்டத்துக்கு கார்ப்பொரேட் நிறுவனங்களின் பொறுப்புணர்வு திட்ட நிதி மூலம் ஆதரவு அளித்து வருகிறது. புனே கிழக்கு ரோட்டரி சங்கமும் தனது அறக்கட்டளை மூலம் பங்களித்து வருகிறது. மற்றும் கடந்த மூன்று ஆண்டுகளில் 72 ரோட்டரி சங்கங்கள் இத்திட்டத்துக்கு பங்களிப்பு செய்துள்ளன. இந்த சங்கங்கள் பயனாளிகளின் குடும்பங்களை அடையாளம் காணவும் உதவி வருகின்றன என்றார் அவர்.

கடந்த ஆண்டு 1400 குடும்பங்களுக்கு இந்த உபகரண தொகுப்புகளை வழங்க சங்கம் 62,500 டாலர் சர்வதேச நிதியுதவி கேட்டு விண்ணப்பித்திருந்தது. நிலையான காரணிகள் இல்லை என கூறி உதவி மறுக்கப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு CSR நிதியுதவி மற்றும் சங்கங்களின் உதவியுடன் இத்திட்டதை தொடர முடியும் என்று நம்புகிறேன் என்றார் சங்கத்தின் தலைவர் சாஹில் விஜய் ஷாஹா. இந்த ஆண்டு 700 தொகுப்புகளை வழங்க சங்கம் திட்டமிட்டுள்ளது. மேலும் இந்த எண்ணிக்கையை 2,000-மாக உயர்த்தவும் முயற்சி செய்து வருகிறோம். கார்பொரேட் நிறுவனங்களின் நிதியுதவி கிடைத்தால் எங்கள் கனவு நிறைவேறும் என்றார் அவர் புன்னகையுடன்.

புனேயிலிருந்து 70 கி.மீ. தொலைவில் உள்ள வெல்ஹே என்னும் குக்கிராமத்தைச் சேர்ந்த குடும்பங்களை இந்த ஆண்டு ரோட்டேரியன்கள் அடையாளம் கண்டுள்ளனர். இங்கிருந்து அங்கு செல்வதற்கு 2 மணி நேர பயணம். அந்த கிராமத்தில போதிய அடிப்படை வசதி இல்லை. அவர்களுக்கு இந்த வீட்டுப் பயன்பாட்டு உபகரணங்கள் நிச்சயம் தேவை. இதற்காக நாங்கள் இதர சங்கங்களுடன் சேர்ந்து ஒரு திட்டத்தை தயாரித்தோம். அதாவது இதன் மூலம் இரண்டு தொகுப்புகளை இலவசமாக வழங்குவது என்பதுதான் அது. நாங்கள் ஒன்று இலவசமாக வழங்கினால், மற்றொரு சங்கமும் ஒரு தொகுப்பை இலவசமாக வழங்கும். இதன் மூலம் அதிக பயனாளிகளை சென்றடைய முடியும் என்றார் சங்கத்தின் தலைவர்.■

TRF உதவியுடன் நற்பணி

# கர்காலா-வில் ரோட்டரி விபத்து சிகிச்சை மையம்

ரோட்டரி செய்திக்குழு



TRF *அறங்காவலர் துணைத்தலைவர் பரத் பாண்ட்யா மற்றும்* IPDG Dr *ஜெயகௌரி ஹடிகல் அவர்களும் ரோட்டரி விபத்து சிகிச்சை மையத்தை* Dr TMA Pai *ரோட்டரி மருத்துவமனையில் துவக்கி வைக்கின்றனர்.*

கர்நாடகத்தின் உடுப்பி மாவட்டத்தில் கர்காலா-வில் இருக்கும் டாக்டர் TMA பாய் ரோட்டரி மருத்துவ மனையில் ரூ.52 லட்சம் மதிப்புள்ள கருவிகளைக் கொண்ட யெர்மல் ரேவதி பிரேமானந்தா ஷெனாய் ரோட்டரி விபத்து சிகிச்சை மையத்தை TRF அறங்காவலர் துணைத்தலைவர் டாக்டர் பரத் பாண்ட்யா சமீபத்தில் தொடங்கி வைத்தார். RCகள் கிரௌன் பாயின்ட், செஸ்டர் கவுன்டி (லயன்வில்லெ), RID 6540, அமெரிக்கா மற்றும் TRF ஆதரவுடன் ஒரு பன்னாட்டு நல்கையின் வழியாக RC கர்காலா ராக்சிட்டி, RID 3182 இதை அமைத்துள்ளது.

இந்த விழாவில் IPDG Dr ஜெயகௌரி ஹடிகல், PDG Dr பரதீஷ், DRFC Dr P நாராயணா, RC செஸ்டர் கவுன்டியைச் சேர்ந்த வசந்த பிரபு, மணிப்பால் MAHE பல்கலைக்கழகத் துணைவேந்தர் H S பல்லால் பங்கேற்றனர்.■

# மகப்பேறு மருத்துவப் பிரிவை புதுப்பித்த RC மெட்ராஸ் சென்ட்ரல்

V முத்துகுமரன்

சென்னை, எழும்பூரில் உள்ள அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் உள்ள மகப்பேறு மருத்துவ பிரிவு மற்றும் மகப்பேறு இயல் மருத்துவ கழகத்திற்கு வரும் நோயாளிகளும் அவர்களின் உதவியாளர்களும் இனி திறந்தவெளியில் கடும் வெயிலிலோ அல்லது மழையிலோ காத்திருக்க வேண்டியதில்லை. ரோட்டரி மாவட்டம் 3232-க்கு உட்பட்ட மெட்ராஸ் சென்ட்ரல் ரோட்டரி சங்கம், அவர்களுக்காக 2,000 சதுர அடியில், 36 இருக்கைகள் கொண்ட பார்வையாளர்கள் காத்திருப்பு அறையை ரூ.8 லட்சம் செலவில் நிர்மாணித்துள்ளது. மேலும் புறநோயாளிகள் பிரிவுடன் இணைந்த கருத்தரித்தல் ஆராய்ச்சி மையம் ரூ.3 லட்சம் செலவில் தடுப்புச்சுவர்கள் அமைக்கப்பட்டு தனி பிரிவாக சீரமைக்கப்பட்டுள்ளது. ரோட்டரி மாவட்டம் 3234-இன் DGN மற்றும் சங்க உறுப்பினர் வினோத் சரோகிக்கு சொந்தமான மெரீடியன் குளோபல் வென்ஞ்சர்ஸ் ஆடைகள் ஏற்றுமதி நிறுவனத்தின் கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு நிதி மூலம் ரூ.11 லட்சம் செலவில் இவை புதுப்பிக்கப்பட்டுள்ளது.

புதிதாக நிறுவப்பட்ட பார்வை யாளர்கள் காத்திருப்பு அறைக்கு DGN-ன் தாயாரின் பெயரில் மோகினி சரோகி காத்திருப்பு அறை என பெயரிடப்பட்டுள்ளது. விரைவில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதியும், நோயாளிகளுக்கும் உடன் வருபவர்களுக்கும் கேன்டீன் வசதியும் செய்துதரப்பட உள்ளதாக தெரிவித்தார் சரோகி. மகப்பேறு மருத்துவ புறநோயாளிகளுக்கான பிரிவை புதுப்பித்து தரம் உயர்த்த தகுந்த நன்கொடையாளர்களை மகப்பேறு மருத்துவக் கழகத்தின் துணை இயக்குநர் டாக்டர் மீனா சுரேஷ் தேடிவந்த நிலையில், தமிழக அரசின் முன்னாள் சுகாதாரச் செயலர் P செந்தில்குமார் ரோட்டரியை அணுகுமாறு கேட்டுக் கொண்டார்.

சங்கத்தின் IPP K P ஸ்ரீகுமார், இந்த மருத்துவத் திட்டத்திற்கு கார்ப்பொரேட் நிறுவனங்களின் உதவியை நாடினார். ஆனால், மகப்பேறு மருத்துவ புறநோயாளிகள் பிரிவு மிக மோசமாக இருந்ததை பார்த்த சரோகி, புதுப்பித்தல் பணிக்கான செலவு தொகையை தமது நிறுவனம் மூலம் வழங்க முன்வந்தார்.

**புதுப்பொலிவுடன் கருத்தரித்தல் மையம்**

கருத்தரித்தல் மையம் புறநோயாளிகள் பிரிவு, ஸ்கேன் அறை, ஆலோசனை அறை, கருவூட்டல் (IUI) அறை, விந்து

RID 3234 DGN *வினோத் சரோகி (வலதிலிருந்து 4வது) மற்றும் அவர் மனைவி உஷா, ஆகியோருடன் (இடமிருந்து) மகப்பேறு மருத்துவ பிரிவு துணை இயக்குனர்* Dr *மீனா சுரேஷ், அதன் இயக்குனர்* Dr K *கலைவாணி,* DG *ரவி ராமன் (வலதிலிருந்து 3வது),* RC *மெட்ராஸ் சென்ட்ரல் தலைவர் ப்ரகாஷ் வைத்தியநாதன் மற்றும்* RID 3232 *பொதுத்தோற்றம்* (public image) *தலைவர்* C *முத்துசாமி புதிய பார்வையாளர்கள் காத்திருப்பு அறை முன்.*






*கருத்தரித்தல் மைய துவக்க விழாவில் DG ரவி ராமன், DGN சரோகி மற்றும் சங்கத்தினர்.*

பகுப்பாய்வகம், விந்து மற்றும் இரத்த சேகரிப்பு அறை என மிக நேர்த்தியாக பிரிக்கப்பட்டு பளபளப்பான தோற்றத்துடன் அமைக்கப்பட்டிருந்தது. இங்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தில் குறைந்தது 10 நோயாளிகள் ஆலோசனை, பரிசோதனை மற்றும் சிறிய அறுவைச்சிகிச்சைகள் பெறுகின்றனர் என்று விளக்கினார் மகப்பேறு மருத்துவ கழகத்தின் இயக்குநர் டாக்டர் K கலைவாணி.

RC மெட்ராஸ் சென்ட்ரல் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளத் தொடங்கியதும் தான் அரசு விழித்துக் கொண்டு கருத்தரித்தல் ஆராய்ச்சி மையத்துக்கு தேவையான உபகரணங்களை வழங்கியது. இப்போது அரசு கருத்தரித்தல் ஆராய்ச்சி மையத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்காக அரசு விதைப் பணமாக ரூ.1.5 கோடி வழங்க முன்வந்துள்ளது. மீண்டும் நாங்கள் விரிவாக்கப் பணிகளுக்கு ரோட்டரியின் உதவியை நாடுவோம் என்றார் Dr கலைவாணி.

மாவட்ட ஆளுநர் ரவிராமன் கூறுகையில், பார்வையாளர்களுக்கான காத்திருப்பு அறை மற்றும் புறநோயாளிகள் பிரிவு சீரமைப்பு பணிகள் சிறப்பாக இருந்ததாக தெரிவித்தார்.

சங்கத்தின் தலைவர் பிரகாஷ் வைத்தியநாதன் கூறுகையில், இந்த மருத்துவத்திட்டத்தின் ஒரு பகுதியாக நாங்களும் இருக்கிறோம் என்பதில் எங்களுக்கு மகிழ்ச்சிதான். மகப்பேறு மருத்துவக் கழகமும், அங்குள்ள ஊழியர்களும் எதைக் கேட்டாலும் நாங்கள் செய்துதர தயாராக இருக்கிறோம் என்றார். சரோகி மனைவி உஷா கூறுகையில், புதிதாக குழந்தையை பெற்றெடுத்த தாய், இங்கே மருத்துவ வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகள் சூப்பராக இருந்தது என்று கூறிய போது சிலிர்ப்பாக இருந்தது என்றார்.■

## தில்லி மருத்துவமனைகளுக்கு அவசர மருத்துவ உதவி வண்டிகள்

ரோட்டரி செய்திக்குழு




**இடமிருந்து:** IPP *விகாஸ் டிங்க்ரா,* RI *இயக்குனர்* T N *ராஜு சுப்ரமணியன்,* DG *ஜீதேந்தர் குப்தா, அஜீத் ஜலான், ராஜன் சோப்ரா மற்றும்* DG *குப்தாவின் மனைவி தீப்தி.*

ஃபரீதாபாத், ரோஹ்டக், தில்லி, பல்வால், குர்காவ்னில் உள்ள மருத்துவ மனைகளுக்கு ஏழு மருத்துவ உதவி வண்டிகளையும், ஆட்டிசம் குறைபாடு கொண்ட குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளும் ஷௌர்யா அறக்கட்டளைக்கு ஒரு வேனையும் கொடையளித்துள்ளது RC தில்லி சவுத் வெஸ்ட், RID 3011. இதை முன்னாள் தலைவர் அஜீத் ஜலான் கோரிக்கையின்படி, EValue Serve-ன் CSR நல்கை ஆதரித்தது.

DG ஜீதேந்தர் குப்தா, IPDG அசோக் கன்டூர், PDGகள் சஞ்சீவ் ராய் மெஹ்ரா, வினய் பாட்டியா கலந்து கொண்ட நிகழ்ச்சியில் ரூ.80 லட்சம் மதிப்புள்ள இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்த RID T N சுப்ரமணியன் சங்க உறுப்பினர்களைப் பாராட்டினார், கோவிடின் போது நெருக்கடிப் பராமரிப்புக்கு மருத்துவ உதவி வண்டிகள் போதாமல் மக்கள் துன்பப்பட்டதை நினைவு கூர்ந்தார்.■

# WE WANT YOUR FEEDBACK

Rotary

## THE ALL-MEMBER SURVEY IS COMING IN OCTOBER!

This is your chance to tell us what you like, what you don't like, and what you want from your Rotary membership.

To make sure you receive the survey, update your email address at my.rotary.org/profile/me.

Rotary PEOPLE OF ACTION

# ரோட்டரியின் மக்கள் நல திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

## புதிய ரோட்டரி பவன்



*ரோட்டரி பவன் திறப்பு விழாவில் TRF அறங்காவலர் துணை த்தலைவர் பரத் பாண்ட்யா, PDGs கிஷோர் கேடியா, ஆனந்த் ஜுன்ஜுனுவாலா மற்றும் K S சுந்தர்ராஜன்.*

RC சோப்டா, RID 3030, தன்னுடைய ரோட்டரி பவனைத் தொடங்கி உள்ளது. நிதி திரட்டல் முயற்சிகளாலும், முன்னாள் தலைவர் LN பாட்டீல் வழங்கிய ரூ.5 லட்சம் நன்கொடையாலும் இந்த 2,000 சதுர அடிக் கூடம் உருவானது. TRF அறங்காவலர் துணைத் தலைவர் பரத் பாண்ட்யா இதனை திறந்துவைத்தார்.■

## RC முலுண்ட் ராஜஸ்ரீ பிர்லாவை கௌரவிக்கிறது



*திருமதி ராஜஸ்ரீ பிர்லா அவர்களை PRID அஷோக் மகாஜன் மற்றும் ப்ரம்மகுமாரிகள் இயக்கத்தைச் சேர்ந்த B K ஷிவாணி அவர்கள் கௌரவிக்கின்றனர்.*

ஆதித்யா பிர்லா அறக்கட்டளையின் தலைவர் ராஜஸ்ரீ பிர்லவிற்கு 'சிறந்த பரோபகாரர்' விருதினை RC முலுண்ட், RID 3141, தனது 60வது ஆண்டு கொண்டாட்டத்தை ஒட்டி அளித்தனர். திருமதி பிர்லா TRF-க்கு இதுவரை ரூ.150 கோடி அளித்துள்ளார்.■

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி



*மொஹாலி துணை ஆணையரிடம் சங்கத்தினர் வெள்ள நிவாரணப் பொருட்களை அளிக்கின்றனர்.*

இரண்டு பம்புகள், 300 மளிகைப் பொருள் பைகள், 50 படுக்கை விரிப்புகளை மொகாலி துணை ஆணையர் மற்றும் நகராட்சிக் கழகத்துக்கு வழங்கியது RC சண்டிகர் சென்ட்ரல், RID 3080. சமீபத்தில் பெய்த கனமழையால், தாழ்வான பகுதிகளில், குடியிருப்பு வளாகங்களின் அடித்தளங்களில் சேரும் வெள்ள நீரை நீக்குவதற்கு இந்தப் பம்ப் உதவும். மளிகைப் பொருள் பைகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்படும்.■

## குறிப்பேடுகள் நன்கொடையாக வழங்குதல்




*RC சூரத் சங்கத்தினர் மாணவர்களுக்கு புத்தகங்களை அளிக்கின்றனர்.*

சூரத் அருகிலுள்ள குகேரி கிராமத்தில் சாந்தாபா பள்ளி மாணவர்களுக்கு RC சூரத் (RID 3060) சுமார் 3,000 நோட்டுப்புத்தகங்களை வழங்கியது. மேலும், சங்க உறுப்பினர்கள் சஞ்சய் ஜலன் மற்றும் அனுராக் கபூர் தலா ஒரு மாணவருடைய ஆண்டுச் செலவுகளை ஆதரிப்பதாக (மொத்தம் ஆண்டுக்கு ரூ.30,000) உறுதியளித்தார்கள்.■

# ரோட்டரி அறக்கட்டளை அறங்காவலர்கள்

*RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் அறங்காவலர்களைப் பரிந்துரைக்கிறார். இவர்களை RI வாரியம் நான்கு ஆண்டுப் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கிறது. ஜூலை 1 அன்று நான்கு புதிய அறங்காவலர்கள் பொறுப்பேற்கிறார்கள்.*




## பேரி ரஸ்ஸின்

*தலைவர்* 2023–24
*அறங்காவலர்* 2020–24
RC *ஈஸ்ட் நஸ்ஸௌ பகாமாஸ்*

பேரி ரஸ்ஸின் பகாமாஸில் உள்ள நஸ்ஸௌவில் இருக்கும் டாக்டர்ஸ் மருத்துவமனை நல அமைப்பின் இயக்குநர்களில் ஒருவர், முன்னாள் தலைவர். இங்கு இவர் 38 ஆண்டுகள் பணியாற்றிய பின் ஓய்வு பெற்றார்.

1980லிருந்து ரோட்டரியனாகச் சேவையாற்றிவரும் ரஸ்ஸின் 2018–19ல் RI தலைவராகச் சேவையாற்றினார். அப்போது அவர் ரோட்டரி, ரோட்டராக்ட் சங்கங்கள் இன்னும் நெருங்கிப் பணியாற்றவேண்டும் என்று குரல் கொடுத்தார், 2019 CoL-ல் RI உறுப்பினர் வரையறையில் ரோட்டராக்ட் சங்கங்களை இணைக்கும் படி முன்வைப்பை வழங்கினார். இவர் RI-ல் தலைவராக, TRF அறங்காவலராக, துணைத் தலைவராக, நிதி, ரோட்டரியின் எதிர்காலத்தை வடிவமைக்கும் குழுக்களின் தலைவராக, RI பயிற்சித் தலைவராக, கருத்தரங்கப் பயிற்சியாளராகச் சேவையாற்றியுள்ளார்.

ரஸ்ஸின் "Service above Self," விருதைப் பெற்றுள்ளார். இவரும் இவருடைய துணைவர் எஸ்தரும் Major Donors, Benefactors, பால் ஹாரிஸ் தோழர்கள், பால் ஹாரிஸ் சமூக உறுப்பினர்கள்.




## மார்க் மலோனி

*தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளவர்* 2023–24
*அறங்காவலர்* 2021–25
RC *டெகாடர், அலபாமா,* USA

பிளாக்பர்ன், மலோனி மற்றும் ஷுப்பெர்ட் சட்ட நிறுவனத்தின் முதன்மை அலுவலரான மார்க் மலோனி 2019–20ல் RI தலைவராகச் சேவையாற்றினார். அப்போது, கோவிட்-19 நோய்ப்பரவல் நேரத்தில் நடத்தப்பட்ட முதல் மெய்நிகர் RI மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். 1980லிருந்து ரோட்டரியனாகச் சேவையாற்றிவரும் இவர், RI இயக்குநராக, அறக்கட்டளை அறங்காவலராக, துணைத் தலைவராக, 2003–04 RI தலைவர் ஜொனாத்தன் மஜியாக்பெ-யின் உதவியாளராகவும் சேவையாற்றியுள்ளார். இவர் CoL-லும் பங்கேற்றுள்ளார்.

மலோனி அவர்களின் மனைவி கேய் அதே சட்ட நிறுவனத்தில் வழக்கறிஞர், RC டெகாடர் டேபிரேக், அலபாமா, USA, உறுப்பினர் மற்றும் முன்னாள் தலைவர். இவர்கள் இருவரும் பால் ஹாரிஸ் தோழர்களாக, Major Donors, Bequest Society உறுப்பினர்களாக TRFஐ ஆதரிக்கிறார்கள்.




## பரத் பாண்ட்யா

*அறங்காவலர்* 2022–26
RC *போரிவ்லி, மகாராஷ்டிரம்*

பரத் பாண்ட்யா பொது மற்றும் லாப்ரோஸ்கோபிக் அறுவைச் சிகிச்சை மருத்துவராகப் பணியாற்றிவருகிறார். இவரும் இவருடைய மனைவியான மாதவியும் மும்பையில் ஒரு தனியார் மருத்துவமனையின் உரிமையாளர்கள்.

இவர் ரோட்டரியில் இயக்குநராக, RI பொருளாளராக, RC-ஆக, பயிற்சித் தலைவராக, வியூகத் திட்டமிடல், தலைமைப்பண்பு மேம்பாடு மற்றும் மாநாட்டை முன்னிறுத்தும் குழுக்களின் உறுப்பினராகவும் இந்தியப் போலியோப்ளஸ் குழுவிலும் சேவையாற்றியுள்ளார்.

இவர் Service Above Self, TRF's Citation for Meritorious Service, Distinguished Service விருதுகளை பெற்றவர். இவரும் மாதவியும் அறக்கட்டளைக்கு நிலை 2 Major Donors.



## மார்த்தா பீக் ஹெல்மன்

*அறங்காவலர்* 2022–26
RC *பூத்பே ஹார்பர், மேய்ன்,*
USA

மார்ட்டி ஹெல்மன் தொழில்துறை அலுவலர்களுக்கு எழுத்தாளராகவும், McGraw-Hill, அமெரிக்க மேலாண்மை அமைப்பில் இதழாசிரியராகவும் பணியாற்றியவர். அதன்பிறகு, அவர் ஒட்டோ மற்றும் ஃபிரான் வால்டர் அறக்கட்டளை என்ற லாப நோக்கற்ற அமைப்பின் தலைவராகச் சேவையாற்றினார். இந்த அமைப்பு, இஸ்தான்புல்லில் புதிய ரோட்டரி அமைதி மையத்துக்கு நிதியளிக்க TRF உடன் இணைந்துள்ளது.


ஹெல்மனும் அவருடைய மறைந்த துணைவர் ஃபிரான்க்கும் 2003ல் RC பூத்பே ஹார்பரில் இணைந்தார்கள். AKS உறுப்பினரான ஹெல்மன் பால் ஹாரிஸ் சமூகம் மற்றும் போலியோப்ளஸ் சமூக உறுப்பினராக ரோட்டரியை ஆதரிக்கிறார். இவரும் ஃபிரான்க்கும் TRF Legacy Society-ன் பதிவு உறுப்பினர்கள்.



## சுன்-வூக் ஹ்யுன்

*அறங்காவலர்* 2023–27,
RC *சியோல்-ஹன்சூ, கொரியா*

ஹ்யுன் சியோலைச் சேர்ந்த கிம் மற்றும் சாங்க் நிறுவனத்தின் மூத்த கூட்டாளர். 1991ல் RC சியோல்-ஹன்சூ பதிவு உறுப்பினராக இணைந்த ஹ்யுன் RIல் பயிற்சித் தலைவராக, RIPR-ஆக, 2016 சியோல் மாநாட்டுக்கான உள்ளூர் ஏற்பாட்டுக் குழு உறுப்பினராக, சட்ட அறிவுறுத்துநராகச் சேவையாற்றியுள்ளார். இவர் கொரியா ரோட்டரி அறக்கட்டளையின் இயக்குநராகவும் சேவையாற்றுகிறார். இவர் ஓர் AKS உறுப்பினர் ஆவார்.




## ஜெனிஃபர் ஜோன்ஸ்

*அறங்காவலர்* 2023–27
RC *வின்ட்சர்-ரோஸ்லாண்ட், ஒண்டாரியோ*

ஜோன்ஸ் ஒண்டாரியோவில் ஊடக நிறுவனம் ஒன்றின் நிறுவனர் ஆவார். 2022–23ல், RIன் முதல் பெண் தலைவராக இவர் சேவையாற்றினார்.

இவர் ரோட்டரியின் "Service Above Self" மற்றும் TRF-ன் Citation for Meritorious Services விருது பெற்றுள்ளார். நிக் கிரயாசிச் என்ற குடும்ப மருத்துவரை ஜோன்ஸ் மணந்துள்ளார். இவர்கள் AKS, பால் ஹாரிஸ் சமூகம் மற்றும் Bequest Society உறுப்பினர்களாக TRFஐ ஆதரிக்கிறார்கள்.



## ஹோல்கர் நாக்

*அறங்காவலர்* 2022–26,
RC *ஹெர்ஜோக்டம் லௌவன்பர்க்-மொல்ல்ன், ஜெர்மனி*

நாக் KG என்ற ரியல் எஸ்டேட் நிறுவனத்தின் உரிமையாளரான நாக் 1992லிருந்து ரோட்டரி உறுப்பினராகச் சேவையாற்றி வருகிறார். இவர் 2020–21 ஆண்டு RI தலைவராவார்.

நாக் மற்றும் அவருடைய மனைவி சுசான்னெ Major Donors, மற்றும் Bequest Society உறுப்பினர்கள்.



## ஹ்சியு-மிங் லின்

*அறங்காவலர்* 2020–24
RC *தாய்பெய் டங்டெஹ், தைவான்*

லின், செயற்கைக்கோள் தகவல் தொடர்பு அமைப்புகளை வடிவமைத்து இணைக்கிற கான்டினென்டல் வேர்ல்ட்வைட் என்டர்ப்ரைசஸ் என்கிற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஆவார். 1988லிருந்து ரோட்டரியனாகச் சேவையாற்றி வரும் லின் ரோட்டரியில் RRFC-ஆக, RC-ஆக, RIPR-ஆக மற்றும் RI வாரியத்தில் இயக்குநர் மற்றும் பொருளாளராகச் சேவையாற்றியுள்ளார். இவரும் இவருடைய மனைவி சென்-யி அவர்களும் AKS உறுப்பினர்கள். அத்துடன், லின் TRFக்குப் Benefactor மற்றும் பால் ஹாரிஸ் தோழராகவும் சேவையாற்றி வருகிறார்.



## லாரி லன்ஸ்ஃபோர்ட்

*அறங்காவலர்* 2021–25
RC *கன்சாஸ் சிட்டி-பிளாசா, மிசூரி*, USA

சான்றிதழ் பெற்ற பொதுக் கணக்காளரான லாரி லன்ஸ்ஃபோர்ட், பெர்ன்ஸ்டிய்ன்-ரெய்ன் விளம்பர நிறுவனத்தின் மூத்த துணைத் தலைவர் மற்றும் தலைமை நிதி அலுவலர் ஆவார்.

லன்ஸ்ஃபோர்ட் 1991ல் ரோட்டரியில் இணைந்தார். இவர் RIல் இயக்குநராகவும் RI தலைவர் மார்க் மலோனி-யின் உதவியாளராகவும் சேவையாற்றியுள்ளார்.

லன்ஸ்ஃபோர்டும் இவருடைய மனைவி ஜில்லும் Major Donors, Benefactors மற்றும் Bequest Society சமூக உறுப்பினர்கள். இவர் Citation for Meritorious Services மற்றும் RI "Service Above Self" விருதுகளைப் பெற்றுள்ளார்.



## கீதா மனெக்

*அறங்காவலர்*, 2020–24
RC *முதைகா, கென்யா*

இரண்டாம் தலைமுறைக் கென்யரான கீதா மனெக் UKல் தொழிற்கல்விப் பட்டம் பெற்றார். பின்னர் நைரோபி திரும்பித் தன்னுடைய குடும்பத்தின் சொத்து மேலாண்மைத் தொழிலில் இணைந்தார்.

கீதா 1997ல் ரோட்டரியில் இணைந்தார். இவர் "இளம்பிள்ளைவாதத்தை ஆப்பிரிக்காவை விட்டு விரட்டுவோம்" பரப்புரையின் தன்னுடைய மாவட்டத்துக்கான ஒருங்கிணைப்பாளராகவும் சேவையாற்றினார்.

கென்யாவில் ரோட்டரி எழுத்தறிவு முன்னெடுப்பை வழிநடத்தவும் இவர் உதவிவருகிறார். கீதா பெருமை மிக்க "Service Above Self" விருதைப் பெற்றுள்ளார். இவரும் இவருடைய துணைவர் கௌசிக்கும் (இவர் 2008–09ல் DGஆகச் சேவையாற்றியவர்) Major Donors, Benefactors, Bequest Society மற்றும் AKS உறுப்பினர்கள்.




## அகிரா மிகி

*அறங்காவலர்* 2021–25
RC *ஹிமெஜி, ஜப்பான்*

பல் மருத்துவராகப் பணியாற்றிவரும் அகிரா மிகி 1980ல் ரோட்டரியில் இணைந்தார். இவர் RI இயக்குநராக, 2020–21ல் அறக்கட்டளை அறங்காவலர்களுக்கான சிறப்பு

அறிவுறுத்துநராகச் சேவையாற்றியுள்ளார். இவர் RIPR-ஆக, பயிற்சித் தலைவராக, GETS பயிற்சியாளராக, ARC-ஆக மற்றும் CoL பிரதிநிதியாகவும் சேவையாற்றியுள்ளார். மிகி முன்னாள் இன்டராக்டர், TRF-ன் Citation for Meritorious Service விருது பெற்றவர். இவரும் இவருடைய மனைவி சிஹாரு அவர்களும் AKS உறுப்பினர்கள், Benefactors மற்றும் Major Donors. TRF-க்கு மிகப் பெரிய கொடையாளர்கள்.




## கிரெக் E பாட்

*அறங்காவலர்* 2022–26

RC *எவர்கிரீன், கொலராடோ,* USA

கிரெக் சான்றிதழ் பெற்ற பொதுக் கணக்காளராகவும் தனி நபர் நிதிச் சிறப்பு வல்லுநராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 1982ல் ரோட்டரியில் இணைந்த இவர் RIல் துணைத் தலைவராகவும் இயக்குநராகவும் சேவையாற்றியுள்ளார். அத்துடன், இவர் செயல்பாட்டு ஆய்வுக் குழுவிலும் TRF-ன் முதலீட்டுக் குழுவிலும் சேவையாற்றியுள்ளார்.

ரோட்டரி அறக்கட்டளையின் மிகப் பெரிய பரிசுகள் அறிவுறுத்துநரான கிரெக் தன்னுடைய மாவட்டத்தின் மில்லியன் டாலர் இரவு உணவை நடத்தினார். இந்த நிகழ்வு ஒரே இரவில் $3.1 மில்லியனுக்குமேல் திரட்டியது. கிரெக் “Service Above Self” விருதையும் TRF-ன் Citation for Meritorious Service விருது பெற்றுள்ளார். இவரும் இவருடைய துணைவர் பாம் அவர்களும் Major Donors, AKS, Bequest Society மற்றும் பால் ஹாரிஸ் சமூகத்தின் உறுப்பினர்கள்.



## கார்லோஸ் சன்டோவல் டெல்கடோ


*அறங்காவலர்* 2023–27

RC *சான் நிகோலஸ் டி லாஸ் கர்ஜா, மெக்சிகோ*

சன்டோவல் மெக்சிகோவில் ஆற்றல் பிரிவின் முன்னணி நிறுவனமும் எக்ஸான் மொபிலின் முதன்மை வழங்குநருமான ஆர்சன் கார்ப் என்ற நிறுவனத்தின் தலைவர் ஆவார்.

1975ல் ரோட்டரியில் இணைந்த இவர் RI மற்றும் TRF-ல் RRFC-ஆக, நிதி மேம்பாடு மற்றும் அமைதி மையங்கள் குழுக்களின் உறுப்பினராக, அசாதாரணமான நன்கொடைகள் நன்கொடை நிறுவல்/மிகப் பெரிய பரிசுகள் மதிப்பீட்டாளராகச் சேவையாற்றியுள்ளார். அத்துடன், இவர் 2025 வரை சமூகப் பொருளாதார மேம்பாட்டு மிகப் பெரிய பரிசுகள் முன்னெடுப்பு அறிவுறுத்துநராகச் சேவையாற்றுவார்.

சன்டோவல் தகுதி மிக்க சேவைக்கான TRF மேற்கோளைப் பெற்றுள்ளார். இவரும் இவருடைய துணைவர் மார்த்தா அவர்களும் AKSன் பிளாட்டினம் அறங்காவலர்கள் வட்ட உறுப்பினர்கள்.



## டென்னிஸ் J ஷோர்


*அறங்காவலர்* 2023–27

RC *ஹாத்தோர்ன், ஆஸ்திரேலியா*

*டென்னிஸ் ஷோர் பதிவு பெற்ற வேதியியல் பொறியாளர் ஆவார்.* இவர் 1980ல் ரோட்டரியில் சேர்ந்தார். இவர் நன்கொடை நிறுவல்/மிகப் பெரிய பரிசுகள் அறிவுறுத்துநராகச் சேவையாற்றியுள்ளார், ஆஸ்திரேலிய ரோட்டரி அறக்கட்டளையின் துணைத் தலைவராகச் சேவையாற்றிவருகிறார்.

இவர் மூன்று முறை RIPR-ஆகவும் இரண்டு முறை CoL பிரதிநிதியாகவும் சேவையாற்றியுள்ளார். இவர் மே மாதம் மெல்போர்னில் நடைபெற்ற RI மாநாட்டின் உள்ளூர் ஏற்பாட்டுக் குழுவின் துணைத் தலைவர் மற்றும் முன்வைப்புகள் இயக்குநராகவும் சேவையாற்றினார்.

2017ல் இவர் ஒரு மில்லியன் டாலர் இரவு உணவை நடத்தினார், அது TRFக்கு $3.5 மில்லியனுக்குமேல் திரட்டியது. ஷோர் மற்றும் அவருடைய மனைவி லிண்டா இருவரும் Major Donors Bequest Society பால் ஹாரிஸ் சமூகத்தின் உறுப்பினர். இவர் TRF-ன் Distinguished Service மற்றும் Citation for Meritorious Service விருது பெற்றுள்ளவர்.



## அஜிஜ் மேமன்


*அறங்காவலர்* 2020–24

RC *கராச்சி, பாகிஸ்தான்*

அஜிஜ் மேமன் பாகிஸ்தானின் முன்னணி துணி மற்றும் ஆயத்த ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நிறுவனமான கிங்ஸ் குழுமத்தின் தலைவர் ஆவார்.

இவர் 1995ல் ரோட்டரியில் இணைந்ததிலிருந்து, இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவதில் தன்னுடைய தலைமைக்கெனப் பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

மேமன் “Service Above Self” விருதையும், இளம்பிள்ளைவாதம் இல்லாத உலகுக்கான பன்னாட்டு மற்றும் உள்ளூர் சேவை விருதுகளையும், TRFன் மிகச் சிறந்தசேவை விருதையும், Citation for Meritorious Service விருதையும் பெற்றுள்ளார். இவரும் இவருடைய மனைவி சாமினா-வும் AKS உறுப்பினர்கள்.



## ஜான் ஹ்யூக்கோ

*பொதுச் செயலாளர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர்*

RC *கியிவ், உக்ரைன்*

ஹ்யூக்கோ அவர்களுடைய வாழ்க்கைக் குறிப்புக்கு, ஆகஸ்ட்’23 இதழைப் பாருங்கள்.

©Rotary.org

# RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

**தெற்கு ஆசியாவிலிருந்து ரோட்டரி ஆண்டு 2022–23க்கான நிதி திரட்டல் சிறப்புப் புள்ளிவிவரங்கள்**

- இந்தியா தன்னுடைய மிகப் பெரிய பங்களிப்பான $31.2 மில்லியனை எட்டியுள்ளது, உலக அளவில் TRF வழங்கலில் தன்னுடைய 2ம் நிலையைத் தக்கவைத்துக்கொண்டுள்ளது.
- $6.5 மில்லியன் வழங்கி உலகில் முதல் இடத்தைப் பிடித்தது RID 3141.
- இந்தியாவின் ஒன்பது மாவட்டங்கள் $1 மில்லியன் இலக்கைத் தாண்டின.
- 2022–23ல் தெற்கு ஆசியாவிலிருந்து 38 புதிய AKS உறுப்பினர்கள் (நிலை மாற்றம் உள்பட) சேர்க்கப் பட்டார்கள்.
- 71% சங்கங்களும் 32% உறுப்பினர்களும் TRFக்குப் பங்களித்துள்ளார்கள், 10 மாவட்டங்கள் 100% வழங்கும் சங்கங்கள் என்ற நிலையை எட்டின.

**Zone-wise TRF contribution update as on June 2023 (interim unaudited)**

in US$

| Zone | Annual giving | PolioPlus | Endowment Fund | Other giving | Total contribution |
|---|---|---|---|---|---|
| 4 | 2,884,115 | 177,420 | 1,664,264 | 8,427,642 | 13,153,441 |
| 5 | 2,293,397 | 498,792 | 567,171 | 3,572,777 | 6,932,137 |
| 6 | 1,368,954 | 140,348 | 374,507 | 1,776,751 | 3,660,560 |
| 7 | 2,645,959 | 302,428 | 932,757 | 3,121,046 | 7,002,190 |
| Total | 9,192,424 | 1,118,987 | 3,538,700 | 16,898,216 | 30,748,328 |
| #Total | 8,950,358 | 2,074,372 | 3,416,792 | 16,778,662 | 31,220,184 |
| 1B* | 189,936 | 86,524 | 55,125 | 462,120 | 793,705 |
| #Total | 9,497,439 | 2,216,404 | 3,699,592 | 17,454,994 | 32,768,429 |

# India and South Asia total contribution includes $1 million contribution of Rajashree Birla for Polio.

**Zone-1B figure includes only Pakistan and Bangladesh.*

**South Asia's million dollar districts 2022–23 (interim unaudited update)**

| Zone | District | Total contribution | Worldwide rank |
|---|---|---|---|
| 4 | 3141 | $6,510,341 | 1 |
| 7 | 3131 | $2,615,321 | 5 |
| 5 | 3232 | $1,998,018 | 9 |
| 4 | 3011 | $1,836,479 | 12 |
| 5 | 3201 | $1,808,675 | 13 |
| 4 | 3012 | $1,765,200 | 14 |
| 7 | 3190 | $1,633,379 | 17 |
| 6 | 3110 | $1,311,847 | 34 |
| 4 | 3060 | $1,054,754 | 58 |

**மாவட்டங்களுக்கான பாராட்டுச் சான்றிதழ்**

TRF அறங்காவலர்களுடைய ஏப்ரல் 2023 கூட்டத்தின் போது, ஒரு ரோட்டரி ஆண்டில் நல்கை அறிக்கையிடல் தேவைகளில் குறைந்தது 90% இணங்கும் மாவட்டங்களை ஆண்டுதோறும் அங்கீகரிக்கலாம் என்று தீர்மானிக்கப் பட்டது. மேலும் தகவல்களுக்கு, TRF கொள்கைகள் குறியீட்டில் 34.050.3வது பிரிவைப் பாருங்கள்.

2022–23ல், உலக அளவில் 39 மாவட்டங்கள் தங்களுடைய மிகச் சிறந்த நல்கை அறிக்கையிடல் முயற்சிகளுக்கென அங்கீகரிக்கப் பட்டன, அறங்காவலர் தலைவர் கையொப்பமிட்ட பாராட்டுச் சான்றிதழைப் பெற்றன. இந்த முக்கியமான அங்கீகாரத்தைப் பெற்ற RID 3203ஐ TRF அறங் காவலர் துணைத் தலைவர் பரத் பாண்ட்யா ரோட்டரியின் சேவைப் பணித் துறையுடன் இணைந்து பாராட்டுகிறார்.

அடுத்த நான்கு காலாண்டுப் பகுப்பாய்வுகளில் அனைத்து மாவட்டங்களும் 90%க்கு மேல் அறிக்கையிடல் இணக்கம் என்கிற இலக்கைக் கொண்டிருக்கவேண்டும், 2023–24 ரோட்டரி ஆண்டில் மாவட்ட நல்கைகள் மற்றும் மாவட்ட ஆதரவு பெறும் பன்னாட்டு நல்கைகளுக்கு 100% இணக்கம் என்கிற இலக்கை எட்டவேண்டும் என ரோட்டரி ஊக்குவிக்கிறது. வெளிப்படையான அறிக்கையிடல் மற்றும் பணிச்சேவைக்கு நீங்கள் உங்களை அர்ப்பணித்துக் கொண்டால், உங்கள் சமூகங்களில் பொருளுள்ள தாக்கத்தைத் தூண்டுவதற்கு அது உதவும். உங்களுடைய மிகச்சிறந்த பணியைத் தொடருங்கள். உங்களுடைய வருங்கால முயற்சிகள் அனைத்திலும் உங்களுக்குப் பெரிய வெற்றி கிடைக்கவேண்டும் என நாங்கள் வாழ்த்துகிறோம்.■

# இயற்கையிடமிருந்து ஒலிக்கும் எச்சரிக்கை மணி

ப்ரீத்தி மெஹ்ரா

*உலகம் எப்போதும் இல்லாத வெப்பமான ஜூலை மாதத்தை அனுபவித்ததால் எச்சரிக்கை மணிகள் ஒலிக்க தொடங்கியுள்ளது.*

புவி வெப்பமடைதல் பற்றிய கவலைகள், அதிக ஆர்வமுள்ள சுற்றுச்சூழல் ஆர்வலர்களால் மிகைப்படுத்தப்பட்டதா? பிரச்சனையை எதிர்கொள்ள விரும்பாதவர்கள் அப்படி நினைக்க விரும்புகிறார்கள். 2020-ஆம் ஆண்டு டாவோஸில் நடந்த உலகப் பொருளாதார மன்ற கூட்டத்தில் காலநிலை மாற்ற ஆர்வலர்களை "அழிவின் தீர்க்கதரிசிகள்" என்று முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கேலி செய்ததை அவர்கள் உங்களுக்கு நினைவூட்டுவார்கள். "நம் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் கட்டுப்படுத்த விரும்புபவர்கள்" என காலநிலை ஆலோசகர் குழுக்களை 'எச்சரிக்கைவாதிகள்' என்றும் அவர் நிராகரித்தார்.

ஆனால் 2023-இல், பதிவு செய்யப்பட்ட உலக வரலாற்றில் மிகவும் வெப்பமான ஜூலையை அனுபவித்து, திடீர் வெள்ளம், காடுகளில் தீ, உருகும் பனிப் பாறைகள், கடுமையான வெப்பம் மற்றும் கடல் நீர் சாதனை அளவில் வெப்பமடைதல் போன்ற எதிர்பாராத வானிலை நிகழ்வுகளை எதிர்கொண்ட பிறகு அத்தகைய சந்தேகம் கொண்டவர்கள் கூட அதை பற்றி யோசிக்க ஆரம்பித்துள்ளனர்.

நாம் காலநிலையின் அவசர நிலையை எதிர்கொள்கிறோம் என்பது அரசாங்கங்களுக்கிடையில் ஒருமித்த கருத்து. அந்த உணர்தல் சில ஆண்டுகளுக்கு முன்பு விடிந்தது, ஆனால் 2023-இன் தீவிரம் காரணமாக எச்சரிக்கை மணிகள் சத்தமாக ஒலிக்கின்றன.

ஆனால் எல்லா எச்சரிக்கை அறிகுறிகளும் இருந்தபோதிலும், காலநிலை போராட்டம் என்பது உயரடுக்கினரால் நடைமுறைப் படுத்தப்படும் ஒரு "மோகம்" என்று கூறும் மக்களை நான் இன்னும் சந்திக்கிறேன். பருவநிலை மாற்றம் ஒன்றும் புதிதல்ல, இயற்கை தன்னைத்தானே திருத்திக் கொள்ளும் என்று அவர்கள் உறுதிபடக் கூறுகிறார்கள். இன்னும் சிலர் குளிர்காலம் இருப்பதால் புவி வெப்பமடைதல் ஒரு கட்டுக்கதை என்று சுட்டிக்காட்டுகின்றனர். உண்மையில், வெப்பமயமாதல் சொல்லப்படும் அளவுக்கு மோசமாக இருக்காது என அவர்கள் சொல்லி, பிரச்சினையை சிறிதுபடுத்துகின்றனர்.

பசுமையாக வாழ்வது வேலை வெட்டி இல்லாதவர்கள் கடைப்பிடிக்கும் ஒரு பொழுது போக்கு என்று கருதக்கூடாது. அதேபோல்,



பிளாஸ்டிக் அல்லது காற்று மாசுபாட்டிற்கு எதிராக போராடும் மக்கள் பொழுதுபோக்கிற்காக செய்யும் செயலும் அது அல்ல. இது ஒரு தீவிரமான பிரச்சினை என்பதை உணர வேண்டும், மேலும் பசுமையான வாழ்க்கை முறை நம் அனைவரின் வாழ்விலும் இணைக்கப்பட வேண்டும். சுற்றுச் சூழலைக் காப்பாற்ற தனிப்பட்ட மற்றும் கூட்டு மட்டத்தில் நாம் செயல்பட வேண்டும். அரசாங்கங்கள் உட்பட நம் அனைவருக்கும் இதில் பங்கு உள்ளது.

பொறுப்புள்ள குடிமக்களாக நாம் முன்மாதிரியாக இருக்க வேண்டும். கார்பூலிங் பற்றி நாம் நிறைய கேள்விப்படுகிறோம், ஆனால் நம்மில் எத்தனை பேர் இதை நம் அன்றாட வாழ்வில் செயல்படுத்துகிறோம்? நாம் ஆர்வத்துடன் தொடங்கினாலும், விரைவில் ஆர்வத்தை இழக்கிறோம், ஏனெனில் வாகனத்தை சக பயணிகளுடன் பகிர்ந்து கொள்வதை விட உங்களின் தனிப்பட்ட இடத்தையே நீங்கள் விரும்புவீர்கள் என்பதில் சந்தேகமே இல்லை. இங்கே தான் அர்ப்பணிப்பும், ஒரு சிறிய தியாகமும் தேவைப்படுகிறது. சாலையில் ஒவ்வொரு கூடுதல் வாகனமும் அதிக புதைபடிவ எரிபொருளை பயன்படுகிறது மற்றும் அதிக காற்று மாசுபாட்டை ஏற்படுத்துகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.



உங்களால் விலையுயர்ந்த மின்சார வாகனம் வாங்க முடியும் வரை உங்கள் காரை குப்பையில் போடுங்கள் என்று யாரும் கேட்பதில்லை. ஆனால் அதன் பயன்பாட்டைக் குறைப்பது நிச்சயமாக உதவும். எனவே, நீங்கள் நிதானமாக அருகிலுள்ள இடத்திற்கு நடந்து செல்ல முடிந்தால், அது வாகனம் ஓட்டுவதை விட சிறந்த மற்றும் ஆரோக்கியமான விருப்பமாக இருக்கும். அதேபோல், பகிரப்பட்ட வாகனம் கார்பன் வெளியேற்றத்தையும் சாலையில் செல்லும் வாகனங்களின் எண்ணிக்கையையும் குறைக்கிறது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

தனியார் வாகனங்களுக்குப் பதிலாக பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவதில் உள்ள ஞானத்தைப் பற்றி நாம் அடிக்கடி பேசுகிறோம். ஆனால் பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பள்ளி பேருந்துகளில் அனுப்புவதை விட தனிப்பட்ட வாகனங்களில் வசதியாக அனுப்ப விரும்புகிறார்கள் என்பதற்கு பள்ளிகளுக்கு வெளியே இருக்கும் கார்களின் வரிசை போதுமான சான்று. இது மாற வேண்டும்.

ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கிலும் இதுவே நடக்கிறது. துணி அல்லது சணல் பையுடன் ஷாப்பிங் செல்லும் நண்பர்கள் பலரை நான் அறிவேன். ஆனால், நட்புடன் பழகும் காய்கறி விற்பனையாளர் பீன்ஸ் அல்லது தக்காளி என அனைத்தும் பையில் கலக்கப்படாமல் இருக்க பிளாஸ்டிக் பையில் போட்டு கொடுப்பதை அவர்கள் தடுக்க மாட்டார்கள். இதன் விளைவு என்னவென்றால், மறு சுழற்சி செய்ய முடியாத பிளாஸ்டிக் நிறைந்த சுற்றுச்சூழலுக்கு உகந்த பையுடன் சந்தையில் இருந்து வீடு திரும்புகிறார்கள்!

ஆனால், 2050ஆம் ஆண்டில் உலகளவில் பிளாஸ்டிக் 1.1 பில்லியன் டன்களை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதை எதிர்த்து ஒரு தனிநபரோ அல்லது தனிநபர்களின் குழுவோ என்ன செய்ய முடியும்? சண்டை ஒருதலைப்பட்சமாகத் தெரிகிறது, ஆனால் நம் ஒவ்வொருவராலும் அதில் பங்களிக்க முடியும்.

சுற்றுச்சூழல் பிரச்சனைகள் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த கூட்டு விழிப்புணர்வு அரசாங்கங்களையும் தொழில்துறையினரையும் செயல்பட வைப்பதற்கு அவசியம். தனிப்பட்ட மட்டத்தில் நீங்கள் உங்கள் அண்டை வீட்டினர், சமூகம் மற்றும் உங்கள் சங்கத்திற்கும் அறிவுறுத்தலாம். மாற்றத்தைக் கொண்டு வருவதற்காக அரசாங்கங்கள் மற்றும் தொழில்துறை தலைவர்களிடம் வேண்டுகோள் விடுக்க அவர்களை நீங்கள் ஊக்குவிக்கலாம். கூடி செலுத்தும் அழுத்தம் எப்போதும் வேலை செய்யும்.

சுற்றுச்சூழல் நெருக்கடியின் அவசரத்தை மிகைப்படுத்த முடியாது. உலகம் இதுவரை கண்டிராத வெப்பமான ஜூலை மாதத்தின் இறுதியில், ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் உலகிற்கு இந்த செய்தியை கூறினார்: “காலநிலை மாற்றம் வந்துவிட்டது. அது பயங்கரமாக இருக்கிறது. மேலும் அது இப்போது தான் ஆரம்பிக்கிறது. புவி வெப்பமடைதலின் சகாப்தம் முடிந்துவிட்டது; புவி கொதிக்கும் சகாப்தம் வந்துவிட்டது. இனி தயக்கம் இருக்கக்கூடாது, இனிமேலும் சாக்கு போக்கு சொல்லக்கூடாது. மற்றவர்கள் முதலில் செய்யட்டும் என காத்திருக்கவும் கூடாது”.

நாம் அனைவரும் செயல்பட வேண்டிய நேரம் இது. எனவே நேர்மையான நோக்கத்துடன் செயல்படுங்கள்.

எழுத்தாளர் மூத்த இதழாளர்
சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி
எழுதிவருகிறார்.

# ரோட்டரி ஆளுநர்





**அருண் பார்கவா**
பேக்கேஜிங் வடிவமைப்பாளர்,
RC மும்பை அந்தேரி, RID 3141

## மாற்றத்தைத் தழுவுங்கள்

“கோரிக்கைக்கு பதிலாக கொடுப்பதை ஊக்குவிக்கவும்” என்கிறார் அருண் பார்கவா. “பங்களிப்புகளில் இருந்து ரோட்டரி உருவாக்கும் நிஜ உலக மாற்றத்திற்கு கவனத்தை மாற்ற வேண்டும். இந்த அணுகுமுறை உறுப் பினர்களிடையே உண்மையான உற்சாகத்தைத் தூண்டும், இதன் விளைவாக தாராளமான பங்களிப்புகள் கிடைக்கும்”. எப்போதும் மாறிவரும் உலகத்திற்கு ஏற்றவாறு மாறும் மற்றும் பல்வேறு காலகட்டங்களில் முக்கியமாக பங்கு வகிக்கும் ரோட்டரியின் குறிப்பிடத்தக்க திறனால் பார்கவா ஈர்க்கப்பட்டார். அவரது தலைமை இந்த ஆற்றல்மிக்க தன்மையால் உத்வேகமடைந்துள்ளதாக கூறுகிறார்.

“நோக்கம் கொண்ட உறுப்பினர்துவம்” என்பதில் தீவிர நம்பிக்கை கொண்ட பார்கவா, ரோட்டரியில் சேர யாரையும் அவசரப்படுத்தாமல் இருப்பதன் முக்கியத்து வத்தை வலியுறுத்துகிறார். “வருங்கால உறுப்பினர்களுக்கு, சம்பந்தப்பட்ட கடமைகள் மற்றும் ரோட்டரியின் உருமாற்றும் பலன்கள் பற்றிய தெளிவான கண்ணோட்டம் வழங்கப்பட வேண்டும்” என்கிறார்.

அவரது மாவட்டம் பல்வேறு பின்னணியில் உள்ள நபர்களை ரோட்டரி சங்கத்தில் இணைக்க தீவிரமாக செயல் பட்டு வருகிறது. ஏப்ரல் 2023-இல் பட்டயப் படுத்தப்பட்ட RC இகுவலென்ஸ், LGBTQIA நபர்கள், அவர்களது குடும்பங்கள், நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளுக்கு ஒரு வரவேற்புமிக்க சூழலை வழங்குகிறது. காஷ்மீரில் கல்வி, சுகாதாரம் மற்றும் பெண்கள் அதிகாரம் ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தேசிய ஒருங்கிணைப்பு திட்டத்தில், இந்திய ராணுவத்துடன் இணைந்து அவர் தொடர்ந்து பணியாற்றுவார். 100 கிராமப்புற பெண்களுக்கு நர்சிங் பயிற்சி அளிப்பதன் மூலம், RID 3141 காஷ்மீரில் உள்ள 300 கிராமங்களில் இருக்கும் முக்கியமான மருத்துவ இடைவெளிகளை நிவர்த்தி செய்யும் என்றார் அவர்.■

**ஆஷா வேணுகோபால்**
பத்திரிகைத் துறை, RC நாசிக் கிரேப்சிட்டி, RID 3030

## உதாரணமாக நின்று வழிநடத்துங்கள்

ஆஷா வேணுகோபால் DGயாக அவர் பதவியேற்ற நாளில், AKS உறுப்பினராக சேர்க்கப்பட TRFக்கு $250,000 பங்களித்தார். ஆஷா தனது மாவட்டம் மூலம் அறக்கட்டளைக்கு $500,000 திரட்ட இலக்கு வைத்துள்ளார்.

அவரது மாவட்டம் சமூகத்தில் ஒரு உறுதியான மாற்றத்தை ஏற்படுத்துவதை உறுதிசெய்ய, அவர் “எளிய, செய்யக்கூடிய முயற்சிகளை” அமைத்துள்ளார். ப்ராஜெக்ட் அகன்க்ஷா: 7 முதல் 10 ஆம் வகுப்புகளுக்கான ஒரு பயன்பாடு செயலி, ஸ்மார்ட்போன்கள் மூலம் விரிவான பாடங்களை வழங்குவது மற்றும் 50,000 பேருக்கு ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ப்ராஜெக்ட் பூண்டின் கீழ், வீடுகளுக்கு ஏரேட்டர்கள் விநியோகிக்கப்படும், இதனால் தண்ணீர் வீணாவது 60 சதவீதம் குறைக்கப்படும். திட்டமிடப்பட்ட 5,500 சைக்கிள்களில், 1,000 ஏற்கனவே மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட சங்கங்கள் LGBTQIA உறுப்பினர்களை வரவேற்கின்றன, ஆனால் பெண் உறுப்பினர்களை அதிகரிக்க வேண்டும் என ஆஷா ஒப்புக்கொள்கிறார்,

சாத்தியமான உறுப்பினர்களை சேர அழைப்பதற்கு முன் அவர்களின் பின்னணியை சரிபார்க்கவும், மேலும் புதியவர்கள் ரோட்டரி தலைமைத்துவ நிறுவனத்தை ஆராய்ந்து ரோட்டரி பற்றிய அவர்களின் புரிதலை மேம்படுத்தவும் பரிந்துரைக்கிறார்.■

# களுடன் சந்திப்பு

**கிரண் ஜெஹரா**



## ஆனந்த ஜோதி

விருந்தோம்பல், RC திண்டுக்கல், RID 3000

### ரோட்டரி பெண்களுக்கான உகந்த மேடை

ஆனந்த ஜோதியின் ரோட்டரி பயணம், தனது குடும்பத்தின் விருந்தோம்பல் தொழிலில் நுழைந்த தருவாயில், ஒரு சங்கக் கூட்டத்திற்கு தன் நண்பர் அழைத்தபோது தொடங்கியது.

உறுப்பினர்களின் வளர்ச்சிக்காக, ஒவ்வொருவரும் இன்னொருவரை அழைத்துவரும் அணுகுமுறையை அவர் ஆதரிக்கிறார். உறுப்பினர்களை அவர்களின் தனிப்பட்ட வெற்றிக் கதைகளைப் பகிர்ந்து, ரோட்டரி அவர்களின் வாழ்க்கையில் ஏற்படுத்திய ஆழமான தாக்கத்தை விளக்குமாறு ஊக்குவிக்கிறார். ரோட்டரி பெண் தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு உகந்த மேடையை வழங்குகிறது என்கிறார் அவர்.

“ஆண் உறுப்பினர்களை மட்டுமே கொண்ட சங்கங்களின் நிலை மற்றும் நோக்கத்திற்கும் சவால் விடுவதில் அவர் உறுதியாக உள்ளார். நாங்கள் ஏற்கனவே 11 கலப்பு பாலின சங்கங்களை உருவாக்கத் தொடங்கியுள்ளோம், அவற்றில் இரண்டு பட்டயப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பிடத்தக்க வகையில், 67 வருடங்கள் ஆண்களுக்கு மட்டுமே பிரத்யேகமாக இருந்த ஒரு சங்கம் இப்போது இளைய உறுப்பினர்களையும் பெண்களையும் வரவேற்றுள்ளது என்று அவர் புன்னகைக்கிறார். TRF-க்கு வழங்கு வதற்கான அவரது இலக்கு $2.5 மில்லியன் ஆகும்.■



## ராகவன் S

எரிசக்தி பாதுகாப்பு, RC ஒசூர், RID 2982

### திட்டத்தால் இயங்கும் ரோட்டரி பாதை

ஒரு மாணவராக அரசு பள்ளி மற்றும் கல்லூரியின் தாழ்வாரங்களில் இருந்து, “மேடையில் உரை வழங்குவது, திட்டங்களைத் துவக்குவது மற்றும் அற்புதமான நபர் களுடன் ஈடுபடுவது என இந்த அசாதாரண பயணம் ரோட்டரியால் இயக்கப்படுகிறது” என்று ராகவன் போற்றுகிறார். 1997-இல் ரோட்டரியில் தன்னை அறிமுகப் படுத்தியதற்காக தனது நண்பர் சத்யபர்சாவை பாராட்டுகிறார்.

புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு முன் ரோட்டரிக்குத் தேவைப்படும் நிதி, நேரம் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை கோடிட்டுக் காட்டுமாறு தனது குழுவை வலியுறுத்துகிறார்.

“உலகப் போர்களின் போது ரோட்டரியின் விடா முயற்சியை நினைப்பது ஊக்கமளிக்கிறது, ஆனால் நிறுவனத்தின் எதிர்காலம் இன்று நாம் அதற்கு என்ன கொடுக்கிறோம் என்பதைப் பொறுத்தது” என்று அவர் கூறுகிறார். TRFக்கு $1 மில்லியன் பங்களிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளார்.

100 ரோட்ராக்ட், இண்டராக்ட் மற்றும் RC சங்கங்களை பட்டயப்படுத்த DG திட்டமிட்டுள்ளார். 10 மாரத்தான்கள் மற்றும் உடல் உறுப்பு தானம் மற்றும் பிற காரணங்களுக்காக விழிப்புணர்வை ஏற்படுத்த கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரை ஒரு ரோட்டரி ரயில் பயணம் ஆகியவை அவரது செய்ய வேண்டிய பட்டியலில் உள்ளன. 1.4 கோடி மதிப்பிலான புற்று நோய் கண்டறியும் வேன் வழங்குவதும் திட்டநிலையில் உள்ளது.■

# ஜாம்ஷெட்பூர் அருகில் ஒரு சமூகக் காடு

ரோட்டரி செய்திக்குழு



Rtn *த்ரிலோக் சிங் காரிக்ராம் கிராம சர்பாஞ்ச்,* Lion *ரமேஷ் ஷெத், சங்கத்தலைவர் அம்ரிதா வக்காரியா மற்றும் மஞ்சு சிங் முன்னிலையில் மரக்கன்று நடுகிறார்.*

கிழக்கு சிங்பம் மாவட்டத்தில், ஜாம்ஷெட்பூரிலிருந்து 35 கிமீ தொலைவில் உள்ள பதம்தா கிராமத்தின் வெளிப்பகுதியில் இருந்த அந்த ஓர் ஏக்கர் நிலம், சென்ற ஆண்டு ஜூன் மாதம்வரை வறண்டு கிடந்தது. ஜாம்ஷெட்பூர் ஸ்டீல் சிட்டி ரோட்டரி சங்கம், RID 3250, ரோட்டரியன்கள் புதிய ரோட்டரி ஆண்டின் தொடக்கத்தை முன்னிட்டு இங்கு 1,000 உள்ளூர் மரக் கன்றுகளை நட்டார்கள், அதற்கு 'நம்பிக்கைத் தோப்பு' என்று பெயர் சூட்டினார்கள்.

'நாங்கள் மழைக்காலம் தொடங்கக் காத்திருக்கிறோம். இனி வரும் மாதங்களில் இன்னும் பல மரக் கன்றுகளை நடுவோம்' என்கிறார் இந்தச் சங்கத்தின் தலைவர் அம்ரிதா வகாரியா. சுற்றுச்சூழல் வல்லுனர்கள், சமூக உறுப்பினர்களுடன் பேசி, அவர்களுடைய அறிவுரையின்படி தேக்கு, நூக்கம், புங்கை, வேம்பு, இலுப்பை, பலா, நாவல், மா போன்ற, உள்ளூர்ச் சூழியலுக்குப் பொருத்தமான இயற்கை இனங்கள் இங்கு நடுவதற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டன.



'இந்தத் திட்டத்தின் நோக்கங்கள், வளங்குன்றாச் சூழமைப்பு ஒன்றை உருவாக்கிக் காற்றுத் தரத்தை மேம்படுத்துவது, மண் மற்றும் ஈரப்பதத்தைப் பாதுகாப்பது, கிராமத்து மக்கள், இங்கு வசிப்போருக்கு நன்மை தரும் ஒரு சூழலை உருவாக்குவது தான்' என்கிறார் அம்ரிதா. 'வளமான பசுமையைக் கொண்ட எங்கள் சமூகக் காடு விரைவில் இந்தப் பகுதியின் அழகை மேம்படுத்தும். இந்த நிலம் மேற்கு வங்காள நெடுஞ்சாலையில் இருப்பதால், ரோட்டரியின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்த இது மிகவும் உதவும், என்றார் இவர்.

செடிகளைப் பாதுகாப்பதற்கென, ஒட்டு மொத்தப் பகுதியிலும் வேலிகள் அமைக்கப்படும். இங்குள்ள மரக் கன்றுகளை ஆதிவாசி நல அறக்கட்டளை ஓராண்டுக்கு அறிவியல் முறைப்படி வளர்க்கும். 'விழாவுக்கென மரக் கன்றுகளை நட்டுவிட்டுப் பின்னர் அவற்றை மறந்துபோகக்கூடாது




என்று நாங்கள் நினைக்கிறோம். அதனால், இவற்றை வளர்ப்பதற்கும், இந்தச் செடிகள் ஒரு நலமான காடாக வளர்வதை உறுதி செய்வதற்கும் நாங்கள் வல்லுனர்களுடன் இணைந்து பணியாற்றுகிறோம். இந்த முன்னெடுப்பில் பங்கேற்ற அனைத்து உறுப்பினர்களும் இதை எண்ணி மிகவும் மகிழ்ந்தார்கள்' என்கிறார் அம்ரிதா.

அடுத்த 10 முதல் 15 ஆண்டுகளில், இந்தக் காடும் அதில் உள்ள பழம் தரும் மரங்களும் மருத்துவ மூலிகைகளும் இந்தக் கிராமத்தில் வசிக்கும் 500 குடும்பங்களுக்குப் பயன்படும் என்று அம்ரிதா நம்புகிறார்.■

## விதவைகள், பழங்குடியினருக்கு உதவி

கோவிட் தொற்றுக்காலத்தின்போது கணவனை இழந்த 170 விதவைப் பெண்களுக்கு ராஜ்குருநகர் ரோட்டரி சங்கம் (RID 3131) மூலம் தலா ரூ.15,000 மதிப்புள்ள தையல் இயந்திரங்கள் மற்றும் மசாலா மிக்ஸர்கள் வழங்கப்பட்டன. இதன் மூலம் அவர்கள் வீட்டிலிருந்தபடியே வேலை செய்து வருமானம் ஈட்ட முடியும். இத்திட்டத்துக்கான செலவு ரூ.20 லட்சம்.

பழங்குடியினர் குடும்பங்கள் மற்றும் சமூகத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் பயனடையும் வகையில் 30 திட்டங்களை சங்கம் செயல்படுத்தியுள்ளதாக IPP ஜெயஸ்ரீ பட்வால் தெரிவித்தார். 11 கிராமங்களில் 120 குடும்பத்தினருக்கு ரூ.1.2 லட்சம் மதிப்பில் சூரிய சக்தி விளக்குகளை நன்கொடையாக வழங்கியுள்ளது.




*கிராமத்தினருக்கு சூரிய சக்தி விளக்குகள் வழங்கப்படுகிறது.*

சஹயாத்ரி பள்ளத்தாக்கு பகுதியில் குக்கிராமத்தில் வசிப்பவர்களுக்கு ரூ.50,000 மதிப்பில் 15 பல்நோக்கு சூரியசக்தி மின்கலப் பெட்டிகளும் தெருக்களுக்கு இரண்டு சூரிய சக்தி மின் விளக்குகளும் வழங்கப்பட்டன. கிராமப்பள்ளியிற்கு ரூ.3.5 லட்சம் மதிப்பில் 50 மேஜைகளை சங்கம் வழங்கியுள்ளது. மாணவர்களுக்கு குடைகள், புத்தகப் பைகள் வழங்கப்பட்டன. ஏழைப் பெண்களால் தயாரிக்கப்பட்ட 600 பருத்திப் பைகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.■

# எகிப்தில் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை எதிர்த்துப் போராட $2 மில்லியன் மானியம்

எட்ல்கா லெஹோஸ்கி

யுனைடெட் டு எண்ட் செர்விகல் கேன்சர் இன் ஈஜிப்ட் (United to end cervical cancer in Egypt), பெண்களின் விழிப்புணர்வு மற்றும் நோய்தடுப்பு பராமரிப்புக்கான அணுகலை மேம்படுத்தும் அதே வேளையில் வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான ஒரு முயற்சி, ரோட்டரியின் மூன்றாவது வருடாந்திர ப்ரோக்ராம் அஃப் ஸ்கேல்ஸ் விருதைப் பெற்றுள்ளது. ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் கடந்த மே மாதம் நடந்த RI மாநாட்டில் இந்த மானியம் அறிவிக்கப்பட்டது.

முக்கிய பங்காளர்களின் நிபுணத்துவம் மற்றும் அறிவை பின்பற்றி, அந்த நான்கு ஆண்டுத் திட்டம் கெய்ரோ மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் 9–15 வயதுடைய 30,000 சிறுமிகளுக்கு தடுப்பூசி செலுத்தவும், 10,000 பெண்களுக்கு புற்றுநோய் பரிசோதனைகளை வழங்கவும் மேலும் 40 லட்சம் மக்களைச் சென்றடைய பொது விழிப்புணர்வு பிரச்சாரத்தைத் தொடங்கவுள்ளது. பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு முறையான பராமரிப்பு மற்றும் ஆலோசனைகளை பெறுவதை உறுதிபடுத்துவதற்காக கர்ப்பப்பை வாய்ப்புற்றுநோய் மற்றும் அதன் காரணங்கள் குறித்து சுகாதாரப் பணியாளர்கள், பள்ளி நிர்வாகிகள் மற்றும் ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். “நாம் இந்த திட்டத்தை ஆதரிப்பதில், புற்றுநோயிலிருந்து குணமடைந்த ஒருவரான நான் பெருமிதம் கொள்கிறேன்,” என்று மாநாட்டில் மானியத்தை அறிவித்த RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் கூறினார்.



விளக்கப்படம் கவென் கொரவல்

கர்ப்பப்பை வாய்ப் புற்று நோய் தடுக்கக்கூடிய புற்றுநோய்களில் ஒன்றாக கருதப் படுகிறது. இது முதன்மையாக மனித பாப்பிலோமா வைரஸால் ஏற்படுகிறது, இது இனப்பெருக்கக் குழாயின் பொதுவான வைரஸ் தொற்றுக்கு காரணமாகும். தொண்ணூறு சதவீத கர்ப்பப்பை வாய்ப்புற்றுநோய் இறப்புகள் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் நிகழ்கின்றன, அங்கு புற்றுநோய் பரிசோதனைகள் மற்றும் வழக்கமான HPV தடுப் பூசிகள் கிடைப்பதில்லை மற்றும் கலாச்சார ரீதியான தவறான கருத்துக்கள் பெண்கள் தகுந்த பராமரிப்பை பெறுவதை தடுக்கிறது.

2021 WHO அறிக்கையின் படி, எகிப்தில் 30–49 வயதுடைய பெண்களில் 1 சதவீதம் பேர் மட்டுமே கர்ப்பப்பை வாய்ப்புற்றுநோய்க்காக பரிசோதிக்கப்பட்டுள்ளனர் மற்றும் நோயால் கண்டறியப்பட்டவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் அதிலிருந்து இறக்கின்றனர். பெண்களுக்கு தடுப்பூசிகள், பரிசோதனைகள், சரியான நேரத்தில் சிகிச்சை மற்றும் தகவல்களை வழங்குவதன் மூலம் யுனைடெட் டு எண்ட் செர்விகல் கேன்சர் இன் ஈஜிப்ட் இந்த தடுக்கக்கூடிய நோயின் சுமையை குறைக்கவும், பெண்களின் ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை அளிக்க சமூகங்களை ஊக்குவிக்கவும் முயற்சிக்கிறது.

## *ப்ரோக்ராம் அஃப் ஸ்கேல் விருதை கடந்தகாலத்தில் பெற்றவர்கள்*

*யுனைடெட் டு எண்ட் செர்விகல் கேன்சர் இன் ஈஜிப்ட் ரோட்டரியின் வருடாந்திர ப்ரோக்ராம் அஃப் ஸ்கேல் மானியத்தின் மூன்றாவது பெறுநர். முதல் இரண்டு மானியங்கள் ஜாம்பியா மற்றும் நைஜீரியாவில் உள்ள சமூகங்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் ஏற்கனவே குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளன.*

2020–21: *மலேரியா ஃப்ரீ ஜாம்பியாவின் கூட்டாளர்கள், ஜாம்பியாவின் மத்திய மற்றும் முச்சிங்கா மாகாணங்களில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள* 10 *மாவட்டங்களில் மலேரியா பாதிப்புகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கர்ப்பிணிப் பெண்கள் மற்றும்* 5 *வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே கடுமையான மலேரியா மற்றும் அதனால் ஏற்படும் இறப்பைக் குறைப்பதில் இந்த திட்டம் குறிப்பாக கவனம் செலுத்துகிறது.*

*"பல உள்ளூர் பங்காளர்களின் ஆதரவுடன், இந்த திட்டம்* 245 *சுகாதார ஊழியர்களுக்கு பயிற்சி மற்றும் ஆதரவளித்தது, மற்றும்* 2,500 *சுகாதார பணியாளர்களை ஜாம்பியாவில் உள்ள தேசிய சுகாதார அமைப்பில் சேர்த்துள்ளது. சுகாதாரப் பணியாளர்கள் ஒருங்கிணைந்த சமூக வழக்கு மேலாண்மையில் பயிற்சி பெற்றுள்ளனர், இப்பயிற்சி* 5 *வயதுக்குட்பட்ட குழந்தைகளை பாதிக்கும் நோய்களான மலேரியா, நிமோனியா மற்றும் வயிற்றுப்போக்கு ஆகியவற்றின் மேல் கவனம் செலுத்துகிறது. அவர்கள் போலியோ நோய்த்தடுப்பு பிரச் சாரங்களிலும் பங்கேற்கிறார்கள். இதன் மூலம்* 1.2 *மில்லியனுக்கும் அதிகமான ஜாம்பியர்களுக்கு பயன் பெறுவார்கள்.*

2021–22: *நைஜீரியாவின் பல பகுதிகளில் உயர்தர சுகாதாரப் பாது காப்புக்கான அணுகலை அதிகரிப்பதன் மூலம் தாய் மற்றும் சிசு இறப்பைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட திட்டம், டுகெதர் ஃபார் ஹெல்தி ஃபாமிலீஸ் இன் நைஜீரியா. இந்தத் திட் டமானது சுகாதாரப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பது, சுகாதார வசதி களில் கருவிகளை நிறுவுதல் மற்றும் புதிய நோயாளிகளின் கருத்து மற்றும் பரிந்துரை அமைப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.*

*"முன்முயற்சியின் நீண்டகால நிலைத் தன்மையை உறுதிப்படுத்து வதற்காக மத்திய சுகாதார அமைச்சகம் உட்பட ஒன்பது நிறுவனங்களுடனான கூட்டாண்மை அமைக்கப்பட்டது. திட்டத்தின் செயல்திறன் மற்றும் இருப்பிடம் சார்ந்த அறிவு, மனப் பான்மை மற்றும் நடைமுறைகளை அளவிடுவதற்காக திட்ட இடங்களில் ஒரு அடிப்படை ஆய்வு நடத்தப்பட்டது. செயல்படுத்தப்பட்ட முதல் ஆறு மாதங்களில், இந்த திட்டம்* 210 *சுகாதாரப் பணியாளர்களுக்கு அவசரகால மகப்பேறு மற்றும் பிறந்த குழந்தை பராமரிப்பு குறித்து பயிற்சி அளித்தது, பாரம்பரிய மற்றும் மதம் சார்ந்த தலைவர்களை ஈடுபடுத்தியது மற்றும்* 5,000*க்கும் மேற்பட்ட நபர் களுக்கு சமூக உரையாடல் அமர்வுகளை நடத்தியது.* my.rotary.org/programs-scale-grants-*ல் ப்ரோக்ராம் அஃப் ஸ்கேல் மானியங்களை பற்றி மேலும் அறிக.*

"கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க் கான விழிப்புணர்வை அதிகரிப்பதன் மூலமும், நோய்தடுப்பு சிகிச்சை யை ஊக்குவிப்பதன் மூலமும் எகிப்தில் உயிர்களைக் காப்பாற்றி ஆரோக்கியமான சமூகங்களை உருவாக்க முடியும்" என்று கெய்ரோ பல்கலைக்கழகத்தின் குழந்தை மருத்துவப் பேராசிரியரும் RC எல் தாரிரின் உறுப்பினருமான அமல் எல்-சிசி கூறினார்.

கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைப் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பது மற்றும் பெண்களுக்கான மருத்துவ சேவைகளை மேம்படுத்துவதுடன், WHO-இன் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் எலிமினேஷன் முன்முயற்சியால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நோக்கி இந்தத் திட்டம் முன்னேறும். இந்த உலகளாவிய முயற்சியானது 15 வயதிற்குள் 90 சதவீத பெண்களுக்கு தடுப்பூசி செலுத்துவதையும், 35 வயதிற்குள் மற்றும் 45 வயதிற்குள் 70 சதவீத பரிசோதிப்பதையும், மற்றும் புற்றுநோய் அபாய உயிரணு அல்லது புற்றுநோய் உயிரணுக்களைக் கொண்டிருக்கும் 90 சதவீத பெண்களுக்கு சிகிச்சை அளிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. 2030ஆம் ஆண்டுக்குள் அதை எட்டுவதை இலக்காகக் கொண்டுள்ளது.

RID 2451 (எகிப்து) இன் முழு ஆதரவுடன், இத்திட்டத்தை RC எல் தாரிர் தொடங்கியது. சிகிச்சையகங்களுக்கு பெண்களின் வருகையை அதிகரித்து மற்றும் மார்பக சுகாதார சேவைகளை வழங்கிய மார்பக புற்றுநோய்க்கான எகிப்திய ஜனாதிபதியின் முன் முயற்சியின் மாதிரியாக இம்முயற்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

TRF ஒவ்வொரு ஆண்டும் ஒரு $2 மில்லியன் ப்ரோகிராம் ஆஃப் ஸ்கேல் மானியத்தை ஒரு சான்று அடிப்படையிலான திட்டத்திற்கு வழங்குகிறது. உள்ளூர் சமூகங்கள், மற்றும் நிபுணத்துவம் மற்றும் ஆதரவை வழங்கும் கூட்டாளர் அமைப்புகளுடன் இணைந்து ரோட்டேரியர்களால் இத்திட்டங்களுக்கு நிதியளிக்கப் படுகின்றன.

"ரோட்டரியின் ப்ரோகிராம் ஆஃப் ஸ்கேல் மூலம், பெரிய அளவிலான சவால்களைச் சமாளிக்க எங்கள் உறுப்பினர்கள் உத்வேகம் பெற்றுள்ளனர் மற்றும் மாற்றத்திற்கான எங்கள் பார்வையைப் பகிர்ந்து கொள்ளும் நிறுவனங்களுடன் ஒத்துழைக்கிறார்கள்" என்று TRF அறங்காவலர் தலைவர் (2022–23) இயன் ரைஸ்லி கூறினார்.

இந்த ஆண்டு ப்ரோகிராம் ஆஃப் ஸ்கேல்ஸ் இறுதித் தேர்வில் இருந்த மற்ற திட்டம் டிஜிட்டல் இன்டராக்டிவ் கிளாஸ் ரூம்ஸ் திட்டமாகும், இது பனாமாவில் 230 வகுப்பறைகளில் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப் படுத்துவதன் மூலம் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

©Rotary

# தன்பாத் பெண்களுக்கு மிதிவண்டிகள்

**ரோட்டரி செய்திக்குழு**

RC தன்பாத், RID 3250, 77வது தலைவராக நந்தலால் அகர்வால் நிறுவப்பட்ட விழாவுக்கு PRIP சேகர் மேத்தா தலைமை தாங்கினார், பள்ளி மாணவியர் 25 பேர் பள்ளிக்கும் வீட்டுக்கும் சென்றுவருவதற்கு உதவும் மிதிவண்டிகளை வழங்கினார், இந்த ஆண்டில் இந்தச் சங்கம் கட்டவுள்ள டயாலிசிஸ் மையத்துக்கு அடிக்கல் நாட்டினார், சிறுமிகள், பெண்களுக்கான தொழில் சார்ந்த பயிற்சி மையம் ஒன்றைத் தொடங்கிவைத்தார், ரத்தம் திரட்டும் வேன் ஒன்றை மெய்நிகர் முறையில் தொடங்கிவைத்தார்.

பின்னர், இந்தச் சங்கம் சென்ற ஆண்டில் 500 செயற்கைக் கை, கால்கள், பல LN–4 செயற்கைக் கைகளைப் பொருத்த உதவியுள்ள இந்தச் சங்கத்தின் செயற்கைக் கை, கால் மையத்தை மேத்தா பார்வையிட்டார்.■




*PRIP சேகர் மேத்தா RC தன்பாத் சார்பாக மிதிவண்டிகளை மாணவிகளுக்கு வழங்குகிறார். உடன் PRID கமல் சங்வி மற்றும் PDG சஞ்சய் கேம்கா ஆகியோரும் உள்ளனர்.*

## மிதிவண்டிகள், தையல் இயந்திரங்களை வழங்கிய RID 3150



சிறுமிகள், கிராமப்புறப் பெண்களுக்கு ஆற்றல் அளிப்பதற்கென, 2,700 மாணவர்களுக்கு மிதிவண்டிகளையும் ஆந்திரப் பிரதேசத்தின் குண்டூர், பிரகாசம் மாவட்டங்களில் தையல் பயிற்சி பெற்றவர்களுக்கு 100 தையல் இயந்திரங்களையும் கொடையளித்தார்கள் RID 3150ன் ரோட்டரி சங்கங்கள். சங்கப் பங்களிப்புகள், ரோட்டரியன்கள், அவர்களுடைய குடும்பத்தினரின் நன்கொடைகள், BGR மைன்ஸ் மற்றும் நிர்மான் நிறுவனம் என்ற NGO ஆகியோரின் ஆதரவால் இந்த மிகப் பெரிய திட்டம் நிறைவேறியது.

மிதிவண்டிகள் இந்த பெண்களுடைய பயண நேரத்தை மிகவும் குறைத்து அவர்களுடைய கல்வியை மேம்படுத்தும்.

அத்துடன், திறன் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்குத் தையல் இயந்திரங்கள் வழங்கப் படுவதால், அவர்கள் வழக்கமான வருவாயின்மூலம் தங்கள் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பாக்கிக் கொள்ளலாம்.■






## District Wise TRF Contribution as on July 2023 (interim).

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|
| **India** | | | | | |
| 2981 | 7,846 | 405 | 0 | 0 | 8,251 |
| 2982 | 9,716 | 0 | 7,085 | 3,929 | 20,730 |
| 3000 | 38,746 | 0 | 0 | 585 | 39,331 |
| 3011 | 45,268 | 1,753 | 0 | 36,585 | 83,606 |
| 3012 | 1,574 | 0 | 0 | 1,720 | 3,294 |
| 3020 | 9,725 | 176 | 0 | 0 | 9,901 |
| 3030 | 1,264 | 5 | 0 | 2,675 | 3,944 |
| 3040 | 799 | 24 | 0 | 0 | 823 |
| 3053 | 4,011 | 0 | 0 | 0 | 4,011 |
| 3055 | 2,896 | 33 | 0 | 0 | 2,929 |
| 3056 | 1,413 | 0 | 0 | 0 | 1,413 |
| 3060 | 14,355 | 9,125 | 0 | 67,679 | 91,159 |
| 3070 | 101 | 0 | 0 | 0 | 101 |
| 3080 | 6,822 | 1,702 | 0 | 1,500 | 10,024 |
| 3090 | 14,497 | 713 | 0 | 5,121 | 20,331 |
| 3100 | 6,889 | 0 | 0 | 0 | 6,889 |
| 3110 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 3120 | 2,188 | 24 | 0 | 0 | 2,212 |
| 3131 | 119,793 | 51 | 6,098 | 5,934 | 131,875 |
| 3132 | 15,444 | 125 | 0 | 0 | 15,569 |
| 3141 | 46,270 | 1,452 | 25,000 | 38,387 | 111,109 |
| 3142 | 96,277 | 1,110 | 4,500 | 0 | 101,887 |
| 3150 | 779 | 130 | 50 | 44,976 | 45,935 |
| 3160 | 4,862 | 0 | 0 | 0 | 4,862 |
| 3170 | 13,689 | 15,063 | 0 | 0 | 28,752 |
| 3181 | 4,584 | 122 | 0 | 24 | 4,730 |
| 3182 | 1,146 | 0 | 0 | 0 | 1,146 |
| 3191 | 9,100 | 1,341 | 60,976 | 0 | 71,417 |
| 3192 | 6,801 | 1,220 | 0 | 0 | 8,021 |
| 3201 | 6,523 | 3,553 | 1,012 | 12,775 | 23,864 |
| 3203 | 584 | 308 | 1,220 | 2,531 | 4,642 |
| 3204 | 1,011 | 500 | 0 | 2,962 | 4,473 |
| 3211 | 1,494 | 1,000 | 0 | 4,011 | 6,505 |
| 3212 | 12,575 | 728 | 0 | 0 | 13,303 |
| 3231 | 1,417 | 386 | 0 | 0 | 1,803 |
| 3232 | 13,918 | 1,800 | 8,300 | 8,543 | 32,561 |
| 3240 | 6,785 | 1,088 | 0 | 30 | 7,903 |
| 3250 | 4,118 | 1,148 | 26 | 2,974 | 8,266 |
| 3261 | 3,049 | 0 | 0 | 0 | 3,049 |
| 3262 | 289 | 24 | 0 | 0 | 313 |
| 3291 | 14,385 | 0 | 24,390 | 0 | 38,776 |
| 3220 **Sri Lanka** | 15,522 | 615 | 0 | 0 | 16,138 |
| 3271 **Pakistan** | 5 | 0 | 0 | 5,775 | 5,780 |
| 3272 **Pakistan** | 0 | 60 | 0 | 25 | 85 |
| 3281 **Bangladesh** | 2,901 | 198 | 1,000 | 1,000 | 5,099 |
| 3282 **Bangladesh** | 5,035 | 100 | 0 | 0 | 5,135 |
| 3292 **Nepal** | 2,876 | 200 | 0 | 34,010 | 37,086 |

Annual Fund (AF) includes SHARE, Areas of Focus, World Fund and Disaster Response.

**Source:** RI South Asia Office

# மனதிற்கு மேல் இயந்திரம்



சந்தியா ராவ்

அல்காரிதம்களின் முழு சாராம்சமும் ஒரு இளம் நண்பரால் எனக்கு விளக்கப்படுவதற்கு முன்பு, எனது சாதனங்கள் – தொலைபேசி மற்றும் மடிக்கணினி – எனக்கு ஆர்வமுள்ள பொருட்கள் என்று சிலவற்றை பரிந்துரை செய்தது என்னை பயமுறுத்தியது. ஷாம்பூக்கள் முதல் நிகழ்ச்சிகள் வரை, சில சிந்தனையைத் தூண்டும், நிறைய தெளிவற்ற பரிந்துரைகளும் வழங்கப்பட்டன. அந்த மாயத் திரைக்குப் பின்னால் உள்ள செயல்பாடுகள் புரிந்த பின், சைபர் ஸ்பேஸிலிருந்து என்ன வெளி வருகிறது, குறிப்பாக புத்தகங்கள், வாசிப்பு மற்றும் எழுத்தாளர்களுடன் தொடர்புடையதாக இருந்தால், நான் அதை தெரிந்து கொள்வதில் ஆர்வமாக இருக்கிறேன்.

மிக சமீபத்திய பாப்-அப்களில், என் கண்ணில் பட்டது க்ரைம் ரீட்ஸ் என்ற ஆன்லைன் செய்திமடல். க்ரைம் அண்ட் தி சிட்டி என்ற பகுதியில், பால் பிரெஞ்ச் எழுதிய ‘தான்சானியாவில் குற்றப் புனைகதையின் சிக்கலான வரலாறு’ என்ற தலைப்பில் அந்தக் கட்டுரை எழுதப்பட்டிருந்தது. அதில் முக்கியமாக இடம்பெற்ற ஒரு பெயர் ஜார்ஜெட் ஹேயர். பிரெஞ்சின் கருத்துப்படி, 1920களில், ஜார்ஜெட் ஹேயர் டாங்கனிகாவில் வசித்து வந்தார், அங்கு அவரது கணவர் சுரங்க பொறியாளராக பணிபுரிந்தார். “ அவரின் கணவர் கனிமங்களை ஆய்வு செய்ய வேண்டியிருந்ததால் புதர் நிறைந்த காட்டுக்குள் அவர்கள் வாழ்ந்தனர்’’ என்று அவர் கட்டுரையில் எழுதுகிறார். ‘அவர் அங்கு இருந்த போது இரண்டு வரலாற்றுக் காதல் கதைகளை எழுதினார் மற்றும் டாங்கனிகா பற்றிய கதைகளை தனது நினைவுக் குறிப்பில் எழுதினார், ஆனால் அடுத்த பத்தாண்டுகளுக்கு கண்காணிப்பாளர் ஹன்னாசைட் மற்றும் சார்ஜென்ட் (பின்னர் இன்ஸ்பெக்டர்) ஹெமிங்வே ஆகியோரைக் கொண்ட அவரது துப்பறியும் புனைகதைகளில் தொடர் புத்தகங்களை அவர் எழுதவில்லை. எலிசபெதன் கடற்கொள்ளையர்களின் நாவலான பியூவலெட்டில் (1929) சில கிரிமினல் கூறுகள் இருந்தன, அவர் ஆப்பிரிக்காவில் இருந்தபோது அதை எழுத தொடங்கினார்.’ தீஸ் ஓல்ட் ஷேட்ஸுக்கு அடுத்தபடியாக மிகவும் பிரியமான மற்றும் ரொமாண்டிக் கதைகள் கொண்ட அந்த புத்தகம், 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்தின் குடிலில் அல்லாமல் டாங்கனிகாவில் பிறந்தது! விக்கிபீடியா அவரது த்ரில்லர்கள் பற்றி எழுத பெரிதாக எதுவும் இல்லை என்று கூறுகிறது; இருப்பினும், அவர் அதில் அசலான கதைக்களங்களுக்கு இல்லாவிட்டாலும் தன்னுடைய புத்திசாலித்தனத்திற்காக அறியப்பட்டார். ஆனால் அவருடைய காதல் கதைகள் உயர்ந்த ரகமாகும்!




OTT பிளாட்ஃபார்ம்களில் போலீஸ் நடைமுறை கதைகளை ரசிப்பவர்கள், டிடெக்டிவ் ஜிம்மி பெரெஸ் இடம்பெறும் “ஷெட்லேண்ட்” நிகழ்ச்சியைப் பார்த்திருக்கலாம். (இல்லையென்றால், தயவுசெய்து பாருங்கள்) இந்தத் தொடர் ஆன் கிளீவ்ஸின் நாவல்களை அடிப்படையாகக் கொண்டது, அவர் தனது 40வது திருமண ஆண்டு விழாவிற்கு தான்சானியா சென்றார். செரெங்கேட்டியில் அவர் மேற்கொண்ட பயணத்தில் இருந்து ஒரு சிறுகதை பிறந்தது – மோசஸ் அண்ட் தி லாக்டெண்ட் மிஸ்டரி. டென் இயர் ஸ்ட்ரேச்: செலப்ரேடிங் அ டேகேட் அஃப் கிரைம் ஃபிக்ஷன் இன் க்ரைம்ஃபெஸ்ட் (மார்ட்டின் எட்வர்ட்ஸ், 2018 தொகுத்து வழங்கியது) என்ற தொகுப்பில் அந்த கதை சேர்க்கப்பட்டது’ என பிரெஞ்சு கூறுகிறார். 2021 நோபல் பரிசு வென்ற அப்துல்ரசாக் குர்னா, தான்சானியாவைச் சேர்ந்தவர், அவர் 1960களில் சான்சிபார் புரட்சியின் போது இங்கிலாந்துக்கு குடிபெயர்ந்தார். அவரது நாவல்கள் எனது படிக்கவேண்டிய புத்தகங்கள் பட்டியலில் உள்ளன, அதேபோல ‘தான்சானியாவில் வளர்ந்த எழுத்தாளர் M G வாசன்ஜியின் நாவல்கள், குறிப்பாக டார் எஸ் சலாமின் ஆசிய சமூகத்தில் அமைக்கப்பட்ட கதைகளின் தொகுப்பான உஹூரு ஸ்ட்ரீட் (1991), மேலும் ஒரே நேரத்தில் வேடிக்கையான மற்றும் வேதனையான சிறுகதைகளை கொண்ட சாண்ட்ரா ஐகருவா முஷியின் ஸ்டெயின்ஸ் ஆன் மை காங்கா (2014) பிரஞ்சு பரிந்துரையின் பேரில் எனது பட்டியலில் இடம்பெற்றுள்ளது. தான்சானியா முன்பு சான்சிபார் என்று அறியப்பட்டது, அதன் தலைநகரம் டோடோமா, டார் எஸ் சலாம் என்று அறியப்பட்டது!

ஒட்டுமொத்தமாக மற்றொரு தலைப்புக்கு செல்வோம், ஜூலை 18 இன் தி கார்டியனில் ஆலிஸ் கெம்ப்-ஹபீப் எழுதிய கட்டுரையின் மூலம் வெளியீட்டு உலகில் ‘தொழில்துறை முழுவதுமான மனநல நெருக்கடி’ என்று அவர் குறிப்பிடுவதைப் பற்றி அறிந்தது அதிர்ச்சியாக இருந்தது. அதிலிருந்து ஒரு மேற்கோள்: ‘நூல் துறையில் எழுத்தாளர் மற்றும் பதிப்பாளர் நலன் என்பது சமீபகாலமாக பரபரப்பான தலைப்பாக உள்ளது.’ தி புக்செல்லரின் (புத்தக வர்த்தகத்திற்கான மற்றும் அதைப் பற்றிய ஒரு பத்திரிகை) கருத்துக்கணிப்பில்

அறிமுக எழுத்தாளர்கள் தங்களின் எதிர்மறையான வெளியீட்டு அனுபவங்களைப் பற்றி புகாரளித்தனர். பதிலளித்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் இந்த செயல்முறை தங்கள் மன ஆரோக்கியத்தை மோசமாக பாதித்ததாகக் கூறினர். இதை தொடர்ந்து, வெளியீட்டு நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் தொழில் அமைப்புகள் அதற்கான தீர்வுகளை காணத் துடித்தன. எட் கில்லெட்டை மேற்கோள் காட்டி, அவரது வெளியீட்டாளர் ஆதரவாக இருந்தாலும், புத்தகம் எழுதும் செயல் மிகவும் தனிமையானது, இது மனநலம் பாதிக்கப்படுவதற்கு ஒரு முக்கிய காரணம் என்று அவர் எழுதியுள்ளார். 2018-ஆம் ஆண்டில் தனது முதல் புத்தகமான தி மெர்மெய்ட் மற்றும் மிஸ்ஸஸ் ஹான்காக்கை வெளியிட்ட இமோஜென் ஹெர்ம்ஸ் கோவார், ஆலிஸுக்கு ஒரு சுவாரஸ்யமான கருத்தைத் தெரிவித்தார். அவர் சொல்கிறார்: நான் எனது புத்தகத்தை விற்றபோது எனக்கு 28 வயது மற்றும் நான் பயிற்சியாளராகவோ அல்லது தற்காலிக பணியாளராகவோ, அல்லது கஃபேக்கள் மற்றும் பராமரிப்பு வேலைகளில் தன்னார்வளராக தினக்கூலிக்கு வேலைகள் செய்து எனது செலவுகளை கவனித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று நான் அறையில் மிக முக்கியமான நபராக நடத்தப்பட்டேன், அது உண்மையில் என் தலையை சுற்ற வைத்தது.'

உங்களை சிந்திக்க வைக்கிறது, இல்லையா? குறிப்பாக தனிநபர்கள் மீது சமூக ஊடகங்களின் தாக்கம் மற்றும் அதன் விளைவாக உருவாகும் மைக்ரோ- செலி பிரிட்டி-இஸம் என்ற உணர்வு.

செயல்முறை முழுவதும் தெளிவான தகவல் தொடர்பு தனது கவலைகளை எளிதாக்கியிருக்கும் என்று இமோஜென் கூறுகிறார். ''எனக்குத் தெரிந்த பல ஆசிரியர்கள் மிகவும் சக்தியற்ற வர்களாக உணர்கிறார்கள் மற்றும் முடிவெடுப்பதில் இருந்து விலக்கப் பட்டுள்ளனர். நாங்கள் குழுவில் உறுப்பினராக அல்லாமல், தயாரிப்பு பொருளாக கருதப்படுகிறோம். எங்கள் வேலை மற்றும் தொழில் தொடர்பான முடிவுகள் பெரும்பாலும் எங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படாமல் இருப்பது மேலும் எங்களை அந்நியப்படுத்து கிறது. இமோஜெனின் அவதானிப்புகளை முன்னோக்கி கொண்டு சென்றால், அதன் தர்க்கம் நடைமுறையில் நம் வாழ்வின் ஒவ்வொரு அம்சத் திற்கும், குறிப்பாக ஆக்கபூர்வமான, கண்டு பிடிப்பு அம்சங்களுக்கு பொருந்தும். இது மீண்டும் நாம் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.




2022-இல் சின்ஸ் ஆஃப் மை ஃபாதர் என்ற புத்தகத்தை வெளியிட்ட மற்றொரு எழுத்தாளரான லில்லி டன், ஆலிஸிடம் கூறுகிறார்: நிறைய கவலை என்ன எதிர்பார்க்க வேண்டும் என்று தெரியாமல், பதிலுக்காக காத்திருப்பதால் வருகிறது. மேலும் ஏராளமான புத்தகங்களை கையாண்டு வரும் முகவர் அல்லது தலைமைஆசிரியர், ஒரு புத்தகத்தின் ஆசிரியருக்குத் தேவையானதை எப்போதும் கொடுக்க முடியாமல் போகிறது. வெளியீட்டு உலகில் இது மிகவும் கடுமையான பிரச்சனையாகும், ஏனெனில் தலைமைஆசிரியர் மற்றும் புத்தகத்தின் ஆசிரியர் திறம்பட செயல்பட மிகவும் நெருக்கமாக பணியாற்ற வேண்டும். சற்று சிந்தித்துப் பாரத்தால், சிந்தனை, ஆராய்ச்சி, சோதனை, உருவாக்கம் மற்றும் புதுமைகள் தேவைப்படும் எந்தவொரு பணிக்கும் இது பொருந்தும். அது ஒரு மேடை நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, அறுவை சிகிச்சையாக இருந்தாலும் சரி, அல்லது ஒரு மாறுபட்ட மற்றும் மதச்சார்பற்ற தேசத்திற்கான நியாயமான மற்றும் விரிவான சிவில் சட்டத்தை உருவாக்குவதாயினும், செயல்முறை ஒன்று தான்.

எஸ்கொயரில் (''தி லைப், டெத் – அண்ட் ஆஃப்டர்லைப் – ஆஃப் லிடரரி பிக்ஷன்'', ஜூலை14) இல் எழுதுகையில், வில் ப்ளைத், டிஜிட்டல் புரட்சி பத்திரிகைகளில் சிறுகதைகளின் கலாச்சார முக்கியத் துவத்தை அழித்துவிட்டதா என்று கேட்கிறார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், சமூக ஊடகங்கள் மீதான உலகளாவிய ஆவேசம் மற்றும் ஸ்மார்ட்போன்கள் மூலம் எளிதாக அணுகுதல் ஆகியவை நமது சிறந்த உணர்திறன்கள், கவனம் செலுத்துதல், ஒன்றில் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும் என்ற நமது விருப்பத்தை எவ்வளவு ஆழமாக பாதித்துள்ளது? என்கிறார். அவர் ஒரு எளிய ஆனால் அடிப்படையான கேள்வியைக் கேட்கிறார்: ''உங்கள் மனம் சில டிஜிட்டல் குருவால்களால் துண்டாடப்படாமல், ஆரம்பம் முதல் இறுதி வரை ஒரு கட்டுரை அல்லது சிறுகதையை படிக்க முடியுமா? கவனச்சிதறலை ஒரு பொழுது போக்காக அல்லது பொழுதுபோக்கை கவனச்சிதறலாக நீங்கள் தேடாமல் அதை செய்யமுடியுமா?' இன்று நாம் வாழும் வாழ்க்கையின் தரத்தை மதிப்பிடுவதற்கு அச்சிந்தனை நமக்கு வாய்ப்பளிக்கும்.

பிளைத் டிஜிட்டல் பிரபஞ்சத்தை 'மனிதர்களின் தனித்தன்மை உட்பட, அதைச் சுற்றியுள்ள அனைத்தையும் விழுங்கும் ப்ளாக்ஹோல்' என ஒப்பிடுகிறார். ''புத்தகங்கள், உணவகங்கள் மற்றும் சாத்தியமான ஜோடி சந்திப்புகள்'' போன்ற பரிந்துரைக்களுக்கு நாம் ஏற்கனவே ''இயந்திர ஞானத்தை'' ஏற்றுக் கொள்கிறோம் என்று இஸ்ரேலிய அறிவுஜீவி யுவல் நோவா ஹராரி எப்படி வாதிடுகிறார் என்பதை அவர் விவரிக்கிறார். மனிதநேயத்தை பின் தள்ளி ''தரவுவாதம்'' ''ஒரு ஆளும் சித்தாந்தமாக'' மாறுகிறது என்று அவர் நம்புகிறார். உண்மை என்னவென்றால், இங்கு மேற்கோள் காட்டப்பட்ட கட்டுரைகள் அனைத்தும் இயந்திர ஞானத்தால் பரிந்துரைக்கப்பட்டவை. சற்று யோசித்தால் பயமுறுத்தும் சிந்தனை.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

# ஆரோக்யம்: உங்கள் முதல் அடிப்படை உரிமை

பரத் மற்றும் ஷலன் சவூர்

விருந்து இல்லாமல் எந்த பண்டிகையும் நிறைவடையாது. திருமண காலத்துடன் இணைந்த இந்த காலம் பல்வேறு உணவு களுடன் நீட்டிக்கப்படுகிறது. பாரம்பரிய உணவுகளிலிருந்து சாலட்டுகள் மற்றும் துரித உணவுகள் வரை சாப்பிடும் இடம் நிறைந்துள்ளது. நல்ல சுவையான உணவாக இருந்தால் அதிகம் சாப்பிட ஆசை தூண்டுகிறது. நல்ல உணவை சாப்பிடுபவர், உணவின் சுவையை அனுபவிக்கிறார். அதிகம் சாப்பிடும் எண்ணம் நடுத்தர வயதினருக்கும் பரவுகிறது. இந்த கட்டுரை எச்சரிக்கை ஒலி எழுப்பவில்லை. ஆனால், தொப்பையை (கொழுப்பை) குறைப்பதற்கான வழிவகைகளைச் சொல்கிறது. உடலை ஆரோக்கியமான கண்ணோட்டத்தில் வைத்திருக்கவே இந்த முன்னுரை. ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். பசி ஒரு தேவை. பசியை அதிகரிக்கத் தேவையில்லை.



### கோவிட் காக்டெய்ல்

கோவிட் தொற்றிலிருந்து உலகம் இப்போதுதான் மீண்டுவந்துள்ளது. 2019 ஆம் ஆண்டை கோவிட்டுக்கு முன் என்று அழைக்கிறோம். பொது முடக்கங்கள், வீட்டிலிருந்தபடி வேலை செய்வது அல்லது படிப்பது உள்ளிட்டவை நம்மை அதிகம் சாப்பிடுபவர்களாவும் சோம்பேறி களாகவும் உருவாக்கிவிட்டது. முகக் கவசம், சமூகஇடைவெளி இனி தேவையில்லை. ஆனால், கருத்தில் கொள்ள வேண்டிய சில குறிப்புகள் உள்ளன. காற்று மாசுபாடு காரணமாக ஆஸ்துமா, மூச்சுக்குழாய் அழற்சி, குரல்வளை பாதிப்பு, இருமல், தொண்டைப்புண் வராமல் இருக்க வேண்டுமானால் முகக்கவசம் அணிவதை தொடரவும். கோவிட் பாதிப்புகள் இன்னமும் தொடர்வதாக அவ்வப்போது வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### வயது ஒரு எண்ணிக்கை

40 வயதில்தான் நாம் நம்மை உணரத் தொடங்குகிறோம். துரதிருஷ்டவசமாக நோய்களும் நம்மைத்தேடி வருகின்றன. புள்ளிவிவரங்கள் மோசமான தகவல்களைச் சொல்கின்றன. 2019 – 2021-க்கு இடைப்பட்ட காலத்தில் 31 மில்லியன் இந்தியர்கள் நீரிழிவுநோய்க்கு ஆளாகியிருக்கிறார்கள். இந்திய ஆடவர்களில் 50 சதவீதம் பேர் 50 வயதிற்குள் மாரடைப்பை எதிர்கொள்கிறார்கள். அதில் 25 சதவீதம் பேர் 40 வயதிற்கு முன்பே மாரடைப்பை எதிர்கொள்கிறார்கள். இந்திய இதய பாதுகாப்பு சங்கம், நாட்டில் 24 சதவீதம் பேருக்கு மாரடைப்பு ஏற்படுவதற்கு உயர் இரத்த அழுத்தமே காரணம் என்று பதிவு செய்கிறது. ஆரோக்கியமற்ற உணவுப் பழக்க வழங்க்கங்கள், காரிலேயே தொடர்ந்து பயணம் செய்வது, டெஸ்கில் உட்கார்ந்து நீண்டநேரம் வேலை செய்வது உள்ளிட்ட வாழ்க்கை முறைகள் தொற்று அல்லாத நோய்களுக்கு காரணமாகும். (அவை மரபணு மாற்றத்தால் அல்லது பரம்பரையாக வருபவை அல்ல) நோயாளிகளாக உருவாகக்கூடியவர்களின் பட்டியல் நீள்கிறது. இளைஞர்கள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள்.

வயதை ஒரு எண்ணாகவே நாம் பார்ப்போம். ஏனெனில் அதுதான் உண்மை. 20 முதல் ஒவ்வொரு பத்தாண்டையும் நாம் கொண்டாடுவோம். ஆரோக்கியத்துக்கு முன்னுரிமை கொடுப்போம். நல்ல வாழ்க்கைக்கான நடிவடிக்கைகளை சிறிது சிறிதாக தொடங்குங்கள். இதற்கான எளிய யோசனைகள்: நீங்கள் இருக்கும் பகுதியைச் சுற்றி ஒரு சிறிய நடைபயணத்தைத் தொடங்குங்கள். ஒரு கிளாஸ் தண்ணீர் குடியுங்கள், கெட்ட பழக்கத்தை கைவிடுங்கள். வறுத்த உணவை மறுத்துவிடுங்கள். நார்ச்சத்து கொண்ட உணவுகளை சாப்பிடுங்கள். உங்களுக்கு விருப்பமான செயலை எடுத்துக்

கொண்டு அதில் ஒரு மணி நேரத்தை தனிமையாக, இனிமையாக செலவிடுங்கள்.



### சமநிலைப்படுத்தும் செயல்

நீங்கள் எங்கிருந்தாலும் செய்யக்கூடிய இரண்டு எளிமையான பயிற்சிகளை பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். அ) கால்கள் சமஇடைவெளியில் இருக்குமாறு நிற்கவும். பின்னர் உங்கள் இடதுகாலை தரையிலிருந்து 6 அங்குலம் உயர்த்தி அந்த நிலையில் 20 எண்ணும் வரை இருக்கவும். அடுத்து உங்கள் வலது காலை உயர்த்தி அதேபோல் செய்யவும். ஆ) கால்களை ஒன்றாகச் சேர்த்து நிற்கவும். இப்போது உங்கள் இடது பாதத்தை வலது பாதத்துக்கு முன்பாக வைக்கவும். இடது குதிகாலால் வலது கால்விரல்களைத் தொடவும். இதனால் இரண்டு கால்களும் ஒரே நேர்கோட்டில் இருக்கும். 20 எண்ணும் வரை அதே நிலையில் இருங்கள். அதன் பிறகு வலது காலை இடது பாதத்துக்கு முன்னதாக கொண்டுவந்து அதே போல் செய்யவும்.

இத்தகைய சமநிலைப் பயிற்சிகள் நம்மை நிலைநிறுத்தி, நம்மீது அதிக நம்பிக்கையை ஏற்படுத்துகின்றன. நம் அன்றாட உணவு முறையிலும் இதுவே உண்மை. பல வழிகளில் நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள் என்பதை வைத்துத்தான் உங்கள் மனதும் உடலும் வரையறுக்கப்படுகிறது. இலகுவான குறைந்த கொழுப்புச் சத்துள்ள உணவுகள் உங்களை சுறுசுறுப்பாக வைத்திருக்கும். வழக்கமான நேரத்தில், வழக்கமான இடைவெளிகளில் சாப்பிடுங்கள். உடலையும் மனதையும் அமைதிப்படுத்துங்கள். இசையை கேளுங்கள், மௌனமாக அல்லது நாயுடன் நடைபயிற்சி செய்யுங்கள். தினமும் குறைந்தது 10,000 தடங்கள் பதித்து நடப்பதும், 8 மணி நேரம் அயர்ந்து தூங்குவதும் நல்லது. இது உங்கள் உடலை சீரமைக்கவும், மாற்றியமைக்கவும், புத்துணர்ச்சி அளிக்கவும் உதவுகிறது. இவையெல்லாம் ஒரே நேரத்தில் நடக்கிறது.

### கைகளும் தோள்களும்

குடும்ப வரலாறு இருந்தால் மருத்துவ நிபுணர்களுடன் ஆலோசனை நடத்துங்கள். அதை மறுத்து வாழக்கூடாது. மனச் சோர்வு அல்லது மன அழுத்தத்தை கவனிக்காமல் தொடரவிடாதீர்கள். நண்பர்களிடம் பேசுங்கள், மருத்துவரிடம் ஆலோசனை கேளுங்கள். மன அழுத்தத்தை போக்குவது முக்கியமானது. உடம்பில் உள்ள செல்களை எதிர்த்து நாம் போராட வேண்டும். தொடர்ந்து மன அழுத்தம் இருந்தால் உயர் இரத்த அழுத்தம், இதய நோய்கள், எலும்புகள் மெலிந்துபோதல், புற்றுநோய்க்கு வழிவகுக்கும். நீங்கள் மனவருத்தத்துடனும் மன அழுத்தத்துடனும் இருந்தால் உங்கள் இதயம் படபடப்பாகவும் நாடித்துடிப்பு அதிகரித்தும் காணப்படும். அப்போது சிலர் உங்கள் நிலையை புரிந்துகொண்டு உங்கள் தோள் மீது கை போட்டு, ஏதாவது பேச வேண்டுமா? என்று கேட்டால் உடனே உடங்களிடம் இருந்த படபடப்பு போய்விடுகிறது. மெது வாக சுவாசிக்கிறீர்கள். மூளைக்கு அதிக ஆக்ஸிஜன் கிடைக்கிறது. இதயம் வழக்கம்போல் துடிக்கிறது. உடலியக்கமும் சாதாரணமாகச் செயல்படுகிறது. சரியான நேரத்தில் உதவி என்பது எவ்வளவு முக்கியமானது. நம் அனைவருக்கும் சரியான நேரத்தில் தோள்மீது கை தேவையானது.

நாம் வேளாண் உணவி லிருந்து துரித உணவுக்கு மாறியதிலிருந்து நம்மில் பலருக்கு ஆரோக்கியம் கீழ்நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. நவீன மருத்துவம் நம்மை தக்கவைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், கோலா போன்ற குளிர்பானங்களை குடிப்பதையும், பர்கர், பாஜியாக்கள், பட்டூராக்கள் சாப்பிடுவதை நாம் கைவிடவில்லை. இந்த கட்டுரையில் உள்ள குறிப்புகள், ஆலோசனைகள் உங்களுக்கு நல்ல தொடக்கத்தை கொடுக்கட்டும்.

உலகம் கொந்தளிப்பான நிலையில் இருக்கும்போது நாம் உணர்ச்சி ரீதியாகவும், மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் நிலையானதாக இருக்க வேண்டும். குணப்படுத்தும் முறைகளை தொடர்ந்து கடைப்பிடிப்பதே ரகசியமாகும். வேடிக்கை நிறைந்த விஷயங்களில் ஈடுபடுங்கள். நீங்கள் எதைச் செய்தாலும் அதை ரசனையுடன் செய்யுங்கள். அதிகம் சிரியுங்கள். இவைதான் சிறந்த மருந்து. வாழ்க்கையில் நல்ல உடல் ஆரோக்கியம்தான் உங்கள் முதல் அடிப்படை உரிமை. அது உங்கள் தேகத்திலேயே கட்டமைக்கப்பட்டுள்ளது. அதை நன்றாக பராமரியுங்கள்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

## RC பண்ருட்டி — RID 2981



இன்னர் வீல் சங்க உறுப்பினர்கள் ஒரு பெண்ணுக்குப் இஸ்திரிப் பெட்டியைக் கொடையளித் தார்கள். நலிந்த மாணவர் ஒருவருக்கு ரூ.3,000 வழங்கப் பட்டது.

## RC சோனெபட் அர்டென்ட் — RID 3012

ஆர்ய கன்யா உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 100 மாணவர் களுக்கு மின் கற்றல் தொடுகணினிகள் (ரூ.14 லட்சம்) வழங்கப்பட்டன.



## RC துறையூர் பெருமாள்மலை — RID 3000



கோயம்புத்தூர் சங்கரா கண் மருத்துவமனை ஆதரவுடன் நடைபெற்ற கண் முகாமில் 320 பேர் பரிசோதிக்கப் பட்டார்கள், 127 பேர் கண் புரை அறுவைச் சிகிச்சைக்குத் தேர்ந் தெடுக்கப்பட்டார்கள்.

## RC வால்டெய்ர் — RID 3020

துர்காபுரம் என்ற மீள்குடியேற்றப் பகுதியில் இந்தச் சங்கம் நடத்திய புற்றுநோய் விழிப்புணர்வு, பரிசோதனை முகாமில் 70க்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்றார்கள்.




## RC தில்லி ஒக்லா சிட்டி — RID 3011



புதிய ரோட்டரி ஆண்டின் தொடக்கத்தை முன்னிட்டு, 14 உறுப்பினர்கள் பங்களிப்பில் 700க்கும் மேற் பட்டோருக்கு உணவு, இனிப்புகள் வழங்கப்பட்டன.

## RC மாலேகாவ்ன் மிட்டவுன் — RID 3030

PDG ராஜேந்திர பாம்ரே தலைமையில் மாணவர்களுக்கு பள்ளி பைகள் வழங்கப் பட்டன.



# செய்திகள்

## RC ஜலந்தர் ஈஸ்ட் — RID 3070



PDGகள் U S காய், S P S குரோவர், பர்ஜேஷ் சிங்கால் முன்னிலையில், வெள்ளத்தால் பாதிக்கப் பட்டோருக்கு மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டன.

## RC கங்கா பிஜ்னோர் — RID 3100



புதிய அலுவலர்களை நிறுவும்போது, மக்களுக்கு ரோட்டரி சின்னத்துடன் மழை அங்கிகள் வழங்கப்பட்டன.

## RC நஹான் சங்கினி — RID 3080



தொழிலாளர் குடும்பத்தில் கேட்டல், பேசுதல் குறைபாட்டுடன் பிறந்த ஒரு குழந்தைக்கு கேட்கும் கருவி (ரூ.65,000) கொடையளிக்கப் பட்டது.

## RC கான்பூர் இன்டஸ்ட்ரியல் — RID 3110

கனிஷ்க் மருத்துவமனையில் DG விவேக் கார்க் ஒரு மருத்துவ முகாமைத் தொடங்கி வைத்தார். மருத்துவமனை ஊழியர்கள், ரோட்டரியன் களுக்குக் கட்டுப் படியாகும் விலையில் நலப் பராமரிப்பு வழங்க ஓர் MoUல் கையொப்பமிடப்பட்டது.




## RC பட்டியாலா மிட் டவுன் — RID 3090



ரோட்டரி பவனில் நடைபெற்ற தையல் பயிற்சியை நிறைவுசெய்த நலிந்த குடும்பப் பெண்கள் 13 பேருக்குத் தையல் இயந்திரங்கள் கொடையளிக்கப் பட்டன.

## RC புணே ஹெரிட்டேஜ் — RID 3131

ஒரு பன்னாட்டு நல்கையின் வழியாக, புணேயில் உள்ள சஸ்ஸூன் மருத்துவ மனையின் குழந்தைகள் அறுவைச் சிகிச்சைப் பிரிவுக்கு ரூ.29 லட்சம் மதிப்புள்ள கருவிகள் கொடையளிக்கப்பட்டன.



## RC கர்கம்ப் — RID 3132



இந்தச் சங்கம் நடத்திய கண் புரை அறுவைச் சிகிச்சை முகாமில் 47 நோயாளிகள் புணேயில் உள்ள H V தேசாய் கண் மருத்துவ மனையில் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

## RI மாவட்டம் — 3182



கற்றல் குறைபாடுகளைக் கொண்ட குழந்தைகளை அடையாளம் காண்பதற்கு இந்த மாவட்டம் நடத்திய 3 மாதப் பயிற்சியில் 60 ஆசிரியர்கள் பங்கேற்றார்கள். இதற்கென ரோட்டரி சங்கங்கள் நடத்திய ஒரு நாள் பயிலகங்கள் 2,000 ஆசிரியர்களுக்குப் பலனளித்தன.

## RC பாம்பே பெனின்சுலா — RID 3141



சங்கத்தின் ‘எல்லாருக்கும் கல்வி’ என்ற திட்டத்தின்கீழ், வறுமைப் பின்னணி யிலிருந்து வருகிற 200 குழந்தை களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

## RC கோயம்பத்தூர் மெரிடியன் — RID 3201



பெற்றோரை இழந்த 9ம் வகுப்பு மாணவி ஒருவருக்கு ரூ.10,000 காசோலை வழங்கப் பட்டது. இவர் பள்ளிப் படிப்பை முடிக்கும்வரை இவருடைய கட்டணங்களை இந்தச் சங்கம் ஏற்றுக்கொள்ளும்.

## RC சாட்டிலைட் சிட்டி நவி மும்பை — RID 3142



நெருலில் உள்ள ஆனந்தாசிரமம் என்ற முதியோர் இல்லத்தில், பாவனா மருத்துவமனை ஆதரவுடன் முதியோருக் கான மருத்துவ முகாம் நடத்தப் பட்டது.

## RC ஈரோடு நார்த் — RID 3203



சங்க உறுப்பினர் K சிவக்குமார் 13 மாணவர்களுக்கான பள்ளிக் கட்டணம் ரூ.1.5 லட்சத்தைக் கொடை யளித்தார். இதில் பலன் பெறும் இருவர் தேசிய நிலைக் கராத்தே வீரர்கள் ஆவர்.

# செய்திகள்

## RC தெள்ளிச்சேரி — RID 3204




தெள்ளிச்சேரி பேருந்து நிலையத்தில், ஆதரவற்ற 100 பேருக்கு உணவும் புதிய உடைகளும் வழங்கப்பட்டன. இந்தத் திட்டத்தை AG C P கிருஷ்ணகுமார் ஆதரித்தார்.

## RC குவஹாத்தி சவுத் — RID 3240

அஸ்ஸாம் மாநிலச் சட்டச் சேவைகள் அமைப்புடன் இந்தச் சங்கம் இணைந்து நடத்திய ஒரு திட்டத்தின் கீழ், காம்ரூப் மாவட்டங்களைச் சேர்ந்த 25 மாற்றுத் திறனாளிகளுக் குச் சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன.



## RC ஆலப்பி கிரேட்டர் — RID 3211



DGN டினா அந்தோனி முன்னிலையில் முதியோர் இல்லங்களுக்கு மூன்று அலையி யற்றிகள் (ரூ.1.5 லட்சம்) கொடையளிக் கப்பட்டன.

## RC ஜாம்ஷெட்பூர் ஈஸ்ட் — RID 3250

மாவட்ட TB மையத்தில் உள்ள TB நோயாளிகளுக்கு ஊட்டச்சத்துத் துணைப் பொருட்கள் (தலா ரூ.500) வழங்கப் பட்டன. இது ஆறு மாதங்களுக்குத் தொடரும்.



## RC மெட்ராஸ் மவுன்ட் — RID 3232




விரிசுருள் சிரை (varicose veins) நோய் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்கு வதற்கு இந்தச் சங்கம் நடத்திய வாக்கத்தானில் 100க்கும் மேற்பட்ட காவல் துறையினர் பங்கேற்றார்கள்.

## RC ராய்ப்பூர் — RID 3261

ராய்ப்பூரில் உள்ள சௌ குசும் டாய் டப்கெ தொடக்கப் பள்ளியில் 80 மாணவர் களுக்குக் குறிப்பேடுகள், எழுதுபொருட்கள் வழங்கப்பட்டன.



ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்



TCA ஸ்ரீனிவாச ராகவன்

# ஒரு வினோதமான கேள்வி

இந்தியாவில் ஓட்டுநர்கள் ஏன் அடிக்கடி கார் ஹாரன்களை அடிக்கிறார்கள்? ஆல்பர்ட் ஐன்ஸ்டீனால் கூட விளக்குவதற்கு கடினமாக இருக்கும் அண்டவியல் மர்மங்களில் இதுவும் ஒன்றாகும். இருப்பினும் இதை நான் உங்களிடம் கேட்கிறேன். அதற்கு காரணம் சில நாட்களுக்கு முன்பு டெல்லி மற்றும் குர்கானை இணைக்கும் நெடுஞ் சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. NH48 என்ற அந்த நெடுஞ்சாலை 15 ஆண்டுகளுக்கு முன்பு நகர சாலையாக மாறிவிட்டது. ஒரு நாளைக்கு 200,000 வாகனங் களுக்கு மேல் போக்குவரத்து அச்சாலையில் உள்ளது.

அங்கு அனைவரும் போக்குவரத்து நெரிசலில் சிக்கிக் கொண்டனர். பெரும்பாலான ஓட்டுநர்கள் எரிபொருளைச் சேமிப்பதற்காக தங்கள் இயந்திரங்களை அணைத்துவிட்டனர், அதனால் அங்கே பொதுவாக அமைதி நிலவியது. ஆனால் அதை கெடுக்கும் விதமாக, ஏதோ போக்குவரத்தை நகர்த்த உதவுவது போல் நினைத்து சில முட்டாள்கள் ஹாரன்களை அடித்துக் கொண்டிருந்தனர். சிறிது நேரத்திற்குப் பிறகு, நான் மிகவும் எரிச்சலடைந்தேன், எனக்கு அருகில் இருந்த ஒரு டெம்போ ஓட்டுநரிடம் சென்றேன். ஹாரன் அடிப்பது உதவாது என்று தெரிந்தும் ஏன் அதை செய்கிறாய் என்று கேட்டேன். சாதாரணமாக, அவர் என்னை துஷ்பிரயோகம் செய்திருப்பார் மற்றும் எனது வேலையே பார்க்கும்படி என்னிடம் சொல்லியிருப்பார், ஆனால் எனது மெருகூட்டப்பட்ட, பண்பட்ட மற்றும் படித்த பழக்கவழக்கங்கள் அவரை சாந்தமாக்கியது என்று நினைக்கிறேன். அவரது பதில் தோற கடிக்க முடியாத ஒன்றாக இருந்தது. “சாஹிப், பின் ஹாரன் எதற்கு?”என்றார். சரிதானே. நீங்கள் விரக்தியில் இருக்கும் போது அடிக்காவிட்டால் அந்த ஹாரன் எதற்காக?

இது எனக்கு 60 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு விஷயத்தை நினைவுப்படுத்தியது. நாங்கள் ஜான்சிக்கு அருகில் வண்டியில் சென்று கொண்டிருந்தபோது சாலையோரக் கடையில் தேநீர் அருந்துவதற்காக நின்றோம். அங்கே ஒரு சில கிராமவாசிகள் அமர்ந்து தேநீர் அருந்திக் கொண்டிருந்தனர். அவர்கள் தேநீரை சாஸர்களில் ஊற்றி சத்தமாகச் உறிந்தார்கள். அவர்களில் ஒருவரிடம், என் மெருகூட்டப்பட்ட, படித்த மற்றும் பண்பட்ட தொனியில், ஏன் அவ்வாறு செய்கிறார் என்று கேட்டேன். டெம்போ ஓட்டுநர்கள் 60 ஆண்டுகளுக்குப் பிறகு என்ன பதில் சொன்னார்களோ அது தான் அவரது பதிலும்: குடிப்பதற்கு இல்லை என்றால் பின் சாஸர் எதற்கு?

இந்த மனப்பான்மை கிராம வாசிகள் அல்லது மோசமாக சமூகமயமாக்கப்பட்ட டெம்போ ஓட்டுநர்களுக்கு மட்டும் சொந்தமான தில்லை. தில்லியிலிருந்து பம்பாய் செல்லும் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் ஒன்றில் எனக்குப் பின்னால் அமர்ந்திருந்த சக பயணி பணிப்பெண்ணை அழைக்கும் மணியை அடித்துக் கொண்டே இருந்தார். அந்த இரண்டு மணி நேர பயணத்தில் குறைந்தது 10 முறையாவது அவரை அழைத்திருப்பார். நாங்கள் விமானத்தில் இருந்து இறங்குவதற்கு காத்திருந்தபோது, ஏன் பணிப்பெண்ணை அழைத்தார் என என் வழக்கமான பாணியில் கேட்டேன். அவரது பதிலும் தேநீர் அருந்துபவர்கள், டெம்போ ஓட்டுநர்கள் பதிலைப் போலவே இருந்தது, பின் அவள் எதற்காக அங்கு இருக்கிறாள்? நல்ல கேள்வி: அவள் எதற்காக அங்கு இருக்கிறாள்?

இந்தியாவில் எல்லா இடங்களிலும் இந்த மாதிரியான விஷயங்களை நாம் பார்க்கலாம். எனது முதல் வேலையில், எனது சக ஊழியர்கள் இருவர் அலுவலக ஸ்டேஷனரி மற்றும் பேனாக்களை மகிழ்ச்சியாக தங்களுடன் எடுத்து சென்றதை கண்டேன். இது திருட்டு என்று நான் எதிர்ப்பு தெரிவித்த போது, அவர்களும் அதே பதிலை சொன்னார்கள்: பிறகு ஏன் அதை அங்கே வைத்திருக்க வேண்டும்? உண்மையில், STD அழைப்பு இருந்த காலக்கட்டத்தில் ஊழியர்கள் அலுவலக செலவில் நண்பர்கள் மற்றும் உறவினர்களை அழைப்பது வழக்கம். அதைப் பற்றி கேட்டால், பின் அது எதற்கு அங்கு இருக்கிறது என்று கேட்பார்கள்.

இந்த அயராத கேள்வி இப்போது என் சொந்த வீட்டில் மீண்டும் எழுந்துள்ளது. எனது பேரன் விடுமுறைக்கு என் வீட்டிற்கு வந்திருக்கிறான், என் மனைவி அவனை பிஸியாக வைத்திருக்க ஒரு கலர் கிரேயன் செட் மற்றும் ஒரு ஸ்லேட்டைக் கொடுத்தார். அவன் விரைவில் சுவர்களில் வரைய முயற்சிக்கத் தொடங்கினான். அதிர்ஷ்டவசமாக, கிரேயன்களை பறிமுதல் செய்ததால் அவன் அதிக சேதம் செய்யாமல் நான் தடுத்தேன். அவன் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தான், நான் அவனை அமைதியாக இருக்கச் சொன்ன போது, அவன் அதே கேள்வியைக் கேட்டான்: பின் சுவர்கள் எதற்காக இருக்கிறது? சரி தானே?

சாஸர்களை ஒழித்ததன் மூலம் டீக்கடைகள் அந்த பிரச்சனை யிலிருந்து விடுபட்டன. இப்போது வாகனங்களில் ஹாரன்களையும் விமானங்களில் அழைப்பு மணியையும் ஒழிக்க வேண்டிய நேரம் வந்து விட்டது என்று நினைக்கிறேன். என் பேரனிடம் இருந்த கலர் கிரேயன்களை எடுத்து வழி காட்டியுள்ளேன். என்னை நம்புங்கள், இது மிகவும் எளிதானது.■

ADVT.




CREATE HOPE in the WORLD




# Vignana Ratham

A Project by Rotary Club of Virudhunagar Dist-3212

## Science Made Easy

Rotary

The idea of Vignana Ratham is to kindle student's interest towards Science. It is to aid students in understanding the magic of Science through creative and fun-filled experiments. RID 3212 wondered how good it would be to take the best brains to institutions in all corners of Tamil Nadu. As a result, a tie-up was made with Parikshan Trust of an Indian Scientist, Dr. Pasupathy. Mr. Arivarasan, Mr. Naveen Kumar and Mr. Satheesh were assigned to travel in Vignana Ratham and meet students of various schools every day. Numerous students benefit out of this programme and we believe that we have seeded the fervor required to bring out a Scientist from every institution we visited.

As on June 30, 2023

- No. of Schools visited **334**
- No. of Colleges visited **12**
- No. of Days travelled **253**
- No. of Students benefitted **108306**
- No. of Teachers Who have attended the program **4695**





Vignana Ratham

Project Concept Dr. Pasupathy

Do you want to have Vignana Ratham Travelling to a school in your town/ city/ District? We would love to partner with you in the mission. Get in touch with us.



Project Chairman
AG. Rtn. R.Vadivel
94422 48586

IDHAYAM
PROMISE OF HEALTH AND HAPPINESS

LEKHA ads/Sep 23/Rotary-2

Registered No. TN/CCN/677/2022-2024
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month. Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month.

ADVT.

